சக்தி

மாத வெளியீடு

சித்திரபானு ௵
ஐப்பசி ௴

-/4

கதைகள்

மனைவி
படையெடுப்பு
மந்திரவாதி ராஜா
ரயிலில் சிரஞ்சீவி
டோரா

★

கட்டுரைகள்

தீக்குளித்தவர்
செல்லாக்காசு
கறையான் படிப்பு
அமெரிக்க தூதர்

★

பாடல்கள்

காவேரி
குருவி நில்

★

குறிப்புக்கள்

கதம்பம்
உடம்பும் மருந்தும்
காலச் சுழல்
புத்தக உலகம்

"மஞ்சள் பூசா மேனி மங்கும்"

M211,N36,2
N42.7.2

பழங்காலத்து சமாச்சாரம் அது — இப்போதோ எழில் வாய்க்க இன்னும் உறுதியான - வழி உள்ளது -

பண்டு பண்டையிலிருந்தே தலைமுறை தலைமுறையாக பற்பல விசித்திரமான சௌந்தரிய முறைகள் பழக்க வழக்கத்தில் ஏற்பட்டுள்ளன. அதுகள் ஓரளவு கற்றறிவு—ஓரளவு கற்பிதம்—ஆகவே, பூர்ண பலன் அளித்து வரவில்லை. இக்காலத்தெல்லாம் நமக்காக அதியாச்சரியமான ரசாயன சாலைகளில் எத்தனையோ மேதாவிகளான விஞ்ஞானிகள் ஆரோக்கியத்தின் நுட்பங்களையும் அழகின் ரகசியங்களையும் கூர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். தற்பயனாக விளைந்தவையே பாண்ட்ஸ் க்ரீம்கள். மங்கையர் எழிலுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியின்படி எதெது இன்றியமையாததோ அந்த அம்சங்களெல்லாம் இந்த க்ரீம்களில் உள்ளன. உபயோகித்துப் பாருங்கள். உங்களுக்கே உண்மை விளங்கும்.

பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் : காலையிலும் மாலையிலும் முகத்தில் மெதுவாகத் தடவி, சொற்ப நிமிஷங்கள் அப்படியே வைத்திருந்து, பின்பு அழித்துக் களையுங்கள் அது மயிர்க்கண்களினுடை சென்று அங்குள்ள எண்ணெய் அழுக்குகளைக் கரைத்துப் போக்கி, சருமத்திற்கு அவசியமான வளப்பத்தையும் அளிக்கிறது.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் : எண்ணெய்ப் பொருள்கள் இல்லாததாகையால் பகல்நேரத்தில் தாராளமாக உபயோகிக்கலாம். அது சருமத்திற்கு மென்மையைக் கொடுத்து வெயில் காற்று முதலியவற்றிலிருந்து பாதுகாக்கிறது.

பாண்ட்ஸ் க்ரீம்



திரு. எம். எம்.
தண்டபாணி தேசிகரின்

ஜெமினி நந்தனார் பாட்டுக்களை

எச். எம். வி. ரிகார்டுகளில் கேட்டு ஆனந்தியுங்கள்

தீபாவளிக்கு

- நவநாகரீகமான ஜவுளிகள்
- மனங்கவரும் டிஸைன்களில்
- சகாயமான விலைக்கு

கிடைக்கும்

ஒருமுறை எங்கள் ஷோ ரூமுக்கு விஜயம் செய்து உங்களுக்குத் தேவையான ஜவுளி தினுசுகளை வாங்கி திருப்தி யடையுங்கள்.

★

சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்,

பீஸ்குட்ஸ் டிபார்ட்மெண்ட்,

கல்லுக்கட்டி வடகரை, காரைக்குடி

தந்தி: LOTUS. டெலிபோன் 41

சித்திரபானு
மலர் 7

சக்தி

MUNICIPAL BLDGS CH

ஐப்பசி
இதழ் 2

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

பழைய நாடகம்

மீண்டும் பழைய நாடகந்தான்.

காமன்ஸ் சபையிலே அமெரி பேசிவிட்டார்; ஆட்லீ பேசிவிட்டார். லார்டு சபையிலே டேவான்ஷயர் டியூக்கும் லார்டு ஸைமனும் பேசிவிட்டார்கள். இந்தியா இருந்தபடியேதான் இருக்கும் என்பதுதான் அந்தப் பேச்சுக்களின் பலன். "இந்தியா சுதந்திரம் பெறச் செய்வதே நம் நோக்கமென்று நாம் வாக்களிக்கிறோம். அதற்கு இந்தியாவே சாட்சி; உலகமே சாட்சி" என்கிறார் அமெரி. ஆனால், "உலகமே, நீ கிட்ட வராதே; இந்தியா எங்கள் சொந்த விஷயம்" என்றும் அவர் கர்ஜிக்கிறார்.

"இந்திய தேசியக் காங்கிரஸ் துஷ்டக் குழந்தை. அதைச் சரியானபடி தண்டித்தே விடுவோம். அதோடு பேரம் பேச மாட்டோம்; பிறரும் பேசவிடோம். பிற கட்சியார் ஒன்று சேர்ந்து எங்களிடம் வரட்டும்; எங்கள் கட்டளைப்படி நடக்கட்டும். அதுதான் சுதந்திரத்துக்கு வழி" என்பதே அவர் பேச்சின் கருத்து. அதற்குச் சரியான ஒத்து ஊதிவிட்டார் உதவிப் பிரதம மந்திரி ஆட்லீ.

உதவி இந்தியா மந்திரி டேவான்ஷயர் டியூக், லார்டு சபையில் 'எஜமான் குரலை' ஒழுங்காகக் கொடுத்து விட்டார். இந்திய விஷயம் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பெருங் கூச்சலைக் கிளப்பியிருக்கிறது போல் இருக்கிறது. "ஐயோ! துரோகக் காங்கிரஸை நாங்கள் அடக்கிக் கொண்டிருக்கிறோம். இடையிலே இப்படி ஓயாக் கூச்சல் போடலாமா? எழுதலாமா? நலிந்து வரும் காங்கிரஸுக்கு கன்றே இதெல்லாம் தைரியம் கொடுக்கும்" என்பதே அவர் துயரம். "சுதந்திரம் அளித்தால், இந்த உபத்திரவம் எல்லாம் தீர்ந்துவிடுமே?" என்றால், "அது தான் தயாராய் இருந்து கொண்டே யிருக்கிறதே? அவர்கள் அல்லவோ எல்லாரும் ஒத்து வரமாட்டேன் என்கிறார்கள்" என்ற பழைய பல்லவியைப் பாடுகிறார். ஒத்துவந்தால் நிச்சயம் சுதந்திரம் உண்டா என்பதை மட்டில்

உறுதி கொடுப்பார் யாரு மில்லை.

ஸைமன் பிரபுவும் அதே பல்லவியைத்தான் பாடி யிருக்கிறார். "நாம் தான் சொல்லி விட்டோமே. ஸர் கிரிப்ஸ் திட்டமே இறுதியானது. ஆறு மாதத்துக்கு முன் அதை அமெரிக்கா போற்றிற்று. அப்போது சரியான அது இப்போதும் சரியாய்த் தானே இருக்கும்" என்கிறார் ஸைமன். அதோடு தளுக்காகக் கீழ்நாடுகளைப் பற்றி ஓர் அவதூறையும் கூறியிருக்கிறார். "கீழ் நாட்டு பஜார்களில் பேரம் பேசுவது போல நாம் பேசுவதில்லை" என்கிறார். தாங்கள் கறார் விலைக் காரர்களாம்! அப்படியே இருக்கட்டும். ஆனால், இந்தக் கீழ்நாட்டு 'பஜாருக்கு' வந்த பின், அந்த வேலையையும் கொஞ்சம் பார்க்க வேண்டியதுதானே? தவிர, கீழ் நாட்டு 'பஜா'ரில் ஏற்கனவே தாங்கள் நடத்திய எத்தனையோ பேரங்களைத் தான் அவர் ஏன் மறக்க வேண்டும்?

பிரிட்டிஷ் சர்க்காரின் மனோபாவம் இப்படி யிருக்கையில், ராஜாஜி, பத்திரிகைக்காரர்களை யெல்லாம் கூட்டி, ஏதோ சமரசத் திட்டம் கூறுகிறார். 'தேசீய சர்க்கார் அவசியம்' என்கிறார். அதன் இடையே அவர் சொல்லி யிருக்கும் ஒரு யோசனைதான் மிக அபாயமானது. செத்துப்போன சமஷ்டித் திட்டத்துக்கு உயிர் கொடுக்கத் தக்க யோசனை அது. மாகாணச் சட்டசபைகளுக்கு நேர்முகமான தேர்தலும், மத்தியச் சட்டசபைக்கு மாகாணச் சட்டசபைகளின் மூலம் தேர்தலும், சமஷ்டிச் சட்டப்படி நடத்தலா மென்கிறார் ராஜாஜி! அவர் பாகிஸ்தான் வாதியல்லவா? அதை எப்படி ஸ்தாபிப்பது என்பதிலேயே அவர் மூளை அதிகமாய் ஈடுபட்டிருப்பது போல் தோன்றுகிறது. மொத்தத்தில் வேறு வேறு வேஷங்களில் எல்லாரும் பழைய நாடகத்தையே நடிக்கிறார்கள். விடிவு எப்போதோ?

வந்தனமும் வேண்டுகோளும்

நாங்கள் எதிர் பார்த்ததற்கு மேல் பல மடங்கு ஆதரவு 'சக்தி'க்குக் கிடைத்திருக்கிறது. அன்பர்களுக்கும் ஏஜண்டுகளுக்கும் நமது மனப்பூர்வமான வந்தனம் உரியதாகும்.

இருபது பிரதிகள் பெற்றவர் ஐம்பது பிரதிகளும் நாற்பது பிரதிகள் பெற்றவர் நூறு பிரதிகளுமாய்க் கேட்கிறார்கள்; புதிது புதிதாய்க் கேட்டும் வருகிறார்கள். "என் மீது உங்களுக்குப் பொறுமையா? போன மாதம் கேட்ட பிரதிகள் ஏன் அனுப்பவில்லை?" என்று கூட ஓர் ஏஜண்டு கோபமாய் எழுதுகிறார்! ஆனால், இம்மாதம் திடீரென்று அப்படி மிக அதிகமான பிரதிகள் 'ஸப்ளை' செய்யச் சாத்தியப்படவில்லை. ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் கொஞ்சம் குறைத்து, கூடிய வரையில் எல்லாருக்கும் திருப்திகரமாக அதிகப் பிரதிகள் 'ஸப்ளை' செய்ய முயன்றிருக்கிறோம். அப்படியும் ஏற்படக் கூடிய சொற்ப அசௌகரியத்துக்கு ஏஜண்டு நண்பர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்.

மானேஜர்,

'சக்தி'

காலச்சுழல்

சிந்து அலங்கோலம்: சிந்துப் பிரதம மந்திரி அல்லா பக்ஷ், பிரிட்டிஷ் சர்க்காரின் இந்தியக் கொள்கை பிடிக்காமல் தம்முடைய பட்டங்களைத் துறந்தார். உடனே வைஸிராய்க்குக் கோபம் வந்தது. கவர்னருக்குத் தாக்கீது அனுப்பினார். கவர்னரால் அல்லா பக்ஷ் டிஸ்மிஸ் செய்யப் பட்டார். கதவு திறந்ததோ இல்லையோ, ஸர் ஹிதாயதுல்லா உள்ளே நுழைந்து விட்டார் பிரதம மந்திரி பதவி ஏற்க. ஆனால், ஹிந்து மந்திரிகளுக்கோ ஹிந்துக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. முஸ்லீம் லீக்கர்களின் ஆதரவை ஹிதாயதுல்லா பெற்றதும், அந்த லீக்கர்களைச் சீறினார் ஜனாப் ஜின்னா. ஹிதாயதுல்லா, 'பழய குருடி கதவைத் திறடி' என்று லீக்கிலே சேர்ந்து விட்டார். "அவர் லீக்கில் சேர்ந்ததால், எங்கள் நிலைமை மாற வில்லை" என்கிறார்கள் ஹிந்து மந்திரிகள். இதை யெல்லாம் பார்க்கையில், உத்தியோகத்துக்காக எதையும் செய்யத் தயாரான கும்பல் நாட்டில் இன்னு மிருக்கிறது என்பது தான் நன்றாய் விளங்குகிறது.

* *

யார் குற்றம்: இந்தியாவைப் பற்றி அமெரிக்காவில் பிரமாதப் படுவதாய்த் தோன்றுகிறது. இந்தியாபற்றி அமெரிக்காவிலிருந்து வரும் அபிப்பிராயங்களில் பெரும்பாலானவை, ஸிலோனில் கிடைக்கின்றன; இந்தியாவில் கிடைக்கவில்லை. ஸிலோனுக்கு வரும் அதே ராய்ட்டர் செய்திகள் இந்தியாவுக்கு ஏனோ வருவதில்லை. "அட்லாண்டிக் சாஸனம் இந்தியாவுக்கும் பிரயோகமாகும்" என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் சொன்னாராம். அந்தச் செய்தி இந்தியாவுக்கு வந்து சேரவேயில்லை. இதற்கெல்லாம் யார் காரணம்? இந்திய சர்க்காரா? பிரிட்டிஷ் சர்க்காரா? அல்லது ராய்ட்டரே தானா? யாராயிருந்தாலும் சரி; உண்மையை ஒளித்தால் சந்தேகந்தான் வளரும்.

* *

ரோமெல் கதை: லிபியாப் போர் முனையில் ஜெர்மன் தளபதியான ரோமெலைப்பற்றி ஒரு ரஸமான நிகழ்ச்சி சொல்கிறார்கள். ரோமெலின் துணை உத்தியோகஸ்தர் ஒருவர் ரோமெலோடு அவருடைய காரிலே சென்றாராம். ரோமெலுக்கு இது பிடிக்கவில்லை. "இந்தக் காரில் என்ன இவ்வளவு ஜன நெருக்கமாய் இருக்கிறது!" என்று திடீரென்று ரோமெல் கூச்சலிட்டார். "இரண்டு நிமிஷத்துக் கெல்லாம் அந்த இடத்திலே நான் காயத்தோடு கீழே கிடந்தேன். கார் போயே போய் விட்டது; காரை நிறுத்தாமலே என்னைக் கீழே தள்ளி விட்டு ரோமெல் போய் விட்டார்" என்கிறார் அந்தத் துணை உத்தியோகஸ்

தர். அடடா! என்ன அசுரத் தனம் அந்த ரோமெலுக்கு!

*   *

மகனின் பதில்: பார்லிமெண்டு, இந்திய அசெம்பிளி இவைகளில் போலவே மைசூர் அசெம்பிளியி லும் ஒரு விவாதம் நடந்தது. 'காங்கிரஸ்காரரை' விடுதலை செய்ய வேண்டுமென்று வாதித் தார்கள் சில அங்கத்தினர்கள். சட்ட மந்திரி திரு. எ. வி. ராம நாதன் பதில் சொன்னார். காங் கிரஸ்காரர் அமைதியாய் இருப்ப தாய் உறுதி கொடுக்க மாட்டார் கள் என்று தாம் அஞ்சுவதாக அவர் சொன்னார். அதற்கு ஓர் உதாரணமும் கூறினார். "நீ அமைதியாய் இருக்க இணங்கு. உன் சார்பில் சர்க்காருக்கு நான் பிணை கொடுக்கிறேன்" என்று ஒரு தந்தை, சிறையிலுள்ள தம் மகனுக்கு எழுதினாராம். பையன் இவ்வாறு பதில் தந்தானாம்: "உங்கள் காலம் மலையேறிவிட் டது. என்னை உங்களுக்குத் துளிக் கூடத் தெரியவில்லை. ஜெயிலிலேயே இருக்க, நான் தயார்." "வாலிபர்களின் மனோ பாவம் இப்படி இருக்கிறது" என்று வருந்துகிறார் மந்திரி. அவருக்கு என்ன வயதோ?

*   *

சில்லறை இல்லையா: சில்லறை கள் கிடைக்காமல் எங்குமே அடிக்கடி தொந்தரவு ஏற்படு கிறது. கல்கத்தாவில் சமீபத்தில் இம்மாதிரி தொந்தரவு வந்ததாம். பஸ்காரர்கள் ஒரு யுக்தி செய்தார் கள். ஏராளமாய்க் காலணாத் தபால் தலைகள் வாங்கிக் கொண் டார்கள். பிரயாணிகளிடம் அந் தத் தலைகளைச் சில்லறையாய்க் கொடுத்தார்கள். பிரயாணிகளும் அவற்றை பஸ்காரர்களுக்கு அடுத்த தவணைப் பிரயாணத்தில் திரும்பக் கொடுத்தார்கள். இப் படியாக, காலணாத் தபால் தலை கள், காலணாக்களாகப் பயன்படு கின்றனவாம். சர்க்கார் ஒரு ரூபாய் வரையிலும் காகித நாண யம் போடலாமென்று நினைத்தார் கள்; கல்கத்தாவாசிகள் காலணா வரையில்கூடக் காகித நாணயம் போடலாம் என்று நிரூபிக்கிறார் கள் போல் இருக்கிறது!

*   *

கழுதைகள் யோகம்: சில டில்லிக் கழுதைகளுக்கு வந்த யோகத்தை என்னவென்று சொல்கிறீர்கள் போங்கள். சிவ குமார் என்ற ஓர் ஆசாமி, 'மாக்ஸ்வெல்' என்று பெயர் எழுதிய அட்டையைத் தன் மேலே ஒட்டிக் கொண்டானாம். வைஸிராயின் 11 இந்திய அங்கத் தினர்களின் பெயர்கள் ஒட்டிய 11 கழுதைகளை ரோட்டிலே ஓட் டிக் கொண்டு ஊர்வலங் கிளம்பி விட்டானாம்! கோர்ட்டிலே விசா ரணை நடந்தது. கழுதைகளும், தங்கள் விருதுகள் இல்லாமல் அங்கே காட்சி யளித்தனவாம். சிவகுமாரும் மற்றும் இருவரும் அவ் வாறு மாதக் காவல் தண் டனை அடைந்தார்கள். கழுதை கள் சொந்தக்காரனிடம் திரும் பிச் சென்றன. 'சட்டம் ஒரு கழுதை' என்பார்கள். கழுதை களே சட்டத்தை மீறினால், என்ன செய்வது? ஆகையால், அவற் றைத் தண்டிக்காமல் விட்டது ரொம்ப நியாயம் என்று யாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

கதம்பம்

அழாதே: இரண்டு சிறுவர்களுக்குள் சண்டை. ஒருவன் மற்றவன் மீது ஏறி உட்கார்ந்து, அவனை மொத்திக் கொண்டே, தானும் அழுது கொண்டிருந்தான். வழியிலே போன ஒருவன். "நீ தானே அடிக்கிறாய்; ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான். "கொஞ்ச நேரத்துக் கெல்லாம் அவன் எழுந்திரிச்சு என்னை அடிச்சிடுவானே, ஊம்ம்ம்ம் ஊஹூம்ம்ம்" என்று ராகம் நீட்டினான் சிறுவன்! காங்கிரஸ்காரர் இம்மாதிரி மனோபாவம் கொண்டதால் தான் ஸர் கிரிப்ஸின் தூது முறிந்தது என்கிறார் நம் தற்காப்பு மெம்பர் ஸர் பிரோஸ்கான் நூன். அதாவது, "நாங்கள் நிர்வாகப் பதவிகள் எற்கிறோம். ஆனால், எங்கள் மெஜாரிட்டி முடிவுப்படி வைஸிராய் நடக்க வேண்டும்" என்று அவர்கள் கேட்டது தவறாம்! எல்லாரும் 'பிரோஸ்கான் நூன்'களாகவே ஆகிவிட முடியுமா? காங்கிரஸ் 'அசடு'கள் மாதிரியும் உலகில் சிலர் இருக்கத்தான் இருப்பர்.

*   *

ஆனந்தச் சாவு: ஸில்ஹெட்டில் தீனாப்பூரில் சர்க்கார் கண்டிராக்டர் ஒருவருக்கு 18 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்ததாம். அந்த அடியிலேயே மற்றொரு கண்டிராக்டு, சர்க்காரிடமிருந்து ஒரு லட்ச ரூபாய்க்கு வந்தது. கண்டிராக்டு நமூனாவில் கையெழுத்திட்டவுடனே, அவருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லையாம்; அப்படியே மாண்டு விட்டாராம். இப்பேர்ப்பட்ட மனிதருக்கு, முன்னே கிடைத்த 18 ஆயிர ரூபாயையும் கூடவே அனுப்பி விடுவது தான் நியாயம். ஆனால், இவர் போயிருப்பது நரகத்துக்கா, மோட்சத்துக்கா என்று தீர்மானிப்பது தான் கஷ்டம்.

*   *

மாமியார் சம்பிரதாயம்: பஞ்சாபில் மருமகள் வீட்டில் மாமியார் ஒன்றும் சாப்பிட மாட்டாள். சாப்பிட நேர்ந்தால், சாப்பிட்ட பொருளின் மதிப்பைப் போல் பல மடங்கு கிரயம் கொடுத்து விடுவாள். ஒரு மாமியார் தன் மருமகள் வீட்டில், அரையணா ஸோடா சாப்பிட்டாள்; உடனே ஒரு ரூபாயை மருமகளிடம் நீட்டினாள். இதைப் பார்த்த ஸர் டி. விஜயராகவாச்சாரியார் "நானாயிருந்தால், என்ன செய்வேன், தெரியுமா? இந்த மாதிரி மாமியார் கிடைத்தால், அவளை என் வீட்டுக்கு அழைத்து நிறைய நிறைய உபசாரம் செய்வேன்" என்கிறார். அப்புறம் அந்த மாமியாருக்கு மருமகன் என்றாலே, சிம்ம சொர்ப்பனமாய்த் தான் இருக்கும்!

*   *

பத்திரிகைத் தந்திரம்: டென்மார்க்கில் கீவ் என்ற நகரில், ராணுவ தளவாடத் தொழிற்

சாலை ஒன்றின்மீது பிரிட்டிஷ் விமானங்கள் குண்டு வீசின.

"பிரிட்டிஷ் குண்டு ஒரே ஒரு பசுவின் மீதுதான் விழுந்தது. வேறொரு சேதமுமில்லை" என்று ஜெர்மன் பிரசார மந்திரி கெப்பல்ஸ் சொன்னார். பத்திரிகைகளும் இப்படியே செய்தி வெளியிட வேண்டுமென்று கண்டிப்புச் செய்தார்.

உள்ளூர்ப் பத்திரிகை ஒன்று, அப்படியே செய்தது: "ஒரு பசுவின் மீது பிரிட்டிஷ் குண்டு விழுந்தது" என்றுதான் அது செய்தி வெளியிட்டது. ஆனால், அதைத் தொடர்ந்து, "அந்தப் பசு நான்கு நாள் வரையில் எரிந்துகொண்டிருந்தது" என்றும் குறிப்பிட்டது!

* *

அம்பேத்கர் டம்பம்: இந்திய அசெம்பிளியில் பேசுகையில், "நான் ஒரு சட்டக் கல்லூரியில் அஞ்சு வருஷங்கள் புரொபஸராக இருந்தவனுக்கும்" என்று பெருமை அடித்துக் கொண்டாராம் டாக்டர் அம்பேத்கர். இதைப்பற்றி, டில்லி 'நேஷனல் கால்' நிருபர் எழுதுகிறார்: "டாக்டர் அம்பேத்கர் அஞ்சு வருஷங்கள் சட்டக் கல்லூரிப் புரொபஸரா யிருந்திருக்கலாம்; அதை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால், என் அபிப்பிராயம் என்ன என்றால், அதே கல்லூரிக்கு அவர் திரும்பிச் சென்று இருபத்தஞ்சு வருஷங்கள் மாணவனா யிருக்க வேண்டும். அதுவே அவருக்கு நல்லது."

ஆகாகான் ரகஸ்யம்: சுமார் ஒரு கோடி இந்திய முஸ்லீம்களுக்கு மத குருவாயும் தலைவராயும் விளங்கியவர் ஆகாகான். சில காலத்துக்கு முன் வரையில், பிரிட்டிஷ் சர்க்காரிடமும் பிரபுக்களிடமும் அபாரச் செல்வாக்கு அவருக்கிருந்தது. பிரான்ஸ் விழுந்தவுடனே, தம் அளவற்ற செல்வத்தை யெல்லாம் பிரிந்து, ஸ்விட்ஜர்லாந்தில் அழகுமிக்க தம் பிரஞ்சு மனைவியுடன் வசிக்கிறார். பாரிஸில் ஆகாகான் மாளிகை தான் நாஜிகள் கூடுமிடமா யிருக்கிறதாம். இந்தியாவில் மகாத்மாஜியைக் கைதியாய் வைத்திருக்கும் இடமும் ஆகாகானின் மாளிகையே என்கிறார்கள்! என்ன விசித்திரம்!

* *

ஆபாசம் மாறியது: அமெரிக்காவில் கெண்டகியில் ஒரு வாலிபன் கப்பற் படையில் சேர வந்தான்.

அவனது புஜத்திலே ஒரு நிர்வாணப் பெண்ணின் உருவம் பச்சை குத்தப் பட்டிருந்தது. "இந்த ஆபாசம் கூடாது" என்று சொல்லி, அவனை அதிகாரிகள் நிராகரித்து விட்டார்கள்.

இரண்டு நாளைக்கெல்லாம் அவன் மறுபடியும் விண்ணப்பத்தோடு வந்தான். அவனது புஜத்தில் இருந்த பெண், இப்போது ஒரு ஜிட்டி அணிந்திருந்தாள்: அவனைப் படையில் சேர்த்துக் கொண்டார்கள். "சாதுர்யமும் சுறுசுறுப்பும் உடைய பையன்" என்று அவனைப் புகழவும் புகழ்ந்தார்கள்!

"இந்தியா நமது பிரச்னை" என்கிறார் வெண்டல் வில்கீ இக் கட்டுரை பூர்த்தியான பின்பு. அவரது முயற்சியால் இந்தியப் பிரச்னை தீருமா?

அமெரிக்க தூதர்

'ஸரஸி'

பிரமாதமான முயற்சியிலே தோல்வி அடைந்தவர்கள், மன மொடிந்து ஓய்ந்து உட்கார்ந்து விடுவார்கள். இது தான் பெரும்பாலும் வழக்கம். தோல்வியையும் வெற்றியாக மாற்றக் கூடிய ஆற்றல் மிகச் சிலருக்குத் தான் உண்டு. அமெரிக்க தூதர் வெண்டல் வில்கீ அப்படிப்பட்ட ஒருவராவார். ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவி என்பது அற்ப சொற்பமானதல்ல. அதற்கு நடந்தது தேர்தல். வில்கீ தோற்றார்; ரூஸ்வெல்ட், அமெரிக்காவின் சம்பிரதாயத்துக்கே விரோதமாக, மூன்றாவது முறையும் தலைவராக, வெற்றி பெற்றார். வில்கீ திரைக்குப் பின்னே சென்று விடவில்லை; உலக அரங்க மேடையில் மேலும் மேலும் முன்னணிக்கு வந்து, சர்வ தேசத்து மக்களின் மனதையும் கவர்ந்து விட்டார். அமெரிக்காவின் அடுத்த குடியரசுத் தலைவர் அவர் தான் என்று, திடமான சோதிடங்களும் கூறப்படுகின்றன. சமீபத்தில் கிழக்கே பதின் மூன்று நாடுகளுக்கு, அவர் திக் விஜயம் செய்து திரும்பியுள்ளார். அந்தச் சுற்றுப் பிரயாணத்தின் விளைவாக, நேச நாடுகளின் மனப் போக்கும் யுத்தத்தின் விதியுமே மாறுதல் பெறக் கூடும் என்று கூடத் தோன்றுகிறது. சைனாவிலே சில இடங்களை அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்ததைச் சில நாளைக்கு முன் விட்டுக் கொடுத்தனவே, இந்தத் தாராளச் செயல் கூட, வில்கீ விஜயத்தின் பலனாய்த் தான் இருக்குமோ என்று நினைக்க வேண்டி யிருக்கிறது.

வெண்டல் வில்கீ, பரம்பரையால் ஜெர்மானியர். ஆனால், வில்கீக்கு ஜெர்மானியரின் ஆக்ரமிப்பில் இன்று மகா வெறுப்பு. அவருடைய பெற்றோரின் நான்கு பாட்டன்களும் 1848-ஆம் வருஷப் புரட்சியின் போது ஜெர்மனியை விட்டு ஓடியவர்கள். வில்கீயின் தந்தை 1885-ஆம் வருஷம் இண்டியானா மாகாணத்தில் எல்வுட் என்னுமிடத்தில் குடியேறினர். அவரது வீட்டுப் புத்தகசாலையில் 6,700 புத்தகங்கள் உண்டு. தந்தை தம் குழந்தைகளை எழுப்புவதென்றால், மாடிப் படியில் வந்து நின்று கொள்வாராம்; ஷேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து எடுத்த சில வசனங்களை உரக்கக் கூச்சல் போடுவாராம்!

ஹெர்மான் வில்கீக்கு, வெண்டல் வில்கீ, 1892-ஆம் வருஷம் பிப்ரவரி 18உ மூன்றாவது மகனாகப் பிறந்தார். ஹெர்மானுக்கு இரண்டு பெண்களும் நான்கு

பிள்ளைகளுமாக ஆறு குழந்தைகள். வெண்டல் வில்கீயின் தந்தை ஒரு வக்கீல்; தாயும் ஒரு வக்கீல்! இண்டியானுவில் முதல் பெண் வக்கீல், வெண்டல்வில்கீயின் தாய் தான். பெற்றோரைப் போலவே மகனும் ஒரு வக்கீலானுர். தகப்பனும் மகனுமாகச் சேர்ந்து முதன் முதலாக ஒரு வழக்கை வென்றுர்கள். அது ஒரு ரஸமான வழக்கு. 'மறியல் செய்யாதே' என்ற ஒரு தடை உத்தரவைச் சில தொழிலாளர்கள் மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அந்தத் தொழிலாளர்களின் சார்பாக ஆஜராகித்தான், வென்றுர்கள் தந்தையும் மகனும்.

சென்ற மகா யுத்தம் வந்தது. ஜெர்மானியரிடம் வில்கீ குடும்பத்துக்கு எப்போதுமே வெறுப்பு. அந்த வெறுப்பினுல் உந்தப்பட்டார் வெண்டல் வில்கீ. யுத்தத்தில் அமெரிக்கா கலந்துகொண்ட மறுநாளே, வில்கீ படையில் சேர்ந்து விட்டார். லெப்டினண்டு வில்கீ, பிரஞ்சுப் போர் முனைக்குப் புறப்படுமுன், எடித் என்னும் பெண்ணை மணந்து கொண்டார். யுத்தத்தில் 325-ஆவது பீரங்கிப் படையில் சேர்ந்து சேவை செய்தார். 1919-ஆம் வருஷ-அமெரிக்காவுக்குத் திரும்பினுர். பயர்ஸ்டன் டயர் அண்டு ரப்பர் கம்பெனியின் வக்கீல்களுள் ஒருவராகப் பதவி பெற்றுர். அப்போது அவருக்கு வயது 27. வில்கீ போய்ச்சேர்ந்துகொண்ட அந்தக் கம்பெனி, சில வருஷங்களுக்குள்ளே மும் மடங்கு தொழில் வளர்ச்சி பெற்றது. அக்ரான் மாகாணத்தில் உள்ள ஒஹியோவுக்கு வந்து, காமன் வெல்த் அண்டு ஸதெர்ன் மின்சாரக் கார்ப்பொரேஷனுக்கு வக்கீல் பதவி ஏற்றுல், வில்கீயின் வருமானத்தை மூன்று மடங்கு பெருக்குவதாகச் சொல்லி, அந்தக் கம்பெனியார் 1929-ஆம் வருஷ அழைத்தார்கள். இவரும் அப்படியே அதில் பதவி ஏற்றுர். 1933-ஆம் வருஷ ஜனவரி-மீ 24வ, அந்தக் கம்பெனியின் தலைவர் பதவியே இவருக்குக் கிடைத்து விட்டது. ஆனுல், இந்த மாதிரி தனிப்பட்டவர்கள் சேர்ந்து பணங் கொள்ளையடிக்க உபயோகிக்கும் மின்சாரக் கம்பெனிகளை யெல்லாம் சீர்திருத்த அல்லது நசுக்க வேண்டுமென்று நீண்ட நாளாய்க் கங்கணங் கட்டிக் கொண்டிருந்த, பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டும்

செய் அல்லது செய்யச் செய்

ஒரு வேலையைச் செய்யப் புகுந்தால் 'இது என்னுல் செய்யமுடியுமா? அல்லது என் சக்திக்கு மீறியதா?' என்று யோசித்துப் பார். உனக்குள்ள சக்தியைத் தெய்வம் கொடுத்த கருவியாகக் கருதி உபயோகப் படுத்து. உன் சக்திக்கு மீறியதாகத் தோன்றினுல் நீ பின் நின்று, தகுந்த வேருெருவனைச் செய்ய விடு. இப்படி விடுவது அறத்துக்கு மாருயின் விடவேண்டாம். இல்லையேல், வேருெருவனைத் துணையாகக் கொண்டும் உன் அறிவைக் கொண்டும், அவனையும் செய்யச் செய்து உன்னுலானதும் செய்து, உலகத்துக்கு உபகாரமாகச் செய்து முடிப்பாய். தனியாகவாவது துணை கொண்டாவது நீ செய்யும் எக்காரியமும் உலகத்துக்குப் பயன்படுமாறு இருக்கவேண்டும்.

—மார்க்கஸ் ஔரேலியஸ்.

டிரேட் மார்க்

டிரேட் மார்க்

விலைகள்

மாறுதல்

இல்லை !

தங்க மெடலும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசு பெற்ற

ஒரிஜினல்

கல்ச்சர் வைரங்கள்

தோடு சைஸ்
0-8-0

பேஸரி சைஸ்
0-6-0

"Original" Inventor

(REGD. NO. 1983)

[கேட்லாக் இனாம்]

M. ராமசாமி செட்டி & கோ.,

ஷராப் வியாபாரம் :: திருச்சினாப்பள்ளி

ஒரிஜினல் டைனமோ கல்ச்சர் வைரங்கள்

தோடு சைஸ் அணா 12

பேஸரி சைஸ் அணா 10

ஸி. ஏ. க்யூ.—

உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க



நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்புளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குண மேற்படுகிறது. டாக்டர்கள் எல்லோரும் க்ஷேமமான, நிச்சய குணமளிக்கும் மருந்தென்று இதை சிபார்சு செய்கிறுர்கள். ஜலதோஷம், மார்ச்சளி, இன்புளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

"ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

ஒரு புட்டி விலை ரு. 1 :: மாத்திரைகள் ஒரு டப்பா அணு 14

ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்

சென்னை

மருந்து வியாபாரிகள்

மார்ச்சுமீ 4உ அமெரிக்கக் குடியரசுத் தலைவராகி விட்டார்.

மின்சாரக் கம்பெனிகளின் ஊழல்களைப் போக்கிச் சீர் திருத்துவதில் வில்கீக்கும் சம்மதம்தான். ஆகையால், தமது கம்பெனியில் பலவிதமான சீர்திருத்தங்களைத் தாமே செய்தார். ஆயினும், ரூஸ்வெல்ட்டின் புதிய பொருளாதாரத் திட்டங்கள் நடவடிக்கைக்கு வந்ததும், அவை மின்சாரக் கம்பெனிகளைச் சீர்திருத்த மாட்டா, அடியோடு தான் நசுக்கும் என்று வில்கீ கண்டார். ரூஸ்வெல்ட்டின் திட்டங்களால் தமது கம்பெனி பாதிக்கப்பட்டபோது, கோர்ட்டுக்கும் ஓடினர். கோர்ட்டிலே 'கேஸ்'தோற்றது. ஆனால், மேடையிலும் பத்திரிகைகளிலும் 'கேஸ்' நடத்தத் தொடங்கி விட்டார். தமது இணையற்ற வாத வன்மையால், தேச மெங்கும் பேராதரவு சம்பாதித்து விட்டார். அவருடைய வாத வன்மையைக் கண்டு பிரமிக்காதவர் கிடையாது. இரண்டொரு வருஷத்துக்குமுன், உயர்தர சர்க்கார் அதிகாரி ஒருவரை, ஒரு வாதம் நடத்த யாரோ சிலர் அழைத்தார்களாம். "எனக்குப் பதில் சொல்ல, வில்கீ வரக் கூடாது. அப்படியிருந்தால்தான் நான் விவாதம் செய்ய வருவேன்" என்று அவர் நிபந்தனை போட்டாராம். அவ்வளவு பயம்!

வில்கீ ஒரு போதும் கைக்கடிகாரம் எதுவும் வைத்திருப்பதில்லை. சொந்தத்துக்கு மோட்டார்க் கார் வாங்கியது மில்லை. ஆபீசுக்கு வாடகைக் காரில் தான் செல்வார். ஒரு காலத்தில், ஒரு காரைத் தாமே ஓட்டிக் கொண்டிருந்தார். ஆனால், எப்போது பார்த்தாலும் பின் ஸீட்டில் இருப்பவர்களுடன் திரும்பித் தர்க்கம் செய்து கொண்டே தான் ஓட்டுவது வழக்கம். அதனால், ஒரு சமயம் கார் குழியில் போய் விழுந்துவிட்டது. அன்று முதல், சொந்தக் காரையே விட்டு விட்டார். பெரிய கோட்டுகளில் தான் அவருக்குப் பிரியம். ஆனால், அதன் பொத்தான்களை மாத்திரம் போட்டுக் கொள்ளப் பிடிவாதமாய் மறுத்து விடுவார். சுலபத்தில் மயிர் வெட்டிக் கொள்ள மாட்டார். மொத்தத்தில் 'கரடி'க் கோலம் தான்! "என் தொழிலுக்கு இப்படித் தான் நான் வேஷம் போட வேண்டியிருக்கிறது" என்பார் அவர். ஆனால், பள்ளிக் கூடத்தில் படிக்கையிலேயே, இவ்விதந்தான் அவர் திரிவாராம். அதோடு, வாயிலே ஒரு கத்தை புகையிலையையும் கதுப்பில் அடக்கிக் கொண்டிருப்பாராம். சரித்திரம், பொருளாதாரம் இவை பற்றிய புத்தகங்களைப் படிப்பதில் அவருக்கு மட்டில் அல்ல, அவருடைய மனைவிக்கும் மிகுந்த பிரியம். வாரத்துக்கு ஒரு புத்தகம் விகிதம் வில்கீ படித்து விடுவார்.

1940-ஆம் வருஷ குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு, தங்கள் கட்சி அபேட்சகராக, வெண்டல் வில்கீயை 'ரிபப்ளிக்கன்' கட்சியார் தேர்ந்தெடுத்தார்கள். மாஜி குடியரசுத் தலைவரான காலஞ்சென்ற டாப்ட் என்பவரின் மகன் ஸெனேட்டர் **ராபர்ட் டாப்ட்,**

பிரபலஸ்தர் தாமஸ் டியூவி, ஸெனேட்டர் வாண்டன்பெர்க் இம் மூன்று நிபுணர்களையும் விட்டுவிட்டு, வில்கீயை அந்தக் கட்சி தேர்ந்தெடுத்ததே ஓர் அதிசயமாகும். அவ்வளவு தூரம் 'திடு, திடு' என்று வில்கீ செல்வாக்கில் ஓங்கிவிட்டார். 1940 நவம்பரில் தேர்தலும் நடந்தது. வில்கீ தோற்றுவிட்டார். ரூஸ்வெல்ட்தான் வென்றார். என்றாலும், ஓட்டுக்கணக்குகளைப் பார்க்கும்போது, வில்கீயின் அபாரமான செல்வாக்குப் புலனாகும். ரூஸ்வெல்ட் 2,72,41,949 ஓட்டுக்கள் பெற்றார். வில்கீ 2,23,27,226 ஓட்டுக்கள் பெற்றார். ரூஸ்வெல்ட்டை ஆதரித்தவர் சுமார் $2\frac{3}{4}$ கோடி என்றால், வில்கீயை ஆதரித்த மக்களின் தொகையும் அற்பசொற்பமன்று. $2\frac{1}{4}$ கோடி வாக்காளர்கள் அவரை ஆதரித்திருக்கிறார்கள். தேர்தல்காலத்தைவிட, அதற்குப் பின்னே அவருடைய கீர்த்தி மேலோங்கித்தான் வருகிறது.

தமது மனதுக்கு நியாயமெனப்பட்டதை ஒளிக்காமல் அப்படியே பேசும் குணமுடையவர் வில்கீ. "உங்களுக்கு இஷ்டமானால் எனக்கு ஓட்டுச் செய்யுங்கள். இல்லையானால், நாசமாய்ப் போங்கள். ஆனால், நான் மட்டில் உங்கள் நலத்துக்கே பாடுபடுவேன்" என்றே அவர் பிரசங்கித்தார். தேர்தலில் தோற்ற மறுநாள், அவர் தேசமக்களுக்கு விடுத்த செய்தி இது: "என்னைப் பின்பற்றிய கோடிக்கணக்கான மக்களுக்கு இதுவே என் வேண்டுகோள்: நமது வேலையைத் தொடர்ந்து நடத்துங்கள்; நமது பாதுகாப்பைப் பூர்த்தி செய்யுங்கள்; நமக்குள்ளே அமெரிக்காவில் இருக்கும் குரோதங்களையெல்லாம் ஒழியுங்கள். அப்போதுதான், சுதந்தர மக்களின் ஆட்சி உலகிலே நிலைபெறும்; மீண்டும் இந்த மண்ணிலே பரவும்."

தேர்தலின்போது, ரூஸ்வெல்ட்டைத் தூஷித்து, வில்கீ ஒரு வார்த்தையும் பேசவில்லை. மூன்றாம் முறையும் தலைவர் பதவிக்கு அவர் அபேட்சிப்பது தவறு என்று வேறு பலர் சொன்னதை, வில்கீ ஒப்புக்கொள்ளவில்லை. "நீங்கள் மூன்றாம் முறையும் தேர்தலுக்கு நிற்கத்தான் வேண்டும்" என்று ரூஸ்வெல்ட்டிடம் சொன்னவர்களில், வில்கீயும் ஒருவராவார். தேர்தல் முடிந்த உடனே,

மகானும் சிவாஜியும்

மகான் ராமதாஸைச் சிவாஜி மகாராஜா தரிசித்து விடை பெற்றபோது, தேங்காய், நீர், மண், கூழாங்கல், குதிரை எரு ஆகியவற்றைச் சன்மானமாய், ராமதாஸ் கொடுத்தனுப்பினார். சிவாஜியின் தாய் ஜீஜிபாய் வெறுப்புடன் "இதென்ன சன்மானம்?" என்று கோபப்பட்டாள். ஆனால், ராமதாஸின் உட்கருத்தைச் சூட்சும புத்தியுடன் சிவாஜி விளக்கியதும், தாய் ஆனந்தமடைந்தாள். சிவாஜி சொன்னதாவது: "நீரும் மண்ணும், நான் மகாராஷ்டிரத்தை ஜயிப்பேன் என்று குறிக்கின்றன. கூழாங்கல், கோட்டை கட்டி அவற்றைக் காப்பேன் என்று குறிக்கும். குதிரை எரு, குதிரைப் படையாலேயே என் வெற்றிகள் கிட்டும் என்பதற்கு அடையாளமாகும்."

ரூஸ்வெல்ட்டிடம் நேசமாகவே வில்கீ நடந்து கொண்டார். தலைவர் ரூஸ்வெல்ட்டின் செய்தியைத் தாங்கிய ஒரு கடிதத்தோடு, அமெரிக்காவின் தூதராக பிரிட்டனுக்குச் சென்று, ரூஸ்வெல்ட்டின் கடிதத்தைச் சர்ச்சிலிடம் வில்கீ கொடுத்தார். பிரிட்டனின் யுத்த முயற்சிகளை யெல்லாம் நேரிலே பார்வையிட்டு விட்டு, தாய்நாடு திரும்பினர்.

மீண்டும் அமெரிக்கத் தூதராகவே சமீபத்தில் வில்கீ, கீழ் நாடுகளுக்கு விஜயம் செய்தார். பதின்மூன்று நாடுகளில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்தார். இந்தியாவுக்கும் அவர் வரப் போவதாகப் பிரஸ்தாபங்களும் மறுப்புக்களும் மாறி மாறி வந்தன. ஆனல், "இந்தியா எங்கள் சொந்த விஷயம். பிறர் அதில் தலையிடக்கூடாது" என்று உறுமும் அமெரி துரைமகனும் பிரிட்டிஷ் சர்க்காரும் சுதந்தரவாதியான அவரை இங்கேவர எப்படி அனுமதிப்பார்கள்? அவர் இங்கே வராத காரணம் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. உண்மை எப்படியாயினும் சரி; தம் கீழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் அறிந்து கொண்ட ஓர் உண்மையை, அவர் உலகறிய அம்பலம் செய்துவிட்டார். "எங்கே போனலும் நேச அரசுகள் வெல்ல வேண்டுமென்றே ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆயினும், யுத்தத்துக்குப் பின்பிறரும் சுதந்தரமாய் இருக்க வேண்டு மென்பதில் நேச அரசுகளுக்கு இஷ்டமுண்டா என்பதைத்தான் அவர்கள் சந்தேகிக்கிறார்கள்" என்று வில்கீ கூறுகிறார். "யுத்தத்துக்குப் பின் சீனவில் ஒரே ஓர் அடி நிலத்தைக் கூட அந்நியர் ஆளக் கூடாது" என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவைப் பற்றியும் அவர் அப்படியே சொல்லி யிருப்பார். ஆனல், அமெரி கும்பலுக்காகத் தான் பயந்திருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் சரி, தம் அபிப்பிராயங்களை ஜனதிபதி ரூஸ்வெல்ட்டுக்குத் தெரிவிப்பதோடல்லாமல், தம் தேசத்திலும் சர்வதேச அரங்கத்திலும் தாராளமான தம் கருத்துக்களின்படி உழைக்கக் கூடியவர் வில்கீ. ஆகையால், அவருடைய சமீபக் கீழ்நாட்டு விஜயத்தினல், யுத்தப் போக்கும் வருங்கால உலக நிலையும் — முக்கியமாகக் கீழ்நாடுகளின் சுதந்தரப் பிரச்சினையும்— சிறப்பான மாறுதல் அடையும் என்று நாம் நம்பலாம்.

★

யுத்த ஞாபகச் சின்னம்

சென்ற மகா யுத்தத்தில் மாண்ட ராணுவக் கோவேறு கழுதை ஒன்றின் ஞாபகார்த்தச் சின்னம் பிரான்ஸில் இருக்கிறது. அதில் எழுதி யிருப்பதாவது: "இந்தக் கோவேறு கழுதை மாக்கி, தன் ஆயுட்காலத்தில் உதைத்துத் தள்ளியவர்களின் ஜாபிதா வருமாறு: இரண்டு கர்னல்கள், நான்கு மேஜர்கள், பத்து காப்டன்கள், 24 லெப்டினண்ட்கள், 42 ஸார்ஜண்டுகள், 432 ஸோல்ஜர்கள், ஒரு மில்ஸ் குண்டு."

முதல் குண்டை உதைத்ததோடு பரகதி அடைந்து விட்டது போலிருக்கிறது! இல்லையானல்.....,

நேரக் கட்டுப்பாடு

'உல்லாஸி'

பிப்......பிப்......பிப் இது அகில இந்திய ரேடியோ. உள்நாட்டுப் பாதுகாப்புப் 'புரோகிராம்.' அக்டெம்பர் மாதம் தொதினொருவது தேதி ஞாயிற்றுக் கிழமைத் திட்டம். நமஸ்காரம். செய்தி அறிக்கை.

இன்றைய மிக முக்கியமான செய்தி என்னவென்றால், உள்நாட்டுப் பாதுகாப்பு அணியில் நம்முடைய ஏற்பாடுகளில் செய்யப்பட்டுள்ள புரட்சிகரமானதொரு சீர்திருத்தமேயாகும். நம்முடைய தேசீய வசதிகளை வெகு ஜாக்கிரதையாக ஆழ்ந்து கூர்ந்து மேன்மைதங்கிய நம் சர்க்கார் ஆலோசித்துப் பார்த்ததன்மேல், நேரத்தைக் கட்டுப்பாடு செய்ய ஒரு தீர்மானம் செய்துள்ளார்கள். இந்தத் தீர்மானத்தினால் செய்யப்படும் உத்திரவானது, ஒரு சிறு விலக்குக்கு உட்பட்டு, உடனே அமுலுக்கு வருகிறது. அதாவது வாரத்தில், ஆறு மணி நேரம் மட்டில் இந்த உத்திரவுக்கு விலக்காகும்: மீதி நேரம் முழுவதும் இந்த நிமிஷத்திலிருந்து சர்க்காரின் அதிகாரத்துக்கு உட்படுகிறது. வார விலக்கு நேரம் போக மிஞ்சிய நேரம் முழுவதையும், சர்க்கார் தங்களுக்கு யுக்தமான வழிகளிலெல்லாம் உபயோகித்து, பற்பல யுத்த முயற்சிகளுக்கும் ஈடுபடுத்த, இந்தத் தீர்மானத்தின் மூலம் பரிபூர்ண அதிகாரம் பெறுகிறார்கள்.

இந்தத் திட்டத்தின்படி 'நேரக் கட்டுப்பாடு' ஆபீஸ் ஒன்று உடனே ஸ்தாபிக்கப்படும். அந்த ஆபீஸின் பிரதிநிதிகளான அதிகாரிகள் இந்தப் பாரத தேசத்தின் ஒவ்வொரு பிரஜையையும் நாளை மத்தியானம் ஒரு மணிக்குள் (பழைய மணியல்ல; புது மணி) வந்து பார்வையிட்டு, சட்டப்படி ஒரு மருந்தை அவருக்கு அல்லது அவளுக்கு, தற்காப்பு ரெகுலேஷன் x x 9 செக்ஷன் ஏ. பி. உப செக்ஷன்படி 'இஞ்செக்ட்' செய்வார்கள். அதனால் அவருக்கு அல்லது அவளுக்கு ஒரு விதமான நிரந்தர மயக்கம் அல்லது சாசுவதமான தூக்கம் ஏற்படும். அதோடு கூடவே, ஒவ்வொருவருக்கும் நேரக் கட்டுப்பாட்டு நீலக் கூப்பன்கள் ஏராளமாய்த் தரப்படும். அந்தக் கூப்பனில் ஒன்றை ஒரு முறை நாவில் இட்டுக் கரைத்தால், ஆறு மணி நேரம்வரை விழிப்பு ஏற்படும். அப்போது யுத்த சேவைகள் புரியலாம். ஜாக்கிரதை! நீலக் கூப்பன்களை யுத்த முயற்சிக்கு

உணவுக் கட்டுப்பாடு, துணிக் கட்டுப்பாடு, வாகனக் கட்டுப்பாடுகள் யுத்த நாடுகளில் வந்துகொண்டிருக்கின்றன. இம்மாதிரியான ஒரு புதுமையான கட்டுப்பாடு நம் நாட்டில் வந்து விடுமானால், எவ்வளவு ஜோரா யிருக்கும் என்று கற்பனை செய்கிறார் கட்டுரையாளர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்பதைக் கவனிக்கவும். இதர காரியங்களுக்கு வேண்டுமானல், மஞ்சள் கூப்பன்களையே உபயோகிக்கவேண்டும். இன்ன முக்கியமான சொந்தக் காரியங்களுக்கு இவ்வளவு மஞ்சள் கூப்பன்கள் தேவை என்று சரியான முகாந்தரங்களுடனும் முக்கியமான ஆதாரங்களுடனும் நேரக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொண்டால், அவர் யுக்தானுஸாரம் மஞ்சள் கூப்பன்கள் அளிக்கவோ, அளிக்காமல் மறுக்கவோ, அளித்ததைப் பறிமுதல் செய்யவோ, மஞ்சளை நீலமாக்கவோ, நீலத்தை மஞ்சளாக்கவோ சகல அதிகாரமும் உடையவராவார். எக் காரணத்தை முன்னிட்டும், சில காரியங்களுக்கு—அதாவது போட்டிப் பந்தயங்களுக்கு விடை கண்டு பிடித்தல், தமிழ் பாடும் சினிமாக்கள் பார்த்தல், சர்க்காருக்கு அனுவசியமெனத் தோன்றும் பத்திரிகைகளைப் படித்தல் முதலியவைகளுக்கு—உபயோகிக்க உபரியான மஞ்சள் கூப்பன்கள் அனுமதிக்கப்படமாட்டா என்பதைக் கருராய் அறியவும்.

இந்த இரண்டுவிதமான கூப்பன்களைத் தவிர, ஒவ்வொருவருக்கும் வாரம் ஒன்றுக்கு ஆறு பழுக்காக் கூப்பன்கள் இலவசமாய் அளிக்கப்படும். ஒரு பழுக்காக் கூப்பனை நாவில் கரைத்தால் ஒரு மணி நேரம் மட்டுமே விழிப்பு ஏற்படும். அந்த ஒரு மணி நேரமும் முற்றிலும் பிரஜைக்கே சொந்தமாகும். அதை

யார் பிசகு?

வால்ட்டேர் என்ற பிரஞ்சுப் பேராசிரியரிடம் ஒரு சமயம் ஒரு நண்பர் இவ்வாறு சொன்னர்: "இன்ன நண்பர் உங்களைப்பற்றி எப்போதும் கேவலமாகவே ஏதாவது சொல்லுகிருர். நீங்களோ அவரைப் பற்றி எச்சமயமும் நல்லதே சொல்லுகிறீர்களே! இது ஏன்?"

வால்ட்டேர் சொன்ன பதில்: "ஒரு வேளை எங்கள் இருவர் சொல்லுமே பிசகாயிருக்கலாம்."

அவர் அல்லது அவள் தன் இஷ்டப்படி சொந்தமான எந்தக் காரியத்துக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். ஆனல், இந்தப் பழுக்காக் கூப்பன்களை அவரவர் அந்தந்த வாரத்திலேயே உபயோகித்துத் தீர்க்கவேண்டும். அடுத்த வாரத்துக்கு மிச்சம் வைக்கவோ, சேமிக்கவோ, பிறருக்கு வழங்கவோ, விற்கவோ, பிறரிடமிருந்து வாங்கவோ, வேறு எந்த விதமான வியாபாரங்கள் செய்யவோ, யுத்த இலாக்காவின் விலக்குப் பெற்றவர்களைத் தவிர, மற்ற எவருக்கும் உரிமை கிடையாது. அப்படிப்பட்ட வியாபாரங்கள் செய்யப்படும் பழுக்காக் கூப்பன்கள் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றிப் பறிமுதல் செய்யப்படுவதுடன், அந்த வியாபாரங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் கடுமையான சிறையோ, அபராதமோ, அல்லது இரண்டுமோ, எவ்வித விசாரணையுமின்றியே விதிக்கப்படும்.

நீலக் கூப்பன்களை யாரேனும் நாவில் கரையவிடாமல் விழுங்கி

விடுவார்களானல், அவர்கள் தேசிய யுத்த முன்னணிக்குப் பங்கமிழைத்த குற்றத்தைச் செய் தவர்களாகப் பாவிக்கப்பட்டு, தற்காப்பு ரெகுலேஷனின் கீழ்த் தண்டிக்கப் படுவார்கள். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எந்த வேலையைச் செய்யும்போ தாயி னும் எவரேனும் தூங்கி வழிந் தால், அவர் நீலக் கூப்பன்களைத் துர்விநியோகம் செய்தவராக மதிக்கப்பட்டு, ஏற்றபடி தண் டிக்கப்படுவார். தம் தம் பழுக் காக் கூப்பன்களை எப்படி வேண் டுமாயினும் எவரும் செலவழிக் கலா மென்ருலும், ஸினிமாக் கொட்டகையிலோ, ஓட்டலிலோ, சங்கீதக் கச்சேரியிலோ, தேசீயத் தினசரிகளின் ('தேசீய' என்ருல் 'சர்க்காரீய' என்று பொருள்) தலையங்கத்தைப் படிக்கையிலோ, ரேடியோவில் யுத்தப் பிரசங்கம் எதையேனும் கேட்கும்போதோ எவரேனும் தூங்கி விழுந்தால், அப்படித் தூங்கி விழுந்தது தாம் அனுபவித்த நிகழ்ச்சியினல் ஏற் பட்ட பரவசத்தின் பலனே என்று திருப்திகரமான முறை யில், தூங்கி விழுந்தவர் ருசுப்பிக் காதவரையில், நேரக் கட்டுப் பாட்டு விதிகளை அவமதித்துப் பங் கம் செய்தவராக அவர் மதிக்கப் பட்டு, பெருந்தொகை அபராதம் விதிக்கப்படுவார். அந்த அபராதத் தொகை செலுத்தப்படாத காலம்வரையில் மஞ்சள் கூப்பன் கள் அனுமதிப்பதை நிறுத்தி வைக்கப்படும்.

கடைசியாக ஒரு வார்த்தை.

இந்த நேரக் கட்டுப்பாட்டு ஏற் பாடுகள் தேசிய யுத்த முன்ன ணியை மிகவும் பலப்படுத்துவதற் காகவே செய்யப்பட்டிருக்கின் றன. இதில் சகல ஜனங்களும் ஒத்துழைப்பார்கள் என்று மேன்மை தங்கிய சர்க்கார் எதிர் பார்க்கிருர்கள். இது சம்பந்த மான விரிவான விவரங்கள் தெரியவேண்டுவோர், உடனே நேரக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரிக்கு எழுதவும். பதில் வரும் சமயத்தில் பழுக்காக் கூப் பனல் ஏற்பட்ட விழிப்போ டிருக்கவேண்டும். நீலக் கூப்ப னல் ஏற்பட்ட விழிப்பாயிருந் தால், அந்த நேரத்தை இந்தப் பதிலைப் படிக்க உபயோகிப்பது தவறு என்பதைக் கவனிக்கவும். குறிப்பிட்ட காரியங்களுக்கே உபயோகிக்கப்பட வேண்டிய மஞ்சள் கூப்பன்களும் இவ்வாறு துர்விநியோகப் படுத்தப்படக் கூடாது. அதையும் கவனிக்க வும்......இது அகில இந்திய ரேடியோ. செய்தி அறிக்கை முடிந்தது. அடுத்த நிகழ்ச்சி சில நிமிஷ நேரங்களில் ஆரம்ப மாகும்.......ஹூம்!.......ஹூம்! உம்ம்ம்ம்......

★

ஒரு பிரார்த்தனை

'ஈசா! தங்கள் அன்பு சரத்கால இரவுபோல் நிஷ்களங்கமாயும், தங்கள் நாமம் அன்று இரவு பிரகாசிக்கும் சந்திரனுயும் இருக்கிறது. பாக்கி எல்லாப் பெயர்களும் அன்று இரவு இருந்த நட்சத்திரங்களைப் போலத்தான். கடவுளே! தங்கள் ஊழியனின் மனதில் எப்பொழுதும் வசித்தருளுங்கள்.'—துளஸிதாஸர்

காவேரி

காவேரி கரைபுரளும்
    காட்சிதனைக் காண
    காட்சிதனைக் காண
ஆவலுடன் ஓடிவரும்
அவனியெல்லாம் கூடி

கருவடைந்த கட்டழகி
    காலடிகள் நோக
    காலடிகள் நோக
அருமையுடன் அசைந்துவரும்
அழகுநடைத் தோற்றம்

பெருமையுடன் பெருகிவரும்
    பெண்மையிந்தக் கோலம்
    பெண்மையிந்தக் கோலம்
பேரழகே ஆறெனப்பேர்
பெற்றுவரும் தோற்றம்

சிதறுநுரை திவலையுடன்
    சிவந்துவரும் வெள்ளம்
    சிவந்துவரும் வெள்ளம்
புதருடனே மரம்புதையப்
பெயர்த்துவரும் பள்ளம்

இருகரையும் எதிரொலிக்க
    இசையுடனே ஓடி
    இசையுடனே ஓடி
பெருகி வளம் தந்திடுமே
பெருங் கடலில் கூடி

அலைமோதும் நீர்ப்பெருக்கே
    ஆடிமாதச் சின்னம்
    ஆடிமாதச் சின்னம்
ஆறிதுவோ ஆழ்கடலோ
ஆடிவரும் வெள்ளம்

—சிட்டி

ஒட்டகத்துக்கு எந்த இடம் நேர் என்று சொல்ல முடியுமா? அதே போன்ற ஒரு மனித உருவ வர்ணனை இது.

ஆறுவிரல் நண்பர்

வி. ஆர். எம். செட்டியார்

நண்பர் ராமு நடந்து வரும் போதே, அன்பின் மிகுதியால் என்னைத் தழுவிக்கொள்ள வருபவர்போல, வேகமாய் நடந்து வருவார்; அன்பின் வேகத்தில் ஓட்டமாய் ஓடிவருவதும் உண்டு.

அவருடைய கண்களின் சக்தி அபாரம்: வலது கண் பூஜ்யம், இடது கண் இரட்டைக் கண்களின் கடமையையும் ஒருங்கே செய்யும் ஆற்றலுடையது. இடது கண், வலது கண்ணைப் பழிக்காமல் சிரிக்கும். இடது கண்ணில் புன்முறுவல் துடிக்கும்போது, முகமே பேரின்பத்தில் மூழ்கி விட்டதுபோலத் தோன்றும். வாயைத் திறந்து சிரித்து விட்டாலோ, பல்லின் மேல் வரிசை வெடித்த மேக மண்டலம்போலத் தெரியும்; அடி வரிசை, சுதந்தர உரிமையுடன் ஓயாமல் ஆடிக் கொண்டிருக்கும். வலது கண், பகலிலும் இரவிலும் ஒரே மாதிரி தான்; இடது கண், இரவில் சுத்த சூன்யமாகி விடுகிறது. இரவில் என் நண்பருக்கு, பவுண்டன் பேனவும் பூட்சின் கயிறும் ஒரேவிதமான உறுதியுள்ள சிருஷ்டியாகத்தான் தோன்றும். அழும்போது, வலது கண்ணும் அந்த உற்சவத்தில் கலந்து கொள்ளும்; வடியும் கண்ணீர், வாய்க்கால்வாய்க்காலாகப் பீறிட்டுக் கொண்டு ஓடும்; கன்னங்கள் நீரில் மூழ்கினாலும், கண்ணீர் நிற்கவே நிற்காது. சில சமயங்களில், தும்மிப் பெருமூச்சுவிட்டு அழும் போது, என் நண்பரின் முகம், துக்கத்தையே சுடர்வீசித் தூக்கிக் காட்டும்; தீ வர்த்திபோல் மின்னி மின்னி வட்டமிடும்.

நண்பரின் இரண்டு கால்களும் ஒத்துழைக்க மறுக்கும்; இடது காலைவிட வலது கால், ஓர் அங்குலம் அதிக நீளம். நடந்தால், குதிப்பதுபோலத் தோன்றும்; ஓடினால், ரஸ்தாவுடன் போரிடுவதுபோல் காணும். கால்கள் கபடமாகப் புரளும்போது, அவருடைய இடது கண்ணின் முன், ஒரு மோட்டார் குமுறிக்கொண்டு நிற்கும்; இதைக் கண்டு விலகத் தைரியமில்லாமல், பெருங் கூச்சலிடுவார். நெற்றியில் சந்தனப் பொட்டு மின்னும். விபூதியின் மூன்று வரிகளும் பொட்டுக்கு மேல் இன்பவெள்ளமாகத்தோன்றும்.

ராமுவின் தலை ஐம்பது சதவிகிதம் வழுக்கை. மழைத் துளிகள் தலையில் விழுந்தால், அவைகளைத் தடுக்க மயிர்க் காம்புகள் இல்லை. தலையில் எண்ணெய்

கண்ணகி

100-வது நாள்!

9-11-42

கீழ்க்கண்ட இடங்களில்

	பெங்களூர்	—	சிவாஜி
	மதுரை	—	சிந்தாமணி
	திருச்சி	—	வெல்லிங்டன்
	சேலம்	—	சென்ட்ரல்
	திருநெல்வேலி	—	ராயல்
	கும்பகோணம்	—	ராஜா
77-வது நாள்	கோயம்புத்தூர்	—	நியூ தியேட்டர்ஸ் கர்னுடிக்
46-வது நாள்	விருதுநகர்	—	ராதா டாக்கீஸ்
32-வது நாள்	திருப்பாப்புலியூர்	—	முத்தையா டாக்கீஸ்
32-வது நாள்	மாயவரம்	—	சுந்தரம் டாக்கீஸ்
32-வது நாள்	புதுக்கோட்டை	—	பிரஹதாம்பாள்
24-10-42 முதல்	திருவனந்தபுரம்	—	நியூ தியேட்டர்ஸ்
6-11-42 முதல்	பெஜவாடா	—	ஸ்ரீ ராமா டாக்கீஸ்
7-11-42 முதல்	ராபர்ட்ஸன்பேட் (K. G. F.)	—	மாடர்ன் டாக்கீஸ்

ஜூபிட்டர் & ஷண்முகா பிலிம்ஸ் தயாரிப்பு

விநியோகம் :

தி சௌத் இந்தியா பிக்சர்ஸ்

காரைக்குடி

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

சுகாதார முறையில் தகுந்த வசதிகள்
குறைந்த சார்ஜு
[மர வியாபாரம்]
M. செல்லய்யா பிள்ளை & கோ.

டிராவலர்ஸ் ரூமில்
தங்குங்கள்

மெயின் ரோட்டில் உள்ளது — — S. I. Ry. அவுட் ஏஜன்ஸி, பஸ் ஸ்டாண்டு, ஹோட்டல்கள், பஜார் எல்லாவற்றிற்கும் வெகு சமீபம்.

கோவிலூர் ரோடு, காரைக்குடி

நாதன்ஸ்

காப்பி

குணத்துக்கும்
மணத்துக்கும்
சிறந்தது

நாதன் & கம்பெனி
கல்லுக்கட்டி, — காரைக்குடி



கவியரசர்
ரவீந்திரநாத தாகூர்

இந்தியாவின் இணையற்ற கவிஞர் தாகூரின் வாழ்க்கை வரலாறும், அவர் புரிந்துள்ள அரிய சேவைகளும் இதில் விபரமாக எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் :
அரு. காந்தி அண்ணமலை
பி. ராஜேந்திரலால்

திரு. அண்ணமலை நேரே விசுவபாரதி குருகுலத்தைப் பார்த்தவர். திரு. ராஜேந்திரலால்ஹிந்தியைத் தாய்மொழியாக உடைய வட நாட்டவராயினும் தமிழை முறையாகக் கற்றவர். இருவரும் சேர்ந்து எழுதிய அரிய நூல் இது.

முன்பணம் அனுப்புவோருக்குத்
தபால் செலவு இனம்.

விலை ரூ. 0-12-0

சக்தி காரியாலயம்
மதுரை — காரைக்குடி

வாண்டையே இல்லாவிட்டாலும், இதாலிய சலவைக் கல்போல் தலையின் வழவழப்புத் தோன்றும். இவருக்கு முப்பது வயதில், தலை இந்தக் கோலம் எய்திவிட்டது. உறங்கும்போது, ராமுவின் தலை, ஒரு சிலையின் தலைபோல் காட்சியளிக்கும். ஆரம்பச் சிற்பிகள்கூட, அவர் தூங்கும்போது கண்டு களித்துப் புதுச் சிற்பங்களை எழுப்பச் சில நுட்பங்களை அந்தத் தலையிலிருந்து ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம்.

அவருடைய வலது கையில், அபூர்வமாக முளைத்திருக்கும் ஆறாவது விரல், ஓர் அதிசயப் படைப்பாகும். அந்த விரல், முடிச்சு முடிச்சாகப் பிறந்திருக்கிறது. நகம், விரலைவிட அகலமாக விரிந்திருக்கிறது. சாப்பிடும்போது, பிளேட்டில் இடித்துக் கொள்வது இந்த விரல்தான். இடித்துக் கொள்ளும்போதெல்லாம், என் நண்பர் அபூர்வமாகக் குரல் கொடுப்பார். பல ஸ்வரங்களில் அந்த வேதனைக் குரல் சங்கீத உலகத்தையே முற்றுகையிட்டு மூழ்கடித்துவிடும்.

அவருடைய சட்டைப் பொத்தான்கள், வெறும் தகரப் பொத்தான்கள்தான்; என்றாலும், சூரியன் உயர உயர, உடைந்த பீங்கான் துண்டுகள் போல, அவை தோன்றும். அவருடைய ஊற்றுப் பேனாவில், மையும் ஊறாது; கருத்தும் ஊறாது. மைப் பஞ்சத்தில் ஊற்றுப் பேனாவை, ஊமைப் பேனாவாகவே சட்டையில் அலங்காரமாக அவர் வைத்திருப்பது வழக்கம். ஒரு தடவை, ஊமைப் பேனா, நடு ரோட்டில் கீழே விழுந்து சிதறிப் போயிற்று; தங்க நிப்பு, முதுகு ஒடிந்து 'இரிடியத்தையும்' இழந்தது. உடைந்த பேனாவை உடனே எடுக்க முயன்ற ஆறு விரல் கை பூமியில் தவழ்ந்து தவழ்ந்து தத்தளித்தது; ஒரு பொடிகூடக் கையில் நிதானமாகச் சிக்கவில்லை; அத்தனை தூளையும் வாயு பகவான் வாரிக் கொண்டு போய்விட்டான்!

நண்பரின் பையிலோ கையிலோ, காசு இராது. மூக்குப் பொடியின் முனையில் மூக்குக் கர்ஜிக்க வேண்டுமானாலும், கடன் வாங்கித்தான் தீரவேண்டும். பெற்றோர்களின் அடிமையாக நீண்ட நாள் வாழ்ந்துவிட்டார். பிறவியின் துன்பம் தாங்க முடியாமல், ஆறாவது விரல் குறைய வேண்டுமென்று கடவுளை ஓயாமல் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்; அதற்கு இறைவன் இசைவானா?

★

வசூல் நிபுணர்

அமெரிக்காவைச் சேர்ந்த நியூ ஆர்லின்ஸ் மாகாணத்தின் ரேடியோ ஸ்டேஷன் மானேஜர், ஒழுங்காய்க் கட்டணம் செலுத்தாத வாடிக்கைக்காரர்களுக்கு, மிகச் சுருக்கமாகவும் அழகாகவும் ஒரு கடிதம் எழுதுகிறார்.

அந்தக் கடிதம்: "நண்பர்......அவர்களே! உங்கள் பக்கத்தில் உள்ள நல்ல வக்கீல் ஒருவருடைய பெயரைத் தயவு செய்து எங்களுக்குத் தெரிவிப்பீர்களா? உங்கள்மீது நாங்கள் வழக்குத் தொடர வேண்டியிருக்கிறது. இங்ஙனம், தங்கள் அன்புள்ள....."

C

அஸ்ஸாம் எல்லைப்புறத்தில் மொம்பா என்ற மலைஜாதியார் இருக்கிறார்கள். மயிர் அடர்ந்த காட்டெருதுகளின் ரோமத்தைக் கத்தரித்து, தாங்களே இப்படி நூற்று, நெய்த உடையைத்தான் இன்றும் அவர்கள் அணிந்து வருகிறார்கள்.

கறையான் படிப்பு

ந. சிதம்பரசுப்பிரமணியன்

ஒரு நாள், மகாபாரதப் புத்தகம் தேவையாய் இருந்தது. அதை நான் சாதாரணமாகத் தேடுவதே யில்லை. என் தாயார்தான் பெரும் பாலும் அதைப் பார்ப்பது வழக்கம். "அம்மா, பாரதம் எங்கே வைத்திருக்கிருய்?" என்று கேட்டேன். "மச்சுள் அலமாரியைப் பார்" என்ருள் தாயார். அப்பொழுதே எனக்குச் சந்தேகந் தான். இருந்தாலும் அலமாரியைத் திறந்தேன். பாரதப் புத்தகம் இருந்தது. ஆனல், அதன் மேல், ஒரு பெரிய கறையான் புற்றும் இருந்தது. மனம் பகீரென்றது. அப்புறம் யாரை வைது என்ன பிரயோசனம்?

வியாச பகவானை மகாபாரதம் எழுதும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் சொன்னுர்: "ஆகட்டும். ஆனல், நான் வேகமாகச் சொல்லிக் கொண்டு போவேன். யாராவது எனக்குச் சரியாகப் பின்தொடர்ந்து ஓலையில் எழுதி வரவேண்டும். எழுதும்பொழுதே, அர்த்த பாவத்தையும் கவனித்துச் சரிபார்த்து வர வேண்டும். அப்படிச் செய்ய யாரேனும் முன்வந்தால், சொல்கிறேன்." வியாசரின் வேகத்தைப் பின் தொடரக்கூடியவர் யார் என்று பக்தர்கள் யோசித்தார்கள். மூஷிக வாகனத்தையுடைய மகாகணபதிதான் சரியான பேர்வழி என்று கண்டு பிடித்தார்கள். கணபதியும் சம் மதித்தார். வியாசர் சொல்லி வந்தார்; கணபதி எழுதி வந்தார். கணபதியின் வேகத்துக்குத் தகுந் தாற்போல், வியாசரால் சொல்ல முடியவில்லை. அவர் வாய் திறக்கு முன் எழுதிவிடுகிருர் விநாயக பகவான். பார்த்தார் வியாசர். நடு நடுவே, மிகவும் கடினமான பதப் பிரயோகங்களையும், அர்த்த பாவங்களையுமுடைய சுலோகங்களை நுழையவிட்டார். கணபதி, அவைகளின் பொருளைக் கண்டு பிடித்து எழுதுவதற்குச் சிறிது நேரம் பிடிக்கும். அந்த நேரத்துக்குள் அநேகம் சுலோகங்களைத் தயாரித்துவிடுவார் வியாசர். இப்படி ஒரு கதை உண்டு.

ஆனல், பாரதம் பூராவுமே அம்மாதிரி கடினமான பாடல்கள் அமைந்த காவியமா யிருந்தால் தான் என்ன? கறையான்களுக்கு நிமிஷ வேலை. கணபதியினல், ஜீரணிக்க முடியாத எந்தக் காவியத்தையும், கறையான்கள் வெகு எளிதாய் ஜீரணிக்க முடியும். மகாபாரதத்தைக் கரைத்துக் குடித்த எப்பேர்ப்பட்ட பண்டிதரேயாயினும் கறையான்களுக்கு முன் நிற்க முடியுமா?

'எத்தனை புத்தகம் படித்திருக்கிறேன், தெரியுமா?' என்று மார்தட்டுவார்கள் சிலர். படிக்கிறபடி படித்தவர் அப்படிச் சொல்வார்களா என்பதே சந்தேகம். 'கறையான் படிப்'பால் பயனில்லை. படித்த படிப்பு, அறிவிலும் நடப்பிலும் வெளிப்படவேண்டும். 'புஸ்தகப் பூச்சிகள்' இந்த உண்மையை அறிவதில்லை.

கறையான்களுக்குத் தாயாதிகள் மனித வர்க்கத்திலும் உண்டு. அவர்களுக்குத்தான் 'புத்தகப் பூச்சி' என்று பெயர். ராமகிட்டு ஒரு புத்தகப் பூச்சி. "முதல் மகா ராஷ்டிர யுத்தத்தின் காரணங்கள் என்ன?" என்ற கேள்வி பரீக்ஷையில் வந்தால், தான் ஏற்கனவே 'கட கட' என்று உருப்போட்டு வைத்திருப்பதை உடனே கக்கிவிடுவான். கேள்வியைச் சற்று மாற்றிவிட்டால், பரீக்ஷையில் 'பிளாங்கி' தான். எண்ணெய்ச் செலவு செய்து இரவு பூராவும் கண்விழித்துக்கொண்டு தான், அவன் பரீக்ஷைக்குப் படித்தான். பிரயோசனம் என்ன? பரீக்ஷை 'சுழி'த்துவிட்டது. தான் படிக்கும் புத்தகங்களின் விஷயங்களை மூளையில் ஏற்றிக்கொள்ளாமல், பொட்டை நெட்டுருச் செய்வதில்தான் அவன் நிபுணன்.

படிப்பு அறிவை விசாலப் படுத்தவேண்டும். அறிவு ஒழுக்கத்தைத் தர்ம மார்க்கத்தில் செலுத்த வேண்டும். அவ்விதம் செய்யாத படிப்புப் படிப்பேயல்ல. தர்ம மார்க்கத்தை மறந்த 'அறிவாளி'யும் ஒரு விதத்தில் புத்தகப் பூச்சிதான். மனிதனின் மனதைத் தூய்மைப் படுத்தாத படிப்புக்கும், புத்தகத்தைக் கறையான் அரிப்பதற்கும் எவ்வித வித்தியாசமு மில்லை. தர்ம மார்க்கத்தில் நிற்பவனே அறிவாளியாவான். பல கற்றும் அறிவில்லாமல் போவதில் சிலாக்கியம் ஏது? படிப்பு ஏட்டுச் சுரைக்காயாக ஆகாமல், வாழ்க்கையை உயர்த்த வேண்டாமா?

புத்தகப் பூச்சிகளாகவே எல்லோரும் படிக்கவேண்டும் என்று நினைத்தோ, அல்லது படிப்பதாக நினைத்தோ என் நண்பர் ஒருவர் சொல்லுவார்: "ஸார், எனக்கு என்னவோ புத்தகங்களைப் படிப்பதில் நம்பிக்கையே இல்லை. வாழ்க்கைதான் உயர்ந்த புத்தகம். அதைவிட நமக்கு வேறு எந்தப் புத்தகம் பாடம் கற்பிக்கப் போகிறது?"

உண்மை. எவ்வளவோ உயர்ந்த நூல்களைச் சிருஷ்டித்த அறிவாளிகளும் வாழ்க்கையிடம் பாடம் கேட்டவர்கள்தான். அனுபவத்தைப் போல் படிப்பு ஆகாது. ஆயினும், நமக்குக் கிட்டாத எத்தனையோ அனுபவங்கள் ஏராளமாகப் பல புத்தகங்களில் புதைந்து கிடக்கின்றன. நம் சொந்தத்தில் அத்தனை அனுபவங்களையும் அனுபவித்தல் அசாத்தியமாகும். எவ்வளவோ வருஷங்களாகத் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பிழிந்து தந்திருக்கிறார்கள் பல ஆசிரியர்கள். உட்கார்ந்தபடியே அந்த அனுபவ அறிவை நாமும் அடைவதில் நமக்கு என்ன சிரமம்?

என் நண்பரைவிட ஒருபடி அதிகமாகச் சென்றிருக்கிறார் லார்டு பாபிங்டன் என்ற பிரமுகர். அவர் சொல்லுகிறார்: "ஒரு புத்தகத்தைப் படித்தால், பிறருடைய சிந்தனைகள், நமது மூளையை ஆக்கிரமித்துக் கொள்ளுகின்றன. அறிவாளி சுய சிந்தனைகளை விருத்தி செய்து கொள்ளுவது சிலாக்கியமே தவிர, பிறருடையவைகளைக் கொள்வது சரியல்ல." பிறருடைய சிந்தனைகள் தம்

முடைய யோசனைகளை அமுக்கியே தீரும் என்று அவர் பயப்படுகிறார்!

பிறருடைய யோசனைகளை நாம் ஏற்றுக் கொள்வதே தவறாகி விடாது. ஆனால், நாம் அவைகளை அப்படியே அங்கீகரிப்பதில் பிரயோசனமில்லை. பிறருடைய சிந்தனைகள் நமது மனதில் பதிந்து ஊறும் போதுதான், அவைகள் நம்முடையவையாகும்.

'வாதி வக்கீல் பேசுவதைக் கேட்டால், வாதியின் கக்ஷி நியாயமாகத் தோன்றுகிறது; பிரதிவாதி வக்கீல் பேசுவதைக் கேட்டால், பிரதிவாதியின் கக்ஷியே சரியாகப் படுகிறது' என்று தவித்தாராம் ஒரு ஜட்ஜி. அவர் எப்படி நியாயம் தீர்க்க முடியும்? அதைப் போலவே, எந்தெந்தப் புத்தகங்களைப் படிக்கிறோமோ, அவையவற்றில் உள்ள அந்தந்தக் கொள்கைகள் நமது மூளைக்குள் புகுந்து விடுமென்று பயப்பட்டார் லார்டு பாபிங்டன். சுய அறிவும், படிப்பதை மனதில் வாங்கிச் சிந்தனை செய்யும் சக்தியும், ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை அவர் மறந்துவிட்டார் போல் இருக்கிறது!

தேவேந்திரனும், அசுராதிபனும் பிரம்மத்தை அறிய விரும்பினார்கள். "கண்களுக்குள் தோற்றப்படுபவனே ஆத்மா" என்ற வேத வசனத்தை உபதேசித்தார் குரு. அதன் கருத்து, 'கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்தால் காணப்படும் புருஷனே ஆத்மா' என்பதாகும். இதை அறிந்து கொள்ளாமல், இந்திரனும் அசுரனும், 'ஜலத்திலும் கண்ணாடியிலும் தோன்றும் தங்கள் பிரதிபிம்பங்கள்தான் ஆத்மா' என்று எண்ணி, குருவிடம் திரும்பிப் போய்ச் சொன்னார்கள்.

"சரி, அழிவற்ற பிரம்மத்தை கண்டுவிட்டீர்கள் அல்லவா? போய் வாருங்கள்" என்றார் குரு. அசுரச் சக்கரவர்த்தி வெகு திருப்தியுடன் போய்விட்டான். ஆனால், இந்திரனுக்கு மாத்திரம் 'இது எப்படி அழிவற்ற ஆத்மாவாக இருக்க முடியும்?' என்ற சந்தேகம் வந்தது. திரும்பியும் குருவிடம் வந்து பிரார்த்தித்தான். பிரம்ம உபதேசத்தையும் பெற்றான்.

வேத வசனத்தை இந்திரன் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. தன் பகுத்தறிவையும், சிந்தனா சக்தியையும் உபயோகப்படுத்தினான். அதன் பலனை அடைந்தான். அசுரன் சிந்திக்கவில்லை. நஷ்டமடைந்தான்.

அசுரனைப் போல், ஞானத்தைத் தேடுவதில் பிரயோசனமில்லை; கறையான்களைப் போல் இலக்கியங்களைச் சுவைப்பதில் பயனில்லை. வடமொழியில் ஒரு செய்யுள் உண்டு; "வித்தை விநயத்தை அளிக்கிறது. விநயம் யோக்கியதையைத் தருகிறது. யோக்கியதையிலிருந்து தனம். தனத்திலிருந்து தர்மம். அதற்குப் பிறகு சுகம்."

வித்தை அறிவை விசாலப்படுத்த வேண்டும். அறிவு ஒழுக்கத்தை உயர்த்த வேண்டும். அப்பொழுது தான் அது உண்மையான வித்தையாகிறது. மற்றது கறையான் படிப்புத்தான்.

தீக்குளித்த வேளாளர்

மு. அருணாசலம்

சத்தியத்துக்காக உயிரைக் கொடுத்தவர்கள் நமது நாட்டில் எத்தனையோ பேர். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதற்காக அரிச்சந்திரன் எவ்வளவோ துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தது என்பதை நாம் அறிவோம். அரிச்சந்திரன் கதையைப் போலவே, 'நீலி கதை' என்றொரு வரலாறு தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வருகிறது. இக் கதை சாதாரணமாக எல்லோரும் அறிந்தது.

சென்னைக்கு அருகிலுள்ள பழையனூர்த் திருவாலங்காடு ஒரு புராதன சிவஸ்தலம். அங்கே, சிவபெருமானுடைய ஆனந்த நடனத்தைக் காரைக்காலம்மையார் கண்டு அனுபவித்து, அழகாகப் பாடியிருக்கிறார். இந்தப் பழையனூரிலே, முற்காலத்தில் ஒரு வேளாளனிருந்தான். அவனுடைய பெண் குழந்தையொன்று, ஏதோ பண்டை வினையின் வலியாலே இறந்துபோய்ப் பேயாய்த் திரிந்து கொண்டிருந்தது. பழையனூருக்கு வந்த வணிகனொருவன், ஊருக்கு வெளிப்புறத்துள்ள காட்டு வழியாக வந்தபோது, இந்தப் பேய், அவனுடைய மனைவி வடிவத்தோடு, அவனைப் பின்தொடர்ந்தது. அதைப் பேயென்று அறிந்து அவன் அதை விட்டு ஓட முயன்றான். அப்பேய், அவனைத் தொடர்ந்துபற்றி, அவ்வூர் அம்பலத்துக்கு இழுத்துச் சென்று, அங்குக் கூடியிருந்த வேளாளர் எழுபதின்மரிடம், "இவன் என் கணவன். என்னையும் இக் குழந்தையையும் துறந்து செல்ல முயல்கிறான்" என்று முறையிட்டு, தன் கையிலிருந்த ஒரு மாயக் குழவியையும் காட்டிற்று. வணிகனோ, அப் பெண் ஒரு பேய் என்று கூறி, மறுத்தான். மீண்டும் அப்பேய், "இவனே என் கணவன். இதற்குச் சாட்சி வேண்டுமானால் காட்டுகிறேன், பாருங்கள்" என்று சொல்லி, தன் கையிலிருந்த மாயக்குழவியைக் கீழே விட்டது. அக் குழவியோ, "அப்பா!" என்று அழைத்துக் கொண்டு, அவ்வணிகனைப் பற்றி, அவன் மடிமீது ஏறிக்

'பழையனூர் நீலி' என்றால், பாட்டிமாருக்கெல்லாம் தெரியும். அது ஒரு பயங்கரக் கதை; ஆனால், அற்புதமானது. அந்த 'நீலி'யைவிட, அதன் வார்த்தையால் மயங்கித் தவறு செய்த வேளாளர் புரிந்த தியாகப் பெருமை சொல்லத்தரமன்று. அதிலே காவியச் சுவையும் காட்டுகிறார் கட்டுரையாளர்.

கொண்டது. இவ்வளவையும் கண்ட வேளாளர், அப்பேயின் சொல்லை மெய்யென்று நம்பி, அதை ஏற்றுக் கொள்ளுமாறு வணிகனை வேண்டினர்கள். அவனே, அது பேய்தானென்று சொல்லி, அதை ஏற்க அஞ்சினன். அப்போது அவ்வேளாளர் எழுபதின்மரும், "இப் பெண், பேயானல், நாங்கள் பிணையாவோம்" என்று அவனுக்கு உறுதி கூறினர்கள். வேறு வழியின்றி வணிகன் சம்மதிக்கவே, அவர்கள் அப்பேயை அவனுடன் கூட்டி அனுப்பினர்கள். அப் பேயோ, அவனேடு ஓரறையுட் புகுந்து, அவனை அறைந்து கொன்று, உதிரத்தையெல்லாம் குடித்து, உடலை எறிந்துவிட்டுப் போய்விட்டது. மறுநாட் காலையில் இதையறிந்து அவ் வேளாளர், பெரிதுணுக்க முற்ருர்கள். வணிகனுக்குத் தாங்கள் கூறிய உறுதிமொழி பழுதாய்ப் போனதையெண்ணி வருந்தினர்கள். சொல்லைக் காப்பாற்ற முடியாத நிலையிலே, உயிரை விடுவதுதான் செய்யத்தக்கதென்று நீர்மானித்து, ஒரு பெருங் குழியிலே தீ மூட்டச் செய்து, அதனுள் குதித்து உயிர் துறந்தார்கள். வேளாளர் எழுபதின்மருள் ஒருவன், தன் வயலில் உழுதுகொண்டிருந்தபோது, இச் செய்தியெல்லாம் கேள்வியுற்று, கலப்பையின் கொழுவினலே தன்னைக் குத்திக் கொண்டு உயிர்விட்டானும்.

இதுவே நீலிகதை என்று வழங்கப்படும் கதை. எழுபது வேளாளர், தங்கள் சொல் பழுதாய்ப் போனமையறிந்து, உயிர் துறந்தார்கள். இவ்வரலாறு மிகப் பழமையான காலந் தொட்டுத் தமிழ் நாட்டில் வழங்கிவந்தது. "வஞ்சப்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு, அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகள்" என்று சம்பந்த மூர்த்திகள் இவ்வரலாற்றைச் சுட்டிப் பாடுகிருர். சேக்கிழார் புராணம் பாடிய உமாபதி சிவாசாரியார், வேளாளர் பெருமையைச் சொல்ல வந்த இடத்

★ பேயும் வணிகனும் ★

திலே இவ் வரலாற்றை விரிவாக உரைத்திருக்கிறார்.

அரிச்சந்திரனும், இவ்வேளாளர் எழுபதின்மரும், தங்கள் தங்கள் சொல்லைக் காத்துப் பெரும் புகழ் படைத்தார்கள். அரிச்சந்திரனோ பெரிய சக்கரவர்த்தி; எல்லாக் கலைகளையும் முற்றக் கற்றவன். அவன், சத்தியத்தைக் காக்க வேண்டும் என்ற உறுதியோடு, தன் மனைவியையும் மைந்தனையும் நாட்டையும் துறக்கத் துணிந்ததில் வியப்பொன்றுமில்லை. சிறந்த கொள்கைக்காக எதையும் அவன் தியாகம் செய்வானென்று நாம் எதிர்பார்ப்போம். ஆனால், இவ் வேளாளரோ அப்படி யல்லர். கலைகளை இவர்கள் முற்றக் கற்றவர்களல்லர். சத்தியத்தைக் காக்க வேண்டுமென்ற உணர்ச்சி இவர்களுக்கு இயல்பாக அமைந்ததே யன்றி, ஏதோ கலை ஞானத்தால் வந்ததென்று சொல்ல முடியாது. தவிர, சத்தியமே பெரிதென்ற உணர்ச்சியோடு ஒருமித்து உயிர் விடத் துணிந்தவர் ஒருவரல்ல, இருவரல்ல, எழுபதின்மர். எனவே, இவ்வேளாளர் செயலே மிக்க பெருமை யுடையது; இதுவே நமக்கு வியப்பைத் தருகிறது.

இவ்வளவு பெருமையுடைய இவர்கள் சரித்திரத்தை யொட்டி வேறு கதைகளும் எழுந்தன. அவற்றில் ஒன்று, வேளாளர் தீக்குளித்த குண்டத்திலிருந்த தீயானது நெடுநாள் வரையிலும் அணையாமலிருந்த தென்று சொல்லுகிறது. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்து அத்தீயைப் பார்த்து அதிசயப் பட்டார்களாம். தங்கள் அதிசயத்தை அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பாடல் மூலமாக வெளியிட்டார்களாம்.

முதலிலே சோழன் இந்தச் சரித்திரத்தைக் கேள்வியுற்று, அத் தீக்குண்டத்தைக் காணவேண்டுமென்று வருகிறான். மற்ற இரு மன்னரையும் விட, இவன் சற்று அருகிலிருப்பவ னல்லவா? பழையனூர்த் தீக்குழியில் விழுந்த வேளாளர் புகழானது, எத்தனையோ எல்லைகளைக் கடந்து, புகார் நகரத்தை யடைந்து, சோழன் காதுக்கு எட்டியிருக்கிறது. தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு என்றெல்லாம் எத்தனையோ நாடுகளிலும் அவற்றின் எல்லைகளிலும் அப்புகழ் பரவிற்று. பரவியதன் காரணம், சத்தியத்தை நிலை நிறுத்துவதொன்றே என்று கூறத் தக்க விதமாயிருந்தது. பழமையான நீதி முறைமையிலே தான் மக்கள் பொதுவாக ஒழுகி வருகிறார்கள். ஆனாலும் எத்தனையோ பேர், வாழ்க்கையிலே நல்லொழுக்கத்தினின்றும் நழுவி, தீ நெறியிலே செல்கிறார்களல்லவா? இவர்களைக் காத்து நல்ல நெறியிலே செல்லும்படி செய்வதா யிருந்தது, அவ்வேளாளர்களுடைய செயல் :

> எல்லை பலகடந்திட்(டு)
> எங்கும் புகழ்பூத்துத்
> தொல்லை மனுக்காக்கத்
> தோன்றிற்றே! —

[தொல்லை - பழமையான. மனு - மனு நெறி முறைமை.]

இப்படிக் காக்கத் தோன்றியது உண்மையிலேயே அவ்வேளாளர் செயலாயிருந்த போதிலும், அச் செயல் மெய்தானென்று அன்று

வரையில் இருந்து, சோழமன்னனுக்கு அதை நிரூபிப்பதுபோல இருந்தது, அத்தீக்குழியில் வளர்ந்த தீ. காட்டு வழியிலே வந்த ஒரு பேய் செய்த வஞ்சனையல்லவா இவ்வளவு பெரிய தீக் கொழுந்தை வளர்த்து விட்டது! இத் தீக்கொழுந்தின் புகழ்தானே சோழனுடைய மனதைக் கவர்ந்தது! ஆகவே, இதன் புகழ் பெரிதல்லவா?

எல்லை பலகடந்திட்
டெங்கும் புகழ்பூத்துத்
தொல்லை மனுக்காக்கத்
தோன்றிற்றே! - கொல்லை
வழியிலொரு பேய்நின்று
வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்தீக்
கொழுந்து.

அடுத்தாற் போல், சேரன் வருகிறான். வெகு தொலைவிலிருந்து, மலைகளையெல்லாங் கடந்து, பழையனூரெல்லைக்கு வந்துசேருகிறான். இவ்வேளாளர் புகழைக் கேட்கக் கேட்க, அவனுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. 'காராளர் என்னும் இந்த வேளாளர் யாவர்?' என்றெல்லாம் எண்ணுகிறான். இவர்களுக்கு இணையாகக் கூடியவர்கள் யாவர்? ஒருவருமேயில்லை எனவும் முடிவு கட்டுகிறான். இந்தமுடிவு, அவனுக்குப் பெரிய எக்களிப்பை உண்டாக்குகிறது. இதன் பயனாக உற்சாகமாய்க் கூத்தாடுகிறான். அவன் ஆடுகிற கூத்தைப் பாட்டிலே நாமும் பார்க்கலாம்; அவன் செய்கிற ஆரவாரத்தை நாமும் பாட்டிலே கேட்கலாம்:

யாவரே காராளர்!
யாவர் இணையாவார்!
நாவலோ நாவலோ
நாவலோ! — கோவைப்
பொருப்பால் அளித்தார்க்குப்
போதுமே, உண்மை
நெருப்பால் அமைத்தார்
நிலை!

கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாய்த் தூக்கிப் பிடித்து, கல் மழையினின்றும் பசுக்களைக் காத்தான். அரிய செயல்தான் அது. ஆயினும், வேளாளர் செயலைப் பார்க்க, அது குறைவாகத்தான் தோற்றுகிறது சேரனுக்கு. இவர்கள், உண்மையை நெருப்பாலல்லவா நிலை நிறுத்த முயன்றார்கள்? சத்தியத்தையே காக்க வல்லவர்கள் முன்னே, பசுக்களைக் காத்த புகழ் எம்மாத்திரம்?

யாவரே காராளர்?
யாவர் இணையாவார்?
நாவலோ நாவலோ
நாவலோ! —

என அவன் கூத்தாடட்டும். இனி, பாண்டியனைப் பார்க்கலாம்.

வேளாளர் புகழ் நாடெங்கும் பரவி வந்தது. புகழோடுகூட, பலவித அபிப்பிராயங்களும் கலந்தன. "ஐயோ, பாவம்! அநியாயமாக இறந்து விட்டார்களே, எழுபது பேரும்" என்று சிலர் அனுதாபப் பட்டார்கள். "கேவலம் ஒரு பேய், பெண் பேய், அதன் பேச்சைக் கேட்டதனாலல்லவா, இவ்வளவு அனர்த்தம் விளைந்தது!" என்றார்கள் வேறு சிலர். இது உலகத்தில் இயற்கைதானே? ஒருவர் நல்ல காரியமொன்றைச் செய்யப் போய், அதன் பயனைக் கெடுதி வந்துவிட்டால், எல்லோரும் அவரைக் குறைகூறுவார்கள். அவர் செய்ய எண்ணியது நல்லதுதானே என்று நினைப்போர் அரியர்.

D

பழையனூர் வேளாளர் ஒரு பெண்ணின் வார்த்தையை நம்பி, அப் பெண் அவளுடைய கணவனோடு சேர்ந்து வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் வணிகனுக்கு உறுதி கூறினர்கள். அவன் அப் பெண்ணைத் துறந்து ஓட முயல்கிருன் என்று அவர்கள் உண்மையாகவே நம்பியதனல், அப் பெண் ஒரு பேய் தான் என்று அவன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் ஏற்கவில்லை. முடிவிலே, அவர்கள் பிணைகொடுத்தது பேராபத்திலே முடிந்தது. வணிகன் இறந்தான். தங்கள் உயிரை விட்டு இந்தத் தீமைக்குக் கழுவாய் தேடுவதல்லது, அவர்கள் செய்யத் தக்கது வேருென்றுமில்லை.

பாண்டி நாட்டிலே சிலர், மேலே சொன்னபடி கருதினர்கள். அந்தப் பேய்மகளின் சொல்லை வேளாளர் கேட்டது பெரும் பிழையன்று என்று அவர்கள் சொல்லி வந்தார்கள். இது, பாண்டியன் காதுக்கும் எட்டியிருந்தது. அவனே நீதி தவருதவன்; நீதிக்காக எதையும் தியாகம் செய்தல் தகும் என்ற கருத்துடையவன். இவர்களுடைய கருத்து நியாயமானதென்று அவனுக்குப் படவில்லை. பழையனூர்த் தீக்குழியைக் காண வந்தபோது, இவற்றை யெல்லாம் எண்ணிக் கொண்டே வந்து தீயைக் கண்டான். அப்போது சொல்லுகிருன்:

"இந்தக் காராளர் பேயின் சொல்லைக் கேட்டது பிழையென்று சிலர் சொல்லலாம். ஆனல், அவர்கள் பிழை செய்தவர்களா? அல்லர். பேயின் சொல்லைக் கேட்ட பிழையை, தங்கள் உயிரையே கொடுத்துத் தீர்த்து விட்டார்களே! அவர்கள் உண்மையில் பிழை தீர்ந்தவர்களே யாகிருர்கள்."

> பிழைத்தாரோ காராளர்
> பேய்மகள்சொற் கேட்டு?
> பிழைத்தார்கள் அல்லர்பிழை
> தீர்ந்தார்.—

இவர்கள் பிழை தீர்ந்திருக்கட்டும்; பிழை செய்து விட்டார்கள் என்று சொல்கிருர்களே பிறர்! அது என்ன பிழை? ஒரு வணிகனுக்காக வேண்டி ஒரு பேய்க்குப் பிணை நின்ருர்கள். சரி, உண்மைதான். இதை யார் பார்த்தார்கள்? ஒருவரும் பார்த்ததில்லை. அம்பலத்திலிருந்த வேளாளரிடம் பேயும் வணிகனுமாக வந்து முறையிட்டார்கள்; முறையிட்டது வேறெவருக்கும் தெரியாது. வணிகன் உயிர் போனதையறிந்தவுடன், இவ் வேளாளர் அதையறிந்து பேசாதிருந்திருக்கலாம். "நீங்கள் பிணையிருந்தீர்களே? இப்படியாகி விட்டதே! என்ன சொல்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்போரில்லை.

ஆனல், வேளாளர் இவ்வாறு எண்ணவில்லை. தாங்கள் கூறிய உறுதிமொழி பழுதாய்ப் போனவுடன், அதற்குக் கழுவாயாகத் தாங்கள் அனைவரும் உயிர்விட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்கள். எல்லோருங் காண எரியில் புகுந்து உயிர் விடலாமென்று தீர்மானித்தார்கள். அவ்விதமே, ஊரார் யாவருங் காணும்படி, தீக்குழியிலே இறங்கிவிட்டார்கள். இதனல்தானே, பாண்

டியனும், இவ்வேளாளர்கள் உயிர் நீத்த தீக்குழியையாயினும் பார்க்க வேண்டுமென்று இவ்வளவு தூரம் வந்திருக்கிறான்!

— பிழைத்தார்கள்
எல்லாரும் காண
எரியகத்தே மூழ்கினார்;

எரியிலே மூழ்கியபோது வேளாளர் எழுபது பேருடைய உடலும் மறைந்துபோனதென்னவோ உண்மைதான்; ஆனால், அப்போதுதான் அவர்களுடைய புகழ் பிறந்தது. அவர்கள் செய்த அரிய செயல் காரணமாகப் பிறந்த புகழானது, மக்கள் உள்ளவரைக்கும், உலகமுள்ளவரைக்கும், இந்தத் தேசத்திலே ஓங்கி வளரும். தொல்லை மனுவைக் காக்கத் தோன்றியதல்லவா இந்தப் புகழ்? இது காதில் விழுந்தோறும், இதற்குக் காரணமான செயலை மக்கள் நினைவுகூர்வார்கள். இதன் மூலம், அவ்வேளாளர் நினைவு மக்கள் உள்ளத்தை விட்டு என்றும் அகலாதிருக்கும். ஆகவே, அவர்கள் என்றும் வாழ்ந்திருக்கிறார்கள். இறந்தவர்களனைவரும் இறந்தவர்களா? மாய்ந்தவர் மாய்ந்தவரல்லர்கள். பூத உடலோடு வாழ்வதொன்றுதானா வாழ்வு? அல்ல; மக்கள் உள்ளத்திலே புகழ்வடிவிலே வாழ்கின்ற வாழ்வு, அதனினும் சிறப்புடையது. 'வேளாளர் அன்று மட்டுமல்ல, இன்றுவரை உளர் என்பது' முற்றிலும் பொருந்துமல்லவா?

பிழைத்தாரோ வேளாளர்
பேய்மகள்சொற் கேட்டு?
பிழைத்தார்கள் அல்லர்பிழை
தீர்ந்தார்! — பிழைத்தார்கள்
எல்லாருங் காண
எரியகத்தே மூழ்கினார்
எல்லாரும் இன்றும்
உளர்.

ஆம், எல்லாரும் இன்றும் உளர்.

★

ஆள் மாறாட்டம்

இந்தியாவில் கிரிக்கட் பந்தாட்டம் முதன் முதலாக நுழைந்த காலத்தில், கொலாபாவிலிருந்து சில வெள்ளைக்கார சோல்ஜர்கள் விளையாட வந்தார்கள். பார்ஸி கோஷ்டி ஒன்றும் அந்த வெள்ளைக்கார ஸோல்ஜர் கோஷ்டியும் விளையாடின. வெள்ளைக்கார கோஷ்டி முதலில் ஆடியது. மிகவும் சொற்ப 'ரன்'களோடு, வெள்ளைக்கார கோஷ்டியார் அனைவரையும் பார்ஸிகள் வீழ்த்திவிட்டார்கள். பார்ஸிகள் பந்து அடிக்கத் தொடங்கினார்கள். அவர்களில் பந்து அடிப்பதில் மிகச் சிறந்த ஆள், ஏதோ தவறால் சில 'ரன்'களோடு விழுந்து விட்டான். சிறந்த 'பாட்மான்' போய்விட்டால், மற்றவர்களால் எப்படி 'ரன்' எடுக்க முடியும்? ஒரு யுக்தி செய்தார்கள். இந்த வெள்ளைக்கார 'டாம்மி'களுக்கு, எல்லா இந்தியர் மூஞ்சியும் ஒரே தினிசாகத்தானே இருக்கும்? அவர்களால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதல்லவா? இவ்வாறு நினைத்து, முதலில் விழுந்த சிறந்த 'பாட்மா'னையே, வேறு உடையுடன் வந்து ஆடச் செய்தார்கள். வெள்ளைக்கார 'டாம்மி'களும் முதலில் இதை அறியவில்லை. 'ரன்'கள் ஏறிக்கொண்டே போகின்றன. 'இதேதடா பிசாசு!' என்று டாம்மிகள் மலைத்துவிட்டார்கள். ஆனால், இந்த 'பாட்மான்' பந்தை அடிக்கும் தோரணையை நன்றாய்க் கவனித்தபோது, இவன் முதலில் வந்த ஆசாமிதான் என்று அவர்களுக்குப் புரிந்துவிட்டது. அவ்வளவுதான். பந்து, பாட், விக்கட் ஆகியவையெல்லாம் பறக்கத் தொடங்கின. அடிதடியோடு விஷயம் முற்றுப்பெற்றது.

சிவனிடம் அன்று சிரஞ்சீவி வரம் பெற்றனே, அவன் யாரென்று நினைக்கிறீர்கள்? இதோ இருக்கிறன் அவன்:

ரயிலில் சிரஞ்சீவி

க. நா. சுப்ரமண்யம்

அர்த்த ஜாம பூஜை யெல்லாம் ஆகிவிட்டது. குளிர்ந்த இராக் காற்றில் பூஜையின் போது எழுந்த மணிகளின் கம்பீர நாதம் இன்னும் அலையடித்து ஓய்ந்த பாடில்லை. அமிர்த கடேசுவரரின் சன்னதியிலிருந்து எல்லோரும் வெளியேறி விட்டார்கள். கோயிலில் கடைசியாகச் செய்ய வேண்டிய காரியங்களைக் கவனமாக முடித்துக்கொண்டு அர்ச்சகரும், அவருடன் இருந்தவர்களும், கர்ப்பக்கிரகத்தின் கதவை இறுகச் சாத்தி மூடிப் பூட்டிக்கொண்டு, கோயிலின் மற்ற இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்களில் யாருக்கும், அன்றுடன் மார்க்கண்டனுக்கு வயது பதினறு நிரம்பிவிடுகிறது என்கிற விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால், அப்படி அவர்கள் நிம்மதியாகத் தூங்க வீடு திரும்பியிருக்கமாட்டார்கள். அர்த்த ஜாம பூஜையைச் சற்றுத் தள்ளிப் போட்டு வைத்துக்கொண்டிருந்தாலும் இருப்பார்கள்.

மார்க்கண்டச் சிறுவன் அன்றும் வழக்கம் போலவே, அர்த்த ஜாம பூஜைக்கு வந்திருந்தான். ஆனல், பூஜையானதும், அவன் மற்றவர்களைப்போலக் கோயிலை விட்டு வெளியேறி விடவில்லை. தனக்குப் பதினறு வயது அன்றுடன் நிரம்பிவிட்டது என்றும், அன்றிரவு எமன் தனக்காக வருவான் என்றும் அவனுக்குத் தெரியும். யார் கண்ணிலும் படாமல் அவன் கர்ப்பக்கிரகத்துக்குள் நழுவிச் சிவன் நிழலில் ஒளிந்துகொண்டிருந்தான். விடி விளக்கு ஒன்றைத் தவிர, மற்ற எல்லா விளக்குகளையும் ஏற்கனவே அர்ச்சகர் போகும்போது அணைத்துச் சென்றுவிட்டார். கர்ப்பக்கிரகத்தில் அப்பொழுது தன்னையும், சர்வ வியாபியான சிவனையும் தவிர வேறு யாருமில்லை என்று, எமனை எண்ணித் திகிலுற்றிருந்த மார்க்கண்டன் நினைத்தான். ஆனல், அந்த விடிவிளக்கின் வெளிச்சமும், அதனல் சுவர்களில் விழுந்த நிழலும் விதம்விதமான உருவங்கள் எடுத்து, சிவகணங்கள் என்று சொல்லும்படியாகக் கோர தாண்டவம் ஆடின. ஆசிரமத்திலே அவனுக்க்குப் பழக்கமான பல்லி, கரப்பான் பூச்சி முதலிய ஜந்துக்களுக்கும் அங்கே குறைவில்லை.

தலைக்குமேலே 'விர்' என்று ஏதோ ஒன்று பறந்தது. எமன் தான் வந்துவிட்டானாக்கும் என்று பயந்து 'ஓ'வென்று அலறிக்கொண்டு ஆவுடைமேல் விழுந்தடித்து அமிருதலிங்கத்தைக் கட்டிக்கொண்டான். தன்னை அப்படிப் பயமுறுத்தியது எமனல்ல, கேவலம் ஒரு கரப்புப் பூச்சிதான் என்று கண்டதும், அவனுக்கே வெட்கமாக இருந்தது. நிமிர்ந்து அமிர்தலிங்கத்தைப் பார்த்தான். தன் பயத்தைக் கண்டு சிவபிரான் நகைக்கவில்லை என்றே மார்க்கண்டனுக்குத் தோன்றிற்று. சிவபிரானுக்குத் தன் பக்தர்களின் பக்தியைக் கண்டு பரவசமடையும் சக்தி தான் உண்டே தவிர, நகைக்கும் சக்தி கிடையாது. தன் பக்த கோடிகள் தன்னைப்பற்றிய வரையில் எவ்வளவு அசட்டுத்தனங்கள் செய்தாலும், அவற்றையெல்லாம் சஹித்துக்கொண்டு புளகாங்கிதம் அடையும் சக்தியும் அவருக்குண்டு. அவர்கள் மட்டும் அவருடைய நாச சக்தியில் பரிபூரண நம்பிக்கை வைத்துவிடவேண்டும்; அவ்வளவுதான் அவர் கேட்பது.



★

'காலணா
இருக்கு
மானால்
கொடு,
ஐயா!'

★

லிங்கத்தைக் கட்டிக்கொண்டு மண்டியிட்ட சிறுவன், எழுந்திருக்கவில்லை. அவன் வாய் சதா சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டே யிருந்தது. அவனை எமன் அணுகிக்கொண் டிருந்தானே தவிர, உண்மையில் அவன் இன்னும் வாழ்க்கையைச் சரியானபடி வாழ்ந்தறியாத பாலகன். பதினறு வயது எட்டுவதற்கு வெகுகாலம் முன்னரே, அவன் சிவபக்தனகி விட்டான். படிகளின் உதவியே இல்லாமல் அவன் எப்படியோ ஏணியின் உச்சியை எட்டிவிட்டான். சிவபக்தி ஒன்றுதான் தன்னை எமனிடமிருந்து காப்பாற்றக் கூடியது என்ற நம்பிக்கையே அவனுடைய பக்திக்குக் காரணம். வாழ்க்கையை அறியாத பாலகன் தான் எனினும், அவனுடைய உள்ளமும் உடலும் வாழவே விரும்பின; எமனை வரவேற்க, அவன் தயாராக இல்லை.

மிருகண்டு மகரிஷி பலதடவை அவனிடமே அவன் பிறந்த கதையைச் சொல்லி யிருக்கிறார். பிள்ளைக்காகத் தானும் தன் மனைவியும் தவம் செய்ததையும், பகவான் தோன்றி 'நூறு வயது வாழக்கூடிய அசட்டுப் பிள்ளை வேண்டுமா, சிவபக்தனகப் பதினறே வயது வாழ்ந்து இறந்து விடக்கூடிய பிள்ளை வேண்டுமா?' என்று கேட்டதையும், தன் பத்தினி தன்னிடம் ரகசியமாய் 'அசடானலும் தீர்க்காயுஸுள்ள பிள்ளை தான் வேண்டும்' என்று சொன்னதையும், அவள் விரும்பியது தவறென்றும் அல்பாயுஸானலும் கெட்டிக்காரப் பிள்ளையே வேண்டுமென்றும் தாம் வரம் கேட்டதையும் அவனிடம் சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தில் மார்க்கண்டனும் அவன் தாயும் ஒரு கட்சி; மிருகண்டு மகரிஷி எதிர்க்கட்சி. ஆனல், அவரும் தம் கெட்டிக்காரப் பிள்ளை, அல்பாயுசு தான் என்று வாதிக்கப்பட்ட பிள்ளை, கெட்டிக்காரத் தனத்தினல் எமனையும் பகவானையும் ஏமாற்றி விடலாகாதா என்று தான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். அதன்பொருட்டே அவர் அவனுக்குச் சிவபக்தி எனும் சிறந்த மார்க்கத்தை உபதேசித்து அமிருதகடேசுவரரிடம், 'இனி நான் செய்வது யாதுமில்லை' என்று ஒப்படைத்து விட்டார்.

ரத்தத்தில், உடன் பிறந்து ஓடும் வாழ்க்கைப் பற்றுதல் என்பது யாருக்கும் உள்ளதுதான். மார்க்கண்டச் சிறுவனின் உள்ளத்திலே 'என்ன நேருமோ? கடவுள் காப்பாற்றுவாரோ, மாட்டாரோ?' என்ற சந்தேகமும், அதன் பக்கத்திலேயே 'காப்பாற்றி வருவார்; கைவிட்டு விடமாட்டார்' என்று ஒரு திடமான நம்பிக்கையும் ஒன்றுடொன்று மோதி ஊசலாடி வியாபித்து நின்றன. பதினறு வயதாகுமுன் சிவனிடம் இவ்வளவு பக்தி காண்பித்தவன், மார்க்கண்டனைப் போல ஒரே லக்ஷியமாகச் சிவநெறி நின்றவன் வேறு யாரும் கிடையாது என்று உலகெலாம் போற்றிற்று. அது மார்க்கண்டனுக்குத் தெரியும்; சிவபிரானுக்கும் தெரிந்திருக்க வேண்டும். இப்படிப் பட்ட பக்தனைச் சிவபிரான் கை

விட்டு விட்டாரானல், உலகமே அவரைத் தூற்றும். சிவமதமும், சிவபக்தியும், மற்ற எவ்வளவோ சில்லறைப் பக்திகளையும் மதங் களையும் போல, உலகிலிருந்தே மறைந்துவிடும்.

கெட்டிக்காரனுக, மூளையுடன் கூடிய மனிதனுகப் பிறந்த குற் றத்தினுலோ, என்னவோ; இந்த முக்கியமான விஷப்பரீக்ஷை வினுடியிலும் மார்க்கண்ட னுடைய மனதில் கணக்கற்ற அவநம்பிக்கைகளும் சந்தேகங் களும் பேய்க் களியாட்டம் ஆடின. ஆனல், அவன் வாய் சிவ நாமங்களை உச்சரிப்பதை நிறுத்த வில்லை; அவனது கை, அமிருதலிங் கத்தைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்தவில்லை.

நள்ளிரவில் எமன் வந்தான்; உதைபட்டான்; மார்க்கண்ட னுடைய உயிரைக் கவரச் சக்தி யில்லாதவனுகப் பாசக்கயிற்றைச் சுருட்டி மடக்கி, தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு திரும்பி விட்டான். தேவலோகத்தில் போய் யாருடைய ஆத்மா வையோ காட்டி, 'இதுவே மார்க்கண்டனுடையது' என்று நிரூபித்து, அவன் தன் மானத் தைக் காத்துக் கொள்ளவேண்டி வந்தது என்று கொஞ்சகாலம் பூலோகத்தில் உலவிய வதந்தி நிஜமல்ல என்று நாம் மனப் பூர்வமாக நம்பலாம்.

தேவ லோகத்துச் செய்தி என்னவானுலும் சரி, பூலோகத் தில் தங்களுடைய மதமும் மார்க்க முமே சிறந்தது என்று நிரூபிக்க, சிவ பக்தர்களுக்கு இன்னெரு ருஜுக் கிடைத்துவிட்டது.

மார்க்கண்டனைப் பற்றியவரை யில் அவன் பதினறு வயதைத் தாண்டி விட்டான்; என்றும் பதினருக வாழ வரம்பெற்று விட்டான். மறுநாள் பொழுது எப்பொழுது விடியும், கர்ப்பக் கிரகத்தின் கதவு எப்பொழுது திறக்கும், எப்பொழுது வெளி யேறலாம் என்று அவன் ஏக்கத் துடன் காத்திருந்தான். எனி னும், அப்பொழுதும் அவ னுடைய நாக்குச் சிவநாம உச் சாரணத்தை நிறுத்தவில்லை.

யுகங்கள் எவ்வளவோ வந்து சென்றுவிட்டன. பிரம்ம வரு ஷங்கள் எத்தனையோ கழிந்து விட்டன; பிரம்மாக்கள் எவ் வளவோ பேர் அழிந்து விட்டார் கள்.

பாரத வர்ஷத்திலே பிரிட்டிஷ் ஆட்சியும் தென்னிந்திய ரெயில் வேயும் தோன்றிவிட்டன.

சென்ற வாரம் மாயவரத்தி லிருந்து தரங்கம்பாடி போகும் ரெயிலில், நான் மார்க்கண்டனைச் சந்தித்தேன். அவனுக்கு வயது இன்னும் பதினறுதான். அவ னைப் பார்த்தால், எவ்வளவோ யுகங்கள் வாழ்ந்துவிட்டவனுகத் தான் தோன்றிற்று. ஒருநாளையப் பசியும் பட்டினியும் போதாவா, ஒரு மனிதனுடைய வயதை ஒரு யுகமாகக் காட்ட? அவன் இம் மாதிரி ஒரு நாளல்ல, ஒரு மாச மல்ல, எவ்வளவோ வருஷங்க ளாகக் கடத்திக்கொண் டிருக் கிருன். அவன் சிரஞ்சீவி; அவன் பெயரே இப்பொழுது 'பட்டினி' என்ருகிவிட்டது.

"நான்தான் மார்க்கண்டன்" என்ருன் அவன்: "அன்று அமி

ருதகடேசுவரரிடம் பக்தி செலுத்தி எமனை விரட்டியடித்துச் சிரஞ்சீவி யானேன். அந்தப் பழைய கோபத்தால் எமன் இன்று என்னை அணுகவே விரும்பவில்லை போல் இருக்கிறது. என்னை அழைத்துப் போகச் சொல்லி அந்தச் சிவபிரானே உத்தரவிட்டாலொழிய, எமன் என்னை அணுகமாட்டான் என்று தோன்றுகிறது. பக்தி செய்து, சிவபிரானை வேண்டப் போகிறேன்: பழைய வரத்தை ரத்து செய்து என்னை அழைத்துப் போக எமனுக்கு உத்தரவிட வேண்டும் என்று சிவபிரானை நோக்கித் தவம்புரியச் செல்லுகிறேன்.''

யாரோ சித்தஸ்வாதீன மில்லாதவன் என்றுதான் எண்ணினேன் முதலில். ஆனால் ''காலணா இருக்குமானால் கொடு, ஐயா'' என்று அவன் கேட்டபின், கெட்டிக்காரப் பிச்சைக்காரன் என்று எண்ணினேன்.

ஆனால், திருக்கடையூர் வந்ததும், அவன் இறங்கி விட்டான். ஓ! இதே திருக்கடையூரில் தானே முன்னே அவன் வரம் பெற்றது? இப்போது அவன் சொன்னது வாஸ்தவமாகவே தான் இருக்குமோ?

★

சட்டமும் பைபிளும்

ஜான் புச்சானன் என்ற ஆங்கில அரசியல்வாதி எழுதுகிறார்:

லாயிட் ஜார்ஜின் இன்ஷியூரன்ஸ் சட்டத்தை ஆதரித்து, ஸ்காட்லாந்தில் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தை இந்தச் சட்டம் அனுபவத்தில் கொண்டு வருகிறது என்று நான் கூறினேன்.

ஓர் ஆட்டிடையன் கேட்டான்: ''இந்த இன்ஷ்யூரன்ஸ் சட்டம் பைபிளுக்கு ஒத்தது என்கிறீர்களா, ஐயா?''

''ஆம்.''

''ஸ்திரீகளுக்கு, அவர்கள் மணமானவர்களாயினும் கன்னியராயினும், இந்தச் சட்டம் உதவி அளிப்பது உண்மையா?''

''வாஸ்தவம்.''

''அப்படியானால், இதை விளக்குவீர்களா, ஐயா? பாவத்துக்குக் கூலி மரணம் என்கிறது பைபிள்: இந்தச் சட்டமோ அந்தக் கூலி 30 ஷில்லிங் என்கிறதே!''

ராஜ யோக்கியதை

மைசூரில் 1775-ஆம் ௵ காலமான ஒரு ராஜாவுக்கு வாரிசைத் தேர்ந்தெடுக்க, ஒரு நூதன முறையை ஹைதராலி கையாண்டார். அரச வம்சத்துச் சிறு பையன்கள் பலரை ஸ்ரீரங்கபட்டினத்துத் தர்பார் மண்டபத்தில் கூட்டினார். பழம், மிட்டாய், பூ, பொம்மை, ஆயுதம், புத்தகம், நகை, பணப்பை இப்படிப் பற்பல பொருள்களையும் பையன்களின் முன் வைக்கச் செய்தார். ''குழந்தைகளே! உங்களுக்கு இஷ்டமானதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். பல பையன்கள் விழுந்தடித்துக்கொண்டு, தன் தனக்கு இஷ்டமான மிட்டாயும், பூவும், பழமும், பொம்மையும், புத்தகமுமாய் எடுத்துக்கொண்டார்கள். ஒரே ஒரு பையன் மட்டில், ஒரு கட்டாரியையும் கண்ணாடியையும் கையிலே தூக்கிக் கொண்டான். ''இவனே அரசன்'' என்று, அவனைச் சிம்மாசன மேற்றினார் ஹைதர். 1799-ஆம் ௵ திப்பு சுல்தான் வீழ்ச்சியுற்றபோது, அந்தப் பையனின் மகனுக்குத்தான், வெல்லஸ்லீ பட்டம் சூட்டினார்.

— ஆசிரியர்: லியோ டால்ஸ்டாய் —

மொழிபெயர்த்தவர்: சுப. நாராயணன்

(முன் தொடர்ச்சி)

இரண்டு நிமிஷநேரம் படைத் தலைவன் பேசவில்லை, பின்பு, "அதனாலேதான் நான் இளங் கன்று என்றேன். வரப்போவது இன்னது என்று தெரியு முன்பே சந்தோஷப்படுவதில் என்ன பயன்? பலமுறை வெளிக்கிளம்பி விட்டால், இதிலே சந்தோஷ மேற்படாது. இப்பொழுது நாம் இருபது உத்தியோகஸ்தர்கள் போகிறோம் என்று வைத்துக் கொள். சிலர் செத்துப் போவதோ காயப்படுவதோ நிச்சயம். இன்று என் முறை, நாளை அவன் முறை, அடுத்த நாள் இன்னொருவனுடைய முறை. ஆகவே, இதிலே மகிழ்ந்து பூரிப்படைவதற்கு என்ன இருக்கிறது?" என்று, மேலும் தழுதழுத்த குரலில் அவன் சொன்னான்.

III

நாங்கள் போய்க் கொண்டிருந்த பள்ளத் தாக்கின்மேல் சூரியன் கதிர் பரப்பத் தொடங்கிய உடனேயே, பள்ளத் தாக்கின் மேல் கவிழ்ந்து மூடிக்கொண்டிருந்த பனிப் படலம் சிதறுண்டு போய்விட்டது. அதனுடன் வெப்பமும் உண்டாகத் தொடங்கியது. தூசி படிந்த பாட்டை வழியே, முதுகில் துப்பாக்கியையும் சாமான் மூட்டையையும் சுமந்து கொண்டு போர்வீரர்கள் மெதுவாய் நடந்து சென்றார்கள். சிறிய ரஷ்யா என்று கூறப்படும் ரஷ்யப் பிரதேசத்துச் சிப்பாய்கள் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வதும், சிரிப்பதும் அடிக்கடி என் காதில் விழுந்தன. இரட்டுத் துணிச் சொக்காய் அணிந்திருந்த வயதான சிப்பாய்கள் சிலர், பாட்டையின் ஓரத்தில் குழாய்ப் புகை பிடித்த வண்ணம், எதையோ குறித்துச் சிரத்தையாய்ப் பேசிக் கொண்டு நடந்தார்கள். இவர்களிலே பெரும்பாலோர் சிறு படைத் தொகுதிகளுக்குத் தலைவர்

கள் அல்லது துணைத் தலைவர்கள். மூன்று குதிரை பூட்டிய சகடை வண்டிகள் மேகம் போலத் தூசியைக் கிளப்பிக்கொண்டு மெல்ல நகர்ந்து சென்றன. இந்த வண்டிகளின்மேல் அடுக்கடுக்காய் மூட்டைகள் மலைபோல ஏற்றப்பட்டிருந்தன. உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் முன்னாலே குதிரைமேல் போனார்கள். இவர்களில் சிலர் தங்கள் குதிரைகளைக் 'குதிப்பாட்டி'க் கொண்டே போனார்கள். அதாவது, குதிரைகளை நன்றாய்ச் சவுக்கால் அடித்து, நாலைந்து தடவை அவை குதித்துத் தாவும்படி செய்து, பின்பு சட்டெனக் கடிவாளத்தைப் பின்னுக்கு வெட்டி இழுத்து, அவற்றின் தலையை ஒரு பக்கமாய்ச் சரித்து நிறுத்துவார்கள். சிலர் பாடிக் களித்தார்கள். சகிக்க முடியாத உஷ்ணத்தைக் கூட அவர்கள் பொருட் படுத்தாமல், பாட்டின்மேல் பாட்டாக, ஒன்று முடிந்ததும் இன்னொரு பாட்டைப் பாடத் தொடங்கினார்கள். காலாட் படைக்குச் சுமார் முந்நூறு கஜம் முன்னாலே, தார்த்தாரியர்களது குதிரைப் படையின் நடுவே, பெரிய வெள்ளைக் குதிரை ஒன்றின்மேல் ஓர் உத்தியோகஸ்தன் சவாரி செய்து கொண்டு போனான். பட்டாளத்தில் இருப்பவர்களில் எல்லாம் அஞ்சா நெஞ்சு படைத்தவன் என்றும், யாரையும் நேரே நிமிர்ந்து பார்த்து மனத்தில் தோன்றியதை அப்படியே சொல்லி விடக் கூடியவனென்றும் பெயரெடுத்தவன் அவன். நெட்டையாய்ப் பார்வைக்கு நன்றாயிருப்பான். ஆசியாக்காரர் மாதிரி உடை அணிந்திருந்தான். ஓரக் கரையில் பூவேலை செய்த கறுப்புச் சொக்காயும் அதற்குப் பொருத்தமான கால் சராயும் போட்டிருந்தான். மிக்க வேலைப் பாட்டுடன் பூப்போட்டிருந்த மூடு செருப்புக்கள் இறுக்கமாய்க் காலைப் பிடித்துக்கொண்டிருந்தன. இள ஆட்டுத் தோலாலான மஞ்சள் நிற மேற்சட்டையுடன், அவனது தலையில் உயரமான ஆஸ்ட்ரகான் குல்லாய் ஒரு பக்கம் சாய்வாய்ப் பொருந்தியிருந்தது. மார்பிலும் முதுகிலும் ஜரிகை நாடா தைத்திருந்தது. மார்பு நாடாவில் வெடி மருந்துப் புட்டி செருகப்பட்டிருந்தது. முதுகு நாடாவில் கைத்துப்பாக்கி மாட்டியிருந்தது. இடுப்பு வாரிலிருந்து இன்னொரு கைத் துப்பாக்கியும், வெள்ளி உறை போட்ட பிச்சுவாவும் தொங்கின. ஓரத்தில் பூவேலை செய்த சிவப்பு நிறமுள்ள நயமான தோல் உறை போட்ட உடைவாளை, இவை எல்லாவற்றுக்கும் மேலே கோத்துப் போட்டிருந்தான். தோள்மேலே கறுப்பு உறை போட்ட ராணுவத் துப்பாக்கியைத் தொங்க விட்டிருந்தான். அவனுடைய நடையுடை எல்லாம் அவன் ஒரு தார்த்தாரியனைப்போல ஆகப் பார்க்கிறான் என்பதைக் காட்டின. கூட வந்த தார்த்தாரியர்களோடு எனக்குப் புரியாத பாஷையில் என்னென்னவோ சொன்னான். அவர்கள், தமக்குள் ஒருவரை ஒருவர் ஏளனமாய்ப் பார்த்து விழித்துக் கொண்டிருந்ததிலிருந்து, இவன் சொன்னதை அவர்களும் புரிந்து கொள்ளவில்லை என்று தெரிந்து

கொண்டேன். இவன் ஓர் இளம் **உதவிப் படைத் தலைவன்** (லெப்டினன்ட்). குதிரைப் பாய்ச்சல் பாயும் வீரர் ரகத்தைச் சேர்ந்தவன். **மார்லின்ஸ்கி, லெர்மண்டவ்,** இவர்களைப்போல் பெயரெடுக்க வேண்டு மென்று ஆசைப்படுபவன். இந்தமாதிரி மனிதர்கள், காக்கசஸைச் சாதாரணக் கண் கொண்டு பார்க்க மாட்டார்கள். **முல்லா நூர்** முதலியவர்களுடைய 'எங்கள் காலத்து வீரர்க' ளின் முக்கோணக் கண்ணுடிகள் மூலமாகத்தான் அவர்கள் அதனைப் பார்ப்பார்கள். மேலும், அவர்களின் செயல்கள்கூட ஒவ்வொன்றும் அவரவரது மனோதர்மப்படி நடைபெறுமல், மேற்கண்ட வீரோத்தமர்களையே பின்பற்றியவையா யிருந்தன.

இந்த உதவித்தலைவனும் இதற்கு ஓர் உதாரணம். பெண்கள், பெரிய மனிதர்களின் கூட்டுறவை இவன் மிகவும் விரும்புகிறவன் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், அவன் நிரம்பப் பெருமைக்காரன். ஆனலும், பெரிய நிலைமையி லுள்ளவர்களிடமெல்லாம் முரட்டுத் தனமாய் நடந்து கொள்ள வேண்டியது தன் கடமை என்ற எண்ணம் எப்படியோ அவன் மனத்தில் விழுந்து விட்டது. ஆனல், அவன் காட்டிய முரட்டுத்தனமோ அத்தனை 'காரியமான' முரட்டுத் தனமுமல்ல. கோட்டைக்கு யாராவது சீமாட்டி வந்தால், அவளுக்கு முன்பாக, தான் நண்பர்களுடன் பவனி செல்லவேண்டியது தன் கடமை என்று நினைத்துக் கொள்வான். உடம்பிலே சிவப்பு நிற நெடுஞ் சட்டை மட்டும் போட்டுக்கொண்டு, காலில் வீட்டுக்குள் போட்டு நடக்கும் செருப்புடன் புறப்பட்டு விடுவான். இந்தக் கோலத்தோடு, சீமாட்டிக்குத் தெரியும்படி, அவள் தங்கியிருக்கும் அறைச் சன்னலின் பக்கத்தில் உச்சத் தொண்டையில் இரைச்சல் போட்டுக்கொண்டே போவான். அவமரியாதை பண்ண வேண்டு மென்பதற்காக, அவன் இதெல்லாம் செய்வதில்லை. தன் வெண்மையான உடலழகின் உயர்வை வந்திருப்பவளுக்குக் காட்டி, தான் விரும்பினல் அவள் காதலுக்குத் தான் எவ்வளவு எளிதாக இலக்காகக் கூடும் என்பதைப் பிறருக்குத் தெரியப் படுத்துவதற் காகவே தான், அவன் அப்படி நடந்து கொண்டான்.

அடிக்கடி இரவில் கிளம்பிவிடுவான். சாதுவான இரண்டு மூன்று தார்த்தாரிகளைத் தன் கூட இட்டுச் செல்வான். ஒளிந்திருந்த வண்ணம், எதிரித் தார்த்தாரிகள் யாராவது அந்த வழியே போனல், மடக்கிக் கொண்டு உயிரை வாங்கிவிடுவான். இப்படிச் செய்வது வீரச் செயல் அல்லதான் என்பது அவனுக்குத் தெரியாமலில்லை. ஆனல், என்ன காரணத்தினலோ, மனிதர்கள் மீது அவன் மனஸ்தாபம் உடையவனகத் தன்னைப் பாவித்துக் கொண்டு, அவர்களைத் துன்புறுத்தியே ஆகவேண்டும் என்று எண்ணினன். தான் மனிதர்களை வெறுப்பதாகவும் அலக்ஷியமாக எண்ணுவதாகவும், அடிக்கடி கூறிக்கொண்டான். அவனது உடம்பைவிட்டு அகலாத பொருள்கள் இரண்டு. கழுத்திலே சற்

றுப் பெரிய விக்கிரகம் ஒன்று தொங்கும். சட்டைமேலே ஓர் ஈட்டி தொங்கும். படுத்திருக்கும் போதுகூட ஈட்டியை அப்பால் கழற்றி வைக்கமாட்டான். தனக்கு எதிரிகள் இருந்ததாக, அவன் மெய்யாகவே நம்பினான். யாரையாவது பழிக்குப் பழி வாங்கி, தனக்கு எவன் அவமரியாதை இழைத்தானோ அவனுடைய ரத்தத்தாலேயே அதனைக் கழுவிவிட வேண்டுமென்று தனக்குத் தானே ஆவேசமூட்டிக் கொள்வதில், அவனுக்கு மிகுந்த உற்சாகம். மனித சமுதாயத்தின் மேல் குரோதங் கொண்டு, அதை அவமதித்துப் பழிவாங்குகிற உணர்ச்சிதான் கவிதை நிரம்பிய உன்னத எண்ணம் ஆகும் என்பது அவனுடைய முடிவான நம்பிக்கை. இப்படி இருந்துங் கூட, அந்த ரங்கத்தில் இவன் மிகவும் பட்சமானவன் என்றும், தினசரி தன்னுடைய இருண்ட எண்ணங்களை ஒரு குறிப்புப் புத்தகத்தில் கிறுக்கிவிட்டு, ஒழுங்காய்க் கோடிட்ட தாளில் வரவு செலவுக் கணக்கை முறையாய் எழுதி வைப்பானென்றும், இரவு தூங்கு முன்பு கடவுள் வணக்கம் செய்வானென்றும், இவன் காதலி ஒரு நாள் என்னிடம் சொல்லியிருக்கிறாள். அவள் செர்க்கேசியா நாட்டுப் பெண். பின்னால் அவளுடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தபோது, மேலே சொன்ன விவரங்களைத் தெரிந்து கொண்டேன். பாவம், தான் நினைக்கிற மாதிரி இருப்பதற்காக, அவன் என்ன மனவேதனைக்குள்ளாகியிருக்கவேண்டும்! அவன் விரும்புகிற மாதிரி அவனுடைய தோழர்களும் இதர சிப்பாய்களும் அவனை நடத்தவில்லை. ஒருநாள் இரவில் தன் தோழர்களோடு அவன் சுற்றித் திரிந்தபோது, எதிரி ஒருவனைச் சுட்டுக் காயப் படுத்திவிட்டான். அவனைக் கட்டிக்கொண்டு வந்து தன்னோடு ஏழு வாரம் வைத்திருந்து, தன் அருமை நண்பனைக் காப்பதுபோல் காத்து வந்தான். காயம் பூராவும் ஆறியதும், அவனுக்கு ஏராளமான பரிசுகள் கொடுத்து வீட்டுக்கு விரட்டிவிட்டான். பின் ஒரு தடவை, எதிரிப் படையின் தாக்குதலுக்கு முன் நிற்க மாட்டாமல், அவனுடைய படை பின்வாங்க நேர்ந்தது. அப்போது அவர்கள் துப்பாக்கியினால் எதிரிகளைச் சுட்டுக் கொண்டே பதுங்கிப் பதுங்கிச் சென்றார்கள். அதற்கிடையே எதிரிகளில் ஒருவன், உதவிப் படைத் தலைவனைப் பெயர் சொல்லி அழைத்தான். சற்று நேரத்துக்கு முன் காயம் பட்டு விடுதலையான அவ் வீரன், மற்றவர்களைப் பின்னே விட்டு விட்டுத் தான் தனியே முன்னுக்கு வந்து நின்றுகொண்டு, உதவிப் படைத் தலைவனையும் அவ்வாறே செய்யும்படி சமிக்ஞை செய்தான். உதவித் தலைவன் உடனே அவனிடம் போய், அவனுடன் கை குலுக்கினான். மலை நாட்டார்கள் தூரத்திலேயே விலகியிருந்தபடி இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தார்களே யல்லாமல், அவன்மேல் சுடவில்லை. ஆனால், உதவித் தலைவன் தன் குதிரையைத் திருப்பிக் கொண்டு கிளம்பிய உடனே பலர் அவன்மேல் சுட்டார்கள். ஒரு குண்டு முதுகை உரசினாற்

M211,N36,5
N42.7.2

போலச் சீறிக்கொண்டு சென்றது.

இன்னொரு நிகழ்ச்சியை என் கண்ணாலேயே பார்த்தேன். ஒரு நாள் இரவு கோட்டையில் தீப் பிடித்துக் கொண்டது. நெருப்பை அணைக்க, இரண்டு அணிகளைச் சேர்ந்த சிப்பாய்கள் ஏவிவிடப் பட்டிருந்தார்கள். 'திடும்' எனக் கூட்டத்தின் மத்தியில் கன்னங் கறே லென்று கறுத்திருந்த குதிரை மேல் உயரமான ஆள் ஒருவன் வந்து சேர்ந்தான். தீ கொழுந்து விட்டெரிந்ததால், எங்கும் வெளிச்சமா யிருந்தது. கூட்டத்தைக் கடந்து நெருப்பண்டை அவன் சென்றான். நெருப்புக் கிட்ட வந்ததும் குதிரையிலிருந் திறங்கி, எரிந்து கொண்டிருந்த வீட்டுக்குள் ஓடினான். ஐந்து நிமிஷம் பொறுத்து அவன் வெளியே வந்தான். தலைமயிர் பொசுங்கி யிருந்தது. கைகள் வெந்து போய்விட்டன. நெருப்பிலிருந்து காப்பாற்றிய இரண்டு புறாக்களை மேற் சட்டைக்குள் பொத்தி வைத்துக்கொண் டிருந்தான்.

இவன் பெயர் ரோசன்கிரான்ஸ் ஆகும். தனது பரம்பரை அசல் ரஷ்ய மரபைச் சேர்ந்ததுதான் என்று இவன் அடிக்கடி சொல்லிக் கொண்டான்.

IV

உச்சி வெயில் சாயும் நேரம். கொதித்து, ஆவி கக்கிக்கொண் டிருந்த காற்றினூடே, உலர்ந்து விரிந்துபோன நிலத்தின்மீது சூரியன் தன் நெருப்புக் கிரணங்களைக் கொட்டிக்கொண் டிருந்தான். கருநீல வானம் தெளிவு பெற்றிருந்தது. பனி படிந்த மலைகளின் அடிவாரங்களில் மட்டுமே வெண்சிவப்பு நிறமுடைய மேகங்கள் ஒன்று சேர்ந்துகொண் டிருந்தன. காற்று அலுங்காதிருந்தது; கண்ணாடிப் பொடி தூவிய மாதிரி பசபசத்தது. உஷ்ணம் சகிக்க முடியவில்லை. பாதி வழி கடந்ததும், ஓர் ஓடையருகே, படைகளைப் பாறத் தங்கியது. சிப்பாய்கள் தங்கள் துப்பாக்கிகளை இரண்டு மூன்றாய்க் கட்டிச் செங்குத்தாக நிறுத்தி வைத்து விட்டு, நீரோடைக்கு ஓடினார்கள். படையை நடத்தும் அதிகாரி நிழலில் ஓர் முரசின் மேலே உட்கார்ந்து கொண்டான். அவனுடைய முகத்தில் அதிகாரக் களை தெளிவாய்த் தெரிந்தது. தன் உத்தியோகஸ்தர்களோடு, அவன் சாப்பிட உட்கார்ந்தான். அணிவகுப்பைச் சேர்ந்த சாமான் வண்டிக்குக் கீழே புல்லின் மேலே படைத் தலைவன் படுத்திருந்தான். உதவிப் படைத் தலைவனான வீரன் ரோசன் கிரான்ஸும், இன்னும் சில வாலிப உத்தியோகஸ்தர்களும் தங்கள் நெடுஞ் சட்டைகளைக் கீழே போட்டு, அவற்றின் மேல் காலை மடக்கி உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். களியாட்டம் நடக்கப்போகிற மாதிரி காணப்பட்டது. சாராயப் புட்டிகளும் கிண்ணங்களும் நிறையப் பரப்பிக்கிடந்தன. பாடகர்களும் உற்சாகத்தோடு சூழ்ந்து நின்றார்கள். ஒரு பெண் காக்கசஸ் நாட்டு நடனப் பாட்டுப் பாடினாள். மற்றவர்கள், பாட்டுக்கு ஒத்துச் சீழ்க்கை அடித்துக் கொண்டும், ஆடிக்கொண்டும் இருந்தார்கள். அவள் பாடியது பின் வருமாறு:

88829

சூழ்ந்தான் கலகம் ஷாமிலெனச்
சொல்சில ஆண்டுகள் முன்னாக!
தாந்தாந் தாந்தாந் தனதனதாம்
சொல்சில ஆண்டுகள் முன்னாக!

காலையிலே எங்களைக் கடந்து சென்ற வாலிபக் கொடிக்காவலனும் அங்கிருந்தான். அவனைப் பார்க்க வேடிக்கையா யிருந்தது. எல்லாரையும் கட்டியணைத்துத் தன் அன்பைத் தெரிவித்துக் கொள்ள, அவன் துடித்துக் கொண் டிருந்தான். சின்னப் பிள்ளை, பாவம்! இப்படி எண்ணுவது நையாண்டிக்கிடமாகும் என்பதை அவன் இன்னும் உணராமல், வெள்ளைத்தனமாக, மனதைத் திறந்து தன் அன்பை வெளிப்படையாய்க் காட்டிக் கொண்டான். மற்றவர்கள் தன்னை ஏளனம் செய்வார்களே என்று அவன் நினைக்கவில்லை. தன்னிடம் எல்லாரும் அன்பு காட்டுவார்கள் என்றே, தவருக எண்ணினான். தன் மேற்சட்டையைக் கீழே விரித்து, அதன்மேல் கையை ஊன்றிச் சாய்ந்து கொண்டான். கறுத்தடர்ந்த தலைமயிரைப் பின்புறமாக ஒதுக்கிவிட்டுக் கொண்டான். அப்பொழுது தன்னைப் பார்க்க எவ்வளவு அழகாயிருந்தது என்பதை அவன் அறியவில்லை.

இரண்டு உத்தியோகஸ்தர்கள் ஒரு சகடை வண்டியின் கீழே, பீப்பாய் ஒன்றின்மேல் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.

சிப்பாய்களும் உத்தியோகஸ்தர்களும் பேசிக்கொண் டிருந்ததை நான் கவனித்து, அவர்களின் முகத்தோற்றத்தை உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தேன். ஆனால், அவர்களில் ஒருவனது முகத்திலேகூட எனக்கிருந்த அமைதியின்மையின் குறியைக் காணக்கூட வில்லை. தமாஷ் பேச்சுக்களும், சிரிப்பும், கதையும்—எல்லாம் ஒரேவித ரகளைதான். எதிரே நிற்கும் ஆபத்தை அவர்களில் யாரும் பொருட்படுத்த வில்லை. இந்தப் பாதை வழியே இவர்களில் பலர் திரும்பிவராமலே ஒழிந்து போய் விடக்கூடு மென்பதை எவரும் நினைத்துப் பார்த்ததாக, எனக்குப் புலப்படவில்லை.

V

இரவு ஏழு மணிக்கு, களைத்துத் தூசி படிந்து, ந— கோட்டையை அடைந்தோம். சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். கோட்டைமேல் இருந்த ரம்மியமான பீரங்கி வரிசைகள், உயரமான **போப்லார்** மரங்கள் நிரம்பிய தோப்புக்கள், சாகுபடி செய்த மஞ்சள் நிறமான புலன்கள் — இவற்றின் மேலே எல்லாம் மறையும் சூரியனுடைய பொற் கிரணங்கள் சாய்வாய்ச் சரிந்து விழுந்து கொண்டிருந்தன. பனிமலைகளைப் போலவே தாமும் ஆகிவிட வேண்டுமென்பது போல, வெண்மையான மேகக் கூட்டங்கள் மலைகளிடத்தே போய் ஒதுங்கிப் பதுங்கின. இவை நீள நெடுக மண்டிப்போய்க் கோவை பெறக் கிடந்த தோற்றமும் இவற்றின்மேலே சாய்வாய்ச் சூரியனின் பொற் கிரணங்கள் படிந்து வர்ணந் தீட்டிய தன்மையும், அழகாகவும் அதிசயமாகவும் இருந்தது. அடிவானத்திலே இளம் பிறை முளைத்தது. அது ஸ்படிகத்தாலான மேகத் துண்டம்

போல் இருந்தது. கோட்டைக்கு அருகில் ஒரு தார்த்தாரியக் குடியிருப்புக் காணப்பட்டது. குடிசை ஒன்றின் கூரை மீதேறிக்கொண்டு தன் சமயத்து அடியார்களைத் தொழுகைக்கு அழைக்கிறான் முஸ்லீம் தார்த்தாரியன் ஒருவன். எங்கள் பாடகர்களும் களைப்புத் தீர்ந்து விட்ட படியால், ஊக்கத்தோடு பாடக் கிளம்பிவிட்டார்கள்.

கொஞ்சம் ஓய்வு கொண்டபின், உடம்பைச் சுத்தம் பண்ணிக் கொண்டேன். தளபதியைக் கண்டுபேச விரும்பினேன். அவருடைய உதவி அதிகாரியைப் பார்த்துமுன்னேற்பாடுசெய்வதற்காக, அவ் அதிகாரியைத் தெரிந்த என் நண்பனொருவனை நாடிச் சென்றேன். ஊரின் வெளிப்புறத்தில் நான் தங்கியிருந்த இடத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் அந்தக் கோட்டையில் நான் காண நினைக்காத காட்சிகளைக் கண்டேன். இருவருக்கான அழகிய குதிரைவண்டி ஒன்றில் நாகரிகத் தொப்பியைக் கண்டதோடு, அரை குறைப் பிரஞ்சு மொழியையும் கேட்டேன். கோட்டைத் தலைவனின் வீட்டிலிருந்து இசை குலைந்த பியானோவில் யாரோ வாசித்த சத்தம் வந்தது. காப்பிக் கடை ஒன்றில் சில குமாஸ்தாக்கள் ஒயின் குடித்துக்கொண்டு கையில் சிகரெட்டோடு, ஏதோ அரசியல் பேச்சில் "அல்ல, அல்ல, **மேரியாகி, ரெகோரியெளனு**தான் நம் பெருந் தலைவி" என்றிவ்வாறு மும்முரமாய் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அழுக்குச் சட்டையோடு, கூனல் விழுந்து, நோஞ்சலாய்க் காணப்பட்ட ஒரு யூதன், உடைந்து பாழாய்ப்போன கிசுமுசுப் பெட்டியை இரண்டு கையாலும் இழுத்து வாசித்துக் கொண்டிருந்தான். அதுபோட்ட விரசமான சத்தம் நாற்புறமும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. இரண்டு ஸ்திரீகள் ஒய்யார உடையில் சரசர வென்று என்னைக் கடந்து, மரத்தினால் செய்யப்பட்ட அஞ்சடிப் பாதையில் சென்றார்கள். தலையில் அவர்கள் பட்டு லேஞ்சுகள் கட்டி யிருந்தார்கள். கையில் சிறு வர்ணக் குடை பிடித்திருந்தார்கள். தாழ்ந்த வீடொன்றின் முன் இரண்டு குமரிகள் நின்று, வழியில் போகும் உத்தியோகஸ்தர்களின் கவனத்தைக் கிரகிக்கும் வண்ணம் அசட்டுத்தனமாய்ச் சிரித்துக்கொண் டிருந்தார்கள். ஒருத்தி சிவப்பு ஆடை அணிந்திருந்தாள்; மற்றவள் நீல உடை உடுத்தியிருந்தாள். தலையில் ஒன்று மில்லை. புது மேற்சட்டைகளும், வெண்மையான கையுறைகளும், பளபளப்பான தோள் வில்லைகளும் அணிந்து கொண்டு, உத்தியோகஸ்தர்கள் சந்து பொந்துகளிலும், தெருக்களிலும் ஆர்ப்பாட்டமாய்ப் பவனி போய்க்கொண்டிருந்தார்கள்.

என் நண்பன், தளபதியின் வீட்டில் கீழ்த் தளத்தில் தங்கியிருந்தான். என் விருப்பத்தை அவனிடம் சொன்னேன். தளபதியைப் பார்க்கச் சுலுவில் ஏற்பாடு செய்து விடலாம் என்று அவன் பதில் சொன்னான். மேலே ஏதும் பேசுவதற்குள், முன் வாயிலில் நான் கண்ட நேர்த்தியான குதிரை வண்டி நாங்கள் அமர்ந்திருந்த

சன்னல் பக்கமாகச் சென்றது. நெட்டையாய்த் தேகக் கட்டு அமைந்த ஓர் ஆள் அதிலிருந்து கீழே இறங்கித் தளபதி இருக்குமிடத்தை நோக்கிச் சென்ருன். அவன், காலாட் படைக்குரிய உடையையும் மேஜர் பதவிக்குரிய தோள் வில்லைகளையும் அணிந்திருந்தான்.

"மன்னித்துக் கொள். தளபதியிடம் தகவல் சொல்ல வேணும்" என்று சொல்லிக் கொண்டே, தளபதியின் உதவி அதிகாரி கிளம்பினுன்.

"வந்திருப்பது யார்?" என்று கேட்டேன்.

"சீமாட்டி (Countess) வந்திருக்கிருள்" என்று பதிலளித்துவிட்டு, உடையைச் சரிப்படுத்திக் கொண்டு, மேல் மாடிக்கு ஓடினுன்.

சில நிமிஷ நேரத்தில், உயரங் குறைந்த, ஆனல் லக்ஷணமான ஆள் ஒருவன் படிக்கட்டில் வந்து நின்ருன்.

அவனும் தோள்வில்லையும் கழுத்துப் பட்டையில் ஒரு வெண்மையான சிலுவைச் சின்னமும் அணிந்திருந்தான். அவனுக்குப் பின்னலே மேஜரும், தளபதியின் உதவி அதிகாரியும், இன்னும் இரண்டு உத்தியோகஸ்தர்களும் வந்தார்கள். உயரங் குறைந்த நபர்தான் தளபதி என்பது, அவனுடைய கம்பீர நடையிலிருந்தும் குரலிலிருந்தும் தெளிவாய்த் தெரிந்தது. அவன் தன்னுடைய பதவியின் உயர்வைப் பற்றிப் பெருமை கொண்டவன் என்பது தோற்றத்தில் நன்கு தெரிந்தது.

வண்டியருகே போய், வண்டியின் ஜன்னலுக்குள் கையை நீட்டிக்கொண்டு, உபசார வார்த்தைகள் கூறி வரவேற்ருன் தளபதி.

உயர்தரமான கையுறை அணிந்த கரம் ஒன்று தளபதியின் கரத்தைப் பரிவோடு பற்றியது. புன்சிரிப்புத் தவழ்ந்த அழகிய முகம் ஒன்று வண்டிச் சாளரத்தில் காட்சி தந்தது.

பல நிமிஷநேரம் பேச்சு நடந்தது. என் காதில் விழுந்தவை இரண்டொரு சொற்கள் மட்டுமே.

ஒரு சமயம் தளபதி சிரித்துக் கொண்டு பிரஞ்சு மொழியில், "நம்பாத துரோகிகளை வேரறுப்பதென்று நான் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறேன். நீயும் அவர்களில் ஒருத்தியாகிவிடாதே, உஷார்!" என்று கூறினுன்.

வண்டிக்குள்ளிருந்து கலகல வென்று சிரிப்புக் கிளம்பிற்று.

"சரி. நான் போய் வருகிறேன்."

"என்ன, பயணமா சொல்லிக் கொள்ளுகிருய்? நாளை மாலை உன் வீட்டுக்கு அழையா விருந்தாக வருகிறேன், மறந்து விடாதே!" என்று சொல்லியபடி வீட்டுக்குள் திரும்பினுன்.

வண்டி நகர்ந்தது.

(தொடரும்)

அவள் ஒரு கதாசிரியை; புது வாழ்வு பெறுகிறாள். தன்னை இழக்கிறாள். ஆனால், என்ன புதிய இன்பானுபவம்!

மனைவி

ஸரோஜா

[நிலவின் ஒளி விழும் ஜன்னல் ஓரத்தில், மேஜை அருகில் பிரபா உட்கார்ந்து கதை எழுதிக் கொண்டிருக்கிறாள். அவளது வனப்பு அந்த நிலவில் அபூர்வமாய் இருக்கிறது. அவளுடைய கணவன் அப்பொழுதுதான் நண்பர்களுடன் ஆங்கிலப் படம் ஒன்றுக்குப் போய்விட்டு, உள்ளே வருகிறான்.]

ராமச்சந்திரன்: ஹல்லோ, பிரபா! இன்னும் தூங்கலையா நீ? இதென்ன ஓயாமல் எழுத்து?

பிரபா (புன்னகையுடன்): என்ன எழுத்தா? இப்பொழுது சொல்ல முடியாது, ஸார்.

ராமச்சந்திரன்: (அவளருகில் சென்று உட்கார்ந்து) நமக்குக் கல்யாணம் நடந்து எத்தனை மாதங்கள் ஆகின்றன? சொல்லட்டுமா, பிரபா? மார்ச், ஏப்ரல், மே........

பிரபா: கொஞ்சம் பேசாமல் இருங்களேன்; இதை முடித்து விடுகிறேன்.

ராமச்சந்திரன்: (அவளுடைய முகத்தைப் பரிவுடன் திருப்புகிறான்) மே மாதம் அல்லவா இப்பொழுது? வஸந்த ருதுத்தானே? என்ன பேச மாட்டேன் என்கிறாய்? என் மனதின் தாபம் தெரியாமல் நீ ஏதோ எழுத ஆரம்பித்து விடுகிறாயே!

பிரபா: (சிரித்துக் கொண்டே அவனிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்) கொஞ்சம் இருங்கள். கதை உடனே அனுப்பும்படி ஆசிரியர் எழுதியிருக்கிறார். இன்னும் இரண்டு மணியில் முடிந்துவிடும். பிறகு பேசிக் கொள்ளலாமே?

ராமச்சந்திரன்: 'கதை', 'கதை' என்று கதைக்கத்தான் தெரியும் உனக்கு. உன் கதைப்பில் மயங்கித்தானே நான் திண்டாடுகிறேன். இன்றைக்குப் படம் ரொம்ப ஜோர். மணியின் மனைவி கூட வந்திருந்தாள். 'கதை எழுதுகிற பித்துக்குள்ளியைப் போய்ப் பிடித்தாயேடா' என்று கேலி செய்தாள். நீ வராமல் எனக்கு என்னவோ போல் இருந்தது.

[பிரபா பதில் பேசாமல் எழுதிக்கொண்டிருக்கிறாள்.]

ராமச்சந்திரன்: (வேடிக்கையாக அவளது பேனாவைப் பிடுங்கிக் கொள்ளுகிறான்) நீ என்னுடன்

சரியாய்ப் பேசினல்தான் பேனுவைத் தர முடியும். இல்லாவிட்டால் முடியாது.

பிரபா : பேசாமல் இருக்கிறேனு? எழுதும்போது தொந்தரவு செய்யாதீர்கள். கதை வேண்டுமென்று அவர் கேட்டிருக்கும்போது, தாமதப்படுத்துவது மரியாதையா?

ராமச்சந்திரன் : (கொஞ்சலாக) உன்னைப்போல் அழகான மனைவி அவருக்குக் கிடைத்திருந்தால், ஆசிரியரால் உத்தியோகம் செய்ய முடியாது, தெரியுமா? உலகத்தில் எதையும் கவனிக்காமல், அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விடுவார்.

[அவன் பேசிக்கொண்டிருக்கும்போது, பேனுவை விரல்களுக்கிடையிலிருந்து பிரபா எடுத்துக் கொள்கிருள். பிறகு சிரித்துவிட்டு, எழுத ஆரம்பிக்கிருள்.]

ராமச்சந்திரன் : (சற்றுக் கோபமாக) நான் ஆபீஸிலிருந்து வரும்போதெல்லாம் கதை, கதை! எழுத்து, எழுத்து!! கொஞ்ச நேரமாவது உல்லாசமாய் இருக்க முடிவதில்லை. தூ!

பிரபா : என் கோபித்துக் கொள்கிறீர்கள்? கல்யாணம் ஆவதற்கு முன், என்னிடம் என்ன சொன்னீர்கள்? 'உன் கதைகளைப் பத்திரிகைகளில் படித்து மயங்கிவிட்டேன்' என்று சொன்னீர்களே? நான் மட்டும் அதைக் கேட்டு மயங்கிவிடவில்லை. 'கதை எழுதும்போது தொந்தரவு பண்ணக் கூடாது' என்று வாக்குறுதி வேறு வாங்கியிருக்கிறேன்......ஹூம்......... தெரியுமா?

ராமச்சந்திரன் : தெரியும், தெரியும், பிரபா! நீ பார்வைக்கு இளங்கொடியைப் போல் மிருதுவாய் இருந்தாலும், உன் மனது மட்டும் கல்லைவிடக் கடினமாய் இருக்கிறது. எப்பொழுதுமே வெளி அழகைக் கண்டு மயங்கக் கூடாது.

பிரபா : (சிரித்துக்கொண்டே) அதைத்தான் நானும் சொல்கிறேன். 'பிரபா! நீ அழகு. நீ சிரித்தால், நான் மெய்மறந்து போய் விடுகிறேன்' என்று நீங்கள் சொல்லக்கூடாது. என்னிடத்தில் என்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்று தெளியவேண்டும்.

ராமச்சந்திரன் : (கேலியாக) புருஷனை மகிழ்விக்காமல், ஊரில் நல்ல பெயர் எடுப்பதில் என்ன லாபம்? உன்னைப் போற்றவேண்டியவன் நான்தானே?

பிரபா : என்னை நீங்கள் நன்ருக அறியவில்லை. தேனின் சுவையைச் சிறிது சிறிதாகச் சுவைக்காமல், தேன் பாத்திரத்தில் விழும் ஈயைப்போல்......

ராமச்சந்திரன் : (கோபத்துடன்) உன் அழகில் நான் ஒன்றும் மயங்கிவிடவில்லை. பெண்களுக்கே, கொஞ்சம் தெரிந்தவுடன் கர்வம் ஏற்பட்டுவிடுகிறது.

பிரபா : (கண் கலங்க) பெண்கள் மட்டும் புருஷர்கள் கையில் அகப்பட்ட பொம்மைகளா? நீங்கள் வேலை செய்யும்போது, எங்களால்—என், ஒன்று மறியாத

சிசுவின் அழுகையைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாமல் கோபப்படுகிறீர்களே!

[ராமச்சந்திரன் வெறுப்புடன் நிலவைப் பார்த்தவாறு உட்கார்ந்திருக்கிறான்.]

ராமச்சந்திரன்: கல்யாணம் நடந்து மூன்று மாதங்கள் ஆகின்றன. ஒரு மாதமாவது நீ என்னுடன் சிரித்துப் பேசியிருக்கிறாயா? சொல்.

பிரபா: நினைத்தவுடன் ஒரு வேலை முடியாவிட்டால், வாழ்க்கை பூராவும் ஏமாந்துவிட்டதாக ஏன் கற்பித்துக்கொள்கிறீர்கள்? விவாகமான இரண்டு தினங்களுக்கெல்லாம் மைசூர் போகவில்லையா? காவிரியில் படகில் எத்தனை இரவுகள் களிப்பாய்ச் சென்றிருக்கிறோம்? மறந்துவிட்டதா?

ராமச்சந்திரன்: ஆமாம், படகிலும் கற்பனையையும் கதையையும் பற்றித்தான் பேச்சு!

பிரபா: (புன்சிரிப்போடு) என்னைக் கண்டு மயங்கத் தெரிகிறதே தவிர, உங்களுக்கு என் கருத்துக்களைக் கண்டு மயங்கத் தெரியவில்லை.

ராமச்சந்திரன்: (படபடப்புடன்) நாளை முதற்கொண்டு என் உத்தரவு இல்லாமல் நீ எந்தப் பத்திரிகைக்கும் கதை எழுதக்கூடாது. என் ஆனந்தம் குறைவது அவர்களுக்குத் தெரியுமா?

பிரபா: நாளையிலிருந்துதானே? இப்பொழுது இல்லையே? அடக்குமுறை பிரமாதமாக இருக்கிறதே!

ராமச்சந்திரன்: உண்மையாகத்தான், பிரபா! கேலியல்ல. இனிமேல் உன் இஷ்டப்படி நடக்க உன்னை நான் விடப்போவதில்லை.

[கையிலிருந்த பேனாவை எடுத்துக்கொண்டு, விளக்கை அணைக்கப்போகிறான்.]

பிரபா: (கெஞ்சும் குரலில்) வேண்டாம். சினிமாப் பார்த்துவிட்டு வந்த வேகமா இது? அப்புறம் நானும் வருகிறேன். இரண்டு பேருமாக நடிக்கலாம்.

ராமச்சந்திரன்: (பதற்றத்துடன்) நான் சொல்லச் சொல்லத் தைரியமா உனக்கு? (கதை எழுதிய தாள்களைக் கிழித்துப் போடுகிறான்.)

[பிரபா கண்ணீர் வழியப் படுக்கையில் போய்ப் படுத்துக்கொள்கிறாள். ஒரே மௌனம். எங்கிருந்தோ ரேடியோவில் நல்ல சங்கீதம் கேட்கிறது. மாலையில் ராமச்சந்திரன் வாங்கி வந்த மல்லிகைப் பூவின் மணம் 'கம்' மென்று வீசுகிறது.]

ராமச்சந்திரன்: (அறையில் உலவிக்கொண்டே) சொன்னால் கேட்பதில்லை. உடம்பு இளைத்துத் துரும்பாய்ப் போகிறது. சதா மூளைக்கு வேலை கொடுத்து நாசஞ் செய்துகொள்ளுகிறாள் உடம்பை.

[நிலவின் வெளிச்சம், கண்ணீர் வழியும் பிரபாவின் முகத்தில் விழுகிறது. தாம்பூலத்தால் சிவந்த உதடுகள், துக்கம் தாங்காமல் துடிக்கின்றன.]

ராமச்சந்திரன்: (கட்டில் அருகில் சென்று குனிந்து) பிரபா!

உன்னை நான் என்ன செய்தேன்? என் விரல்கூட உன்மேல் பட வில்லையே. ஏன் இப்படி அழு கிறாய்?

[மௌனம்]

ராமச்சந்திரன்: என்னைப் பாரேன். முதன் முதலில் உன்னைப் பார்த்த அன்றையிலிருந்தே, என் வாழ்க்கையை உன்னைத் தவிர வேறு யாராலும் பிரகாசிக்க வைக்க முடியாது என்று தீர்மானித்து விட்டேன். பேச மாட்டாயா?

பிரபா: விளக்கைத் திரை போட்டு மறைக்கிறீர்களே! பிரகாசம் எங்கிருந்து உண்டாகும்?

ராமச்சந்திரன்: நான் என்ன செய்தேன்?

பிரபா: (நீர் வழியும் கண்களால் அவனை ஏறிட்டுப் பார்க்கிறாள்) பசுவை விட்டுக் கன்றை பிரிப்பது போல், நான்.........

ராமச்சந்திரன்: (அவளுடைய கையைப் பிடித்து) பசுவை விட்டுக் கன்றையா? உண்மையாகவா, பிரபா? இன்னும் எத்தனை மாதத்தில் எனக்குப் 'பரிசு' கிடைக்கப் போகிறது?

பிரபா: (கைகளை விடுவித்துக் கொண்டு) போங்கள். உங்களைப் போல் நான் கண்டதே யில்லை. நான் ஒன்று சொன்னால், நீங்கள் ஒன்று சொல்வது? என் கதை எனக்குக் குழந்தையைப் போலத் தானே?

ராமச்சந்திரன்: இதுதானா! வேறு என்னவோ நினைத்தேன்.

பிரபா: கற்பனை திடீரென்று வந்து விடுமா? அது கோவையாக வரும்போது தடுக்கிறீர்களே? (மறுபடியும் வருத்தத்தில் ஆழ்ந்து விடுகிறாள்.)

ராமச்சந்திரன்: என்னை நீதான் சீர்திருத்த வேண்டும். நான் தேனைப் பருகி மயங்கும் வண்டின் நிலையை ஒத்தவன். தேனீயைப்போல், நிதான புத்தியுடன் சேகரித்து உண்ணும் திறமை வண்டுக்கு இல்லை.

பிரபா: கொஞ்சம் நிதான புத்தியுடன், தீர்க்க திருஷ்டியும் வேண்டும்.

ராமச்சந்திரன்: அதை நீதான் அபகரித்துக்கொண்டு விட்டாய், கள்ளீ! என்னை நிலை கொள்ளாமல் இருக்கச் செய்பவள் நீதானே?

பிரபா: ஆனால் சரி; நிலை கொள்ளுகிற வரைக்கும் என் எதிரில் வராதீர்கள். நான் அடுத்த அறைக்குள் போகிறேன். (போகிறாள்.)

ராமச்சந்திரன்: (அவள் பின்னால் சென்று) பிரபா! உன் களை இந்த வீடு பூராவும் நிரம்பி யிருக்கும் போது, நீ எந்த அறைக்குள் போனால் என்ன? என் கண்முன் உன் சுந்தர ரூபமே மின்னு கிறது, அன்பே!

பிரபா: கதை எழுத என்னை விடமாட்டீர்களா?

ராமச்சந்திரன்: வேண்டிய வரையில் எழுது. உன் புகழ் என்னுடைய புகழ்தான். உன்னைப் பற்றி வெளியார் புகழும்போது, என் உள்ளம் ஆனந்த வெறி

கொள்ளுகிறது. எழுதுவதை நான் வேண்டாமென்பேனு?

பிரபா: நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

[அறைக்கு வெளியே பன்னீர் இலைகளின் நடுவில் கூடுகட்டி வாழும் மைனு ஜோடிகளைக் காண்பிக்கிருன். பிரபா பேனுவை மூடி வைத்துவிட்டுத் தலை குனிந்து நிற்கிருள்.]

ராமச்சந்திரன்: பிரபா! என் மேல் கோபமா? கற்பனைக்கு நான் தடங்கலா? அடுத்த அறைக்குள் போய் விடவா?

பிரபா: (வெட்கத்துடன்) வேண்டாம்.

ராமச்சந்திரன்: கதை எழுத வேண்டாமா?

பிரபா: நாளைக்கு நீங்கள் ஆபீசுக்குப் போன பிறகு, எழுதுகிறேன். வெளியில் கிடைக்கும் புகழுக்காக, உங்கள் மனதில் குருத்து விட்டுச் செழிக்கும் அன்பைக் கிள்ளிவிட நான் இனி முயற்சிக்க மாட்டேன்.

ராமச்சந்திரன்: பிரபா! (ஆவலுடன் அவளது முகத்தைப் பார்க்கிருன்.)

பிரபா: (சிவந்த முகத்துடன்) ஆம், இந்த விலை மதிக்க முடியாத அன்பின் முன் நான் வாதாடுவது தகுதியல்ல. ஒழிந்த வேளையில் என் காரியத்தைச் செய்து கொள்கிறேன். உங்கள் மனதை நோக வைத்ததற்காக, என்னை மன்னிக்கவேண்டும். (நமஸ்கரிக்கிருள்.)

ராமச்சந்திரன்: (அன்புடன்) நிலவு வீணுகி விடும். மன்னிப்பை ஏற்றுக்கொள்ள நேரமில்லை. வா, போகலாம்.

[பன்னீர் மரத்தில் மைனுக்கள் இரண்டும் கிளையிலிருந்து கூட்டுக்குள் செல்வதை இருவரும் பார்த்துவிட்டு, புன்னகை புரிந்து கொள்கிருர்கள்.]

★

கடவுளே தீமை செய்தால்........?

ஸ்ரீ ராமச்சந்திரர் வனவாசம் பண்ணுகையில், ஒரு நாள் தம் அம்பையும் வில்லையும் தரையில் சொருகிவிட்டு, தாகசாந்தி செய்து கொள்வதற்காகப் பம்பாஸரஸ் என்ற ஏரியில் இறங்கினுர். மேலே ஏறிவந்து பார்க்கையில், தமது வில், ஒரு தவளையை ஊடுருவிச் சென்றதன் காரணமாக அந்தத் தவளை ரத்தத்தால் நனைந்திருப்பதைக் கண்டார். ஸ்ரீ ராமபிரான் இதற்குப் பெரிதும் வருந்தி, தவளையைப் பார்த்து, ''ஏ தவளையே! நீ ஏதாவது சப்தம் செய்திருக்கக் கூடாதா? அப்போது நீ இருப்பதை நான் தெரிந்துகொண்டிருப்பேன் உனக்கு இந்தக் கதியும் நேர்ந்திராதே?'' என்ருர். ''ராமா! எனக்கு ஏதாவது ஆபத்து நேரும்போது, 'ராமா! என்னைக் காப்பாற்று' என்று நான் சொல்லுவேன். ஆனுல் நீயே என்னைக் கொல்லும்போது, நான் யாரிடம் எனது குறையை முறையிட்டுப் பிரார்த்திக்கிறது?'' என்று தவளை பதில் சொல்லிற்று.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

ஒரு செல்லா காசுக்குள்ளே எத்தனை தத்துவங்கள்! எத்தனை தர்ம நியாயங்கள்!! அடடா! விண்டு பார்த்தாலல்லவா தெரிகிறது!

செல்லாக் காசு

எஸ். சுப்பிரமணியன்

இப்போது 'ராணி ரூபாய் செல்லாது, ஏழாம் எட்வர்ட் ரூபாய் செல்லாது' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். சாதாரணமாகவே ஓர் அரசன் போய் இன்னேர் அரசன் வந்தானென்றால், முன்னவனுடைய முத்திரை போட்ட காசெல்லாம் செல்லாது என்று பின்னவன் சொல்லிவிடுகிறான். 'புதிய ராஜா, புதிய காசு' என்பது உலக சம்பிரதாயமாகப் போய்விட்டது.

ஆனல், இங்கே நான் எழுதப் புகுந்தது இந்தச் செல்லாக் காசுகளைப்பற்றி யல்ல. நாளாவட்டத்தில் தேய்ந்து போனதாலோ அல்லது திருட்டுக் கூட்டத்தார் ஒருவரால் அச்சடிக்கப் பட்டதாலோ, சில நாணயங்கள் செல்லுபடியாவதில்லை யல்லவா? அவற்றைப் பற்றித்தான் இங்கே கூறவந்தேன். ஒரு செல்லாக் காசின் மூலமாக, நமக்கு எத்தனையோ தத்துவங்கள் வெளியாகின்றன.

பிரஞ்சுப் பேராசிரியரான பிளாபர்ட் என்பவர், பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளரென்று பெயர் வாங்கவிருந்த **மாப்பஸாண்ட்** என்பவருக்குச் சொன்ன புத்திமதியில், "சர்வ சாதாரணமான விஷயமாய் இருந்தபோதிலும் அதைக் கூர்ந்து நெடு நேரம் கவனி. இதுவரையில் மற்றவர்கள் அதில் பார்த்திராத ஒரு புதிய அம்சத்தைப் பார்க்கும் வரை, நீ அதனின்றும் உன் கண்களை எடுத்துவிடாதே. ஒவ்வொரு விஷயத்திலும் நாம் இதற்குமுன் பார்த்திராத ஒரு புதிய அம்சம் இருக்கத்தான் இருக்கிறது. ஆனல், விஷயங்களை ஒரே விதமாகப் பார்த்துப் பழக்கமடைந்த நமக்கு அந்தப் புதிய அம்சம் அவ்வளவு இலகுவாகத் தெரிவதில்லை. ஒரு கடுகிலும் நாம் இதுவரையில் அறியாத ஒரு புது அம்சம் இருக்கிறது. அதைக் கண்டுபிடி" என்றார். ஒரு துடைப்பக் கட்டையினின்றும் எவ்வளவு தத்துவங்களை, ஸ்விப்ட் பிழிந்தெடுத்தாரோ, அவ்வளவு தத்துவங்களை ஒரு செல்லாக்காசின் மூலமாக நாமும் பிழிந்தெடுத்துவிட முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது.

உயர்ந்தவர், தாழ்ந்தவர், பணக்காரர், ஏழை என்ற வித்தியாசங்களே இல்லாமல் வாழ்வதற்கு, ருஷ்ய நாட்டில் இப்பொழுது நிலவி வரும் வாழ்க்கை முறைதான் சாலச் சிறந்தது என்று தற்கால அரசியல் ஞானிகள் பலர் கருதுகிறார்கள். லாங்பெல்லோ என்ற ஆங்கிலப் பேரா

சிரியர், எமனின் பெருமையை விளக்கும் ஒரு செய்யுளில் 'சாவே அரசனையும் ஆண்டியையும் சம நிலைக்குக் கொண்டு வருகிறது' என்று கூறுகிறார். நம் தமிழ்நாட்டுப் புலவர்கள் பலர் (ஏன்? ஆங்கிலப் பேராசிரியரான ஷேக்ஸ்பியர் கூடத்தான்!) 'துன்பமே வாழ்க்கையில் மனிதருக்கும் மனிதருக்கும் உள்ள வித்தியாசத்தைப் போக்குகிறது; துன்பம் நேர்ந்த காலத்தில் பணக்காரனும் ஏழையும் ஒரே நிலைமைக்கு வந்து விடுகிறார்கள்' என்று சொல்லி யிருக்கிறார்கள். நான் கூறுவது என்ன வென்றால், 'பணக்காரனையும் ஏழையையும் ஒன்றாக்குவது செல்லாக் காசுதான்' என்பதே யாகும்.

எப்பேர்ப்பட்ட பணக்காரனா யிருந்தாலும் சரி; ஒரு செல்லாக் காசு அவனிடம் இருந்து விட்டால், அதைத் தூக்கியெறிய, அவனுக்கு மனம் வராது. அவன் அதை, ஒன்று கடவுள் வேண்டுதலுக்காக முடிபோட்டு வைப்பான்; அல்லது யாராவது ஒரு குருட்டுக் கிழவியிடம் அதைக் கொடுத்து இலந்தைப் பழமோ, நிலக்கடலையோ வாங்கித் தின்பான். அப்பொழுதுதான் அவனுக்கு மனச் சாந்தி ஏற்படும். கையில் அந்தச் செல்லாக் காசு இருக்கும் வரையில், அவனுக்கு இராப் பகலாய்த் தூக்கம் வராது. 'யாரை ஏமாற்றி இதைச் செல்லுபடியாகச் செய்யலாம்?' என்பதே இராப் பகலாக அவனுடைய எண்ணமா யிருக்கும். செல்லாக் காசு ஒன்று இவ்வளவு வேலையும் செய்யும் ஆற்றலுடையது என்ற விஷயத்தை அந்தக் காலத்து ஆழ்வார்கள் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள் தெரிந்துகொண் டிருந்தால், 'ஐயோ! ஒரு செல்லாக் காசுக்காக மனதை இவ்வளவு அலட்டிக் கொள்ளும் மனிதன், ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிப்பதில் இவ்வளவு நேரத்தையும் செலவழித்தானானால், இவனுக்கு நாராயணனுடைய கமலத் திருவடிகள் சித்தியாகுமே' என்று வருந்திப் பாடி யிருப்பார்கள்!

உங்கள் விரோதி ஒருவனை நீங்கள் கஷ்டப்படுத்த விரும்பினால், வேறொன்றும் செய்ய வேண்டாம். அவனது சட்டைப் பையில் அவனுக்குத் தெரியாமல் எப்படியாவது செல்லாக் காசு ஒன்றைப் போட்டு விடுங்கள். பிறகு, அவன் இராப் பகலாய்த் தூங்காமல் கஷ்டப்படுவதைக் கண்டு, நீங்களும் இராப் பகலாய்த் தூங்காமல் ஆனந்திக்கலாம்!

'குணத்தை அறிவது பணத்தினாலே' என்பார்கள் நம் நாட்டு முதியோர். அதாவது, 'ஒருவனுடைய குணத்தை அறிய வேண்டுமானால், அவனிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துப் பார். அதை அவன் எப்படிச் செலவிடுகிறானோ அதிலிருந்து அவன் நல்லவனா கெட்டவனா என்பதைச் சொல்லி விடலாம்' என்பது அவர்களின் கருத்து. நான் இங்கே சொல்லுவது இதுதான்: ஒருவனுடைய குணத்தை அறியச் சிறந்த உறைகல் செல்லாக் காசுதான். அவன் அந்தச் செல்லாக் காசை எப்படி உபயோகிக்கிறானோ அதிலிருந்து

அவனது குணத்தைச் சொல்லி விடலாம். (துப்பறிபவர்கள் இந்த யோசனையைக் கொண்டு எந்த வழக்கையாவது துலக்கினல், அவர்களுக்கு வரும் ஊதியத்தில் எனக்கும் பங்கு உண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வும்.)

நம் பண்டிதர்கள் பணத்தைப் பற்றிப் பேசும்போது, 'செல்வம் என்பது ஓர் இடத்தில் நிலைத்து நிற்காதது. செல்வம் என்ற வார்த்தையே செல்வோம் என்ற வார்த்தையின் திரிபுதான். அது நிமிஷத்துக்கு நிமிஷம் இடம் மாறிக் கொண்டே யிருக்கும்' என்றெல்லாம் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனல், செல்லாக் காசு இந்த விதிக்குப் புறம்பானது என்பதை அவர்கள் ஏனோ சொல்லவில்லை! விதி என்று ஒன்று இருந்தால், அதற்கு விலக்கு என்றும் ஒன்று உண்டல்லவா?

சாதாரணமாக, எஜமான விசுவாசத்துக்கு நம்மவர்கள் நாயை உதாரணமாகக் கூறுவார்கள். என்னைக் கேட்டால், நான் செல்லாக் காசைத்தான் சிறந்த உதாரணமாகச் சொல்லுவேன். நாம் கழுத்தைப் பிடித்து தள்ளினல் கூட, அது நம்மைவிட்டுப் போக மாட்டேன் என்கிறதே; இவ்வளவு விசுவாசம் வேறு யாருக்கு, ஐயா, வரும்?

இன்னும் இந்த மாதிரி எத்தனையோ தத்துவங்கள் ஒரு செல்லாக் காசில் மறைந்து கிடக்கின்றன. ஆனல், அவற்றை எல்லாம் ஒரேயடியாகச் சொல்லிவிட, நான் பிரியப்படவில்லை. ஏனென்ருல், அப்படி நான் சொல்லிவிட்டால், பத்திராதிபர் 'செல்லாக் காசைப் பற்றிப் பிரமாதமாக எழுதியிருக்கிறீர். அதன் உண்மை மதிப்பை அறிந்தவர் நீர் ஒருவர் தான். ஆகையால், உம்மைக் கௌரவிக்க விரும்பி உம்முடைய கட்டுரைக்குச் செல்லாக் காசையே சன்மானமாகக் கொடுக்கப் போகிறேன்' என்று சொல்லி, தம் கையில் பல வருஷங்களாக இருந்து கொண்டு தம்மைக் கஷ்டப்படுத்தி வரும் செல்லாத ரூபாய்கள் சிலவற்றை எனக்குக் கொடுத்துவிட்டால், நான் என்ன செய்கிறது? (சன்மானத்தைப் பற்றிய கவலை தங்களுக்கு வேண்டாம். அதை விட்டுவிட்டு, தாராளமாய்ச் சொல்லுங்கள்.—ப.ர்.)

★

உங்கள் நாடு

உங்களுடைய நாடு ஒன்றே. அதைத் துண்டு துண்டாகப் பிரிக்க முடியாது. பலர் சேர்ந்த ஒரு குடும்பத்தில் யாராவது ஒருவர் எங்காவது தொலை தூரத்தில் இருந்துவிட்டால், அல்லது குடும்பத்தினரின் அன்புக்குப் புறம்பானவ ராகிவிட்டால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றெல்லோரும் எப்படி ஒரு விருந்தில் சந்தோஷமாகக் கலந்து கொள்ள முடியாதோ அப்படிப்போலவே, உங்கள் நாட்டிலிருந்து ஒரு பகுதியை, உங்களுடைய பாஷை எந்தப் பகுதியில் பேசப்படுகிறதோ அந்தப் பகுதியைப் பிரித்து விட்டால், நீங்கள் சந்தோஷப்பட முடியாது; சந்தோஷப்படவுங்கூடாது; அந்தச் சந்தோஷம் இல்லாதிருக்கிறவரையில், நீங்கள் ஒய்வுங் கொள்ளக் கூடாது.

—மாஜினி

தந்தி : "ராஜா"

டெலிபோன் : நெ. 81

நம்பிக்கையே மன நிம்மதி

நாணயமே எங்கள் நோக்கம்

கோயமுத்தூரில் கியாரண்டியுள்ள பவுன் நகைகள், வைர நகைகள், கல் நகைகள், சுத்தமான வெள்ளிப் பாத்திரங் களுக்கும் நாணயமும் நம்பிக்கையும் மிகுந்த இடம்

P. A. ராஜு செட்டியார் அண்டு பிரதர்

ஆபரண மாளிகைக்கு

தாங்கள் அவசியம் குடும்ப சகிதமாய் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

முக்கிய கவனிப்பு :—

"P. A. R." சீல் போட்ட நகைகளை பார்த்து வாங்குங்கள்

TELEPHONE: NO. 81 TELEGRAMS: RAJA COIMBATORE

P. A. RAJU CHETTIAR & BRO.

JEWELLERS & DIAMOND MERCHANTS

BIG BAZAAR STREET COIMBATORE

உங்களுடைய
தீபாவளி
பண்டிகைக்கு ?
வேண்டியவைகள்
வேஷ்டி தினுசுகள்
ஷர்ட்டிங் தினுசுகள்
தயாரித்த உடைகள்
யாவும் எங்களிடம் கிடைக்கும்
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
இராயவரம்

ஸ்ரீ ராம நிலயம்
டிராவலர்ஸ் ரூம்கள்
102, ராமசாமி நாயக்கர் தெரு,
காரைக்குடி
(காங்கிரஸ் மாளிகைக்கு பக்கம்)

கல்லுக்கட்டிக்கு சமீபத்தில் நல்ல தண்ணீர், சுகாதாரம், பந்தோபஸ்து, கார், வண்டிகள் நிறுத்த பிரத்தியேக இட வசதிகளுடன் ரூம்கள் வாடகைக்குக் கிடைக்கும்.

உ. அ. அரு. அருணசலம் செட்டியார்,
வைர வியாபாரம், காரைக்குடி.

உலகத்துக்கு ஒரு புதுமை
உலகத்தின் நம்பிக்கை
ரஷியா

அந்த ரஷியாவைப் பற்றிய சகல விபரங்களுமடங்கிய அரிய நூல் சக்தி மலராகத் தயாராகி வருகிறது.

★

அதனை எழுதும் ஆசிரியர் வெ. சாமிநாத சர்மாவைப் பற்றித் தமிழ் நாட்டுக்குப் புதிதாய் அறிமுகம் செய்து வைக்க வேண்டியதில்லை.

★

பர்மாவின் வீழ்ச்சிக்கு முன் திரு. சர்மா, ரங்கூனில் கடைசி நேரம் வரையில் 'ஜோதி' மாத வெளியீட்டைத் திறம்பட நடத்தி வந்தவர். பற்பல நூல்கள் எழுதிப் புகழ் படைத்தவர். அவர் எழுதியுள்ள ரஷியா விரைவில் வெளிவரும்.

சக்தி காரியாலயம்
மதுரை — காரைக்குடி

டோரா

கார்க்கி

கிரிமியாவில் பல ஆரோக்கிய விடுதிகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்றில் எட்டு க்ஷய ரோகிகள் தங்கி இருந்தார்கள். அவர்களுக்கு 'டோரா' என்னும் பெண் பணிவிடை செய்துவந்தாள். அவள் யார் என்று ஒருவருக்கும் தெரியாது. சில சமயம் தான் ஓர் '**இஸ்தோனியச்சி**' என்றும், மற்றும் சில சமயம் தன்னுடைய தேசம் '**கரேலியா**' என்றும் டோரா சொல்லுவாள். இருந்தாலும், அவள் பேசும் பாணி 'டாரைட்'டிலிருந்து வருபவர்கள் பேசுவதுபோலிருந்தது. ஒரு சமயம் '**தார்த்தாரிய**' பாணியிலும் மறு சமயம் '**ஆர்மீனிய**' பாணியிலும் பேசினுள். அவளது உருவம் கம்பீரமானது — இரட்டை நாடி சரீரம். ஆனாலும், அவள் சுறுசுறுப்பாக இருந்தாள். அவளது நடை வேகமாக இருந்தது. பெருமிதமான சாந்த குணத்தை அவளுடைய முகம் காட்டிற்று. டோராவின் சிவந்த உதடுகளில் அன்பு நிறைந்த புன் முறுவல் தவழ்ந்தது. அந்தப் புன் முறுவல் அவளுடைய பெரிய விழிகளேயும் அழகு படுத்தியது. அவள் ஏதேனும் யோசனை செய்துகொண்டிருக்கும் பொழுதெல்லாம், அவளுடைய கண்கள் மறைந்து, பார்வை மங்கும். அவள் எழுத்து வாசனை அறியாதவள் - அசடும் கூட; அதுவும் அவள் சாமர்த்தியமாக இருக்க விரும்பும் சமயங்களில், அவளது அசட்டுத் தனம் நன்கு விளங்கும். அதனல் நோயாளிகள் அவளை 'டுரா' ('டுரா' என்ற ரஷ்ய வார்த்தைக்கு 'அசடு' என்று பொருள்) என்று கூப்பிட்டு வந்தார்கள். இவ்விதமாக, அவளது பெயரே பரிகாசத்துக்கு உபயோகப்பட்டது. அந்தப் பெண் இதை ஒரு குற்றமாக எடுத்துக் கொள்ள வில்லை. அவளுடைய புன் முறுவல் நீடித்துத்தான் இருந்தது. தன் குழந்தைகளிடம் பொறுமை காட்டும் ஒரு தாய்போலவே, அவள் தன் நோயாளிகளிடம் நடந்துகொண்டாள். க்ஷயரோகிகள், தங்களுடைய நகங்கள் வளர்ந்த மெல்லிய கைகளினுல் அவளை நிமிண்டும் பொழுதெல்லாம், அவள் மெதுவாக அந்தப் பரிதாபமான அழுக்குக் கைகளேத் தன் அகன்ற கைகளினுல் அப்புறந் தள்ளி, "நிமிண்டாதே — அது உனக்குக் கெடுதல்" என்று சொல்லுவாள்.

அநேகர் அவள்மீது அடிக்கடி காதல் புரிந்தார்கள். கடைக்

ருஷியப் புரட்சிக்குப்பின், பிரமாதமாய் அங்கும் உலகெங்கும் புகழப்படும் ருஷியக் கதாசிரியர் மாக்ஸிம் கார்க்கி. 'தாய்' என்ற அவருடைய புரட்சி இயக்க நாவல் உலகப் பிரசித்தம். 'டோரா' என்னும் இந்த அரிய சிறு கதையை '**சிதம்பரம் மணி**' இங்கே மொழி பெயர்த்துத் தந்திருக்கிறுர்.

காரர்கள், சவ அடக்கம் செய்வோர், இன்னும் ஒருசமயம் மூர்க்கமான ஒரு செம்படவன், மனைவி இழந்த ஒருவன்—இப்படிப் பலர் அவளைக் காதலித்தார்கள். அவளுடைய 'பொல்லாத அழகு,' திடகாத்திரம், களைப்படையாத சக்தி, சாந்த சுபாவம் முதலிய அம்சங்கள், அவர்களை வசிகரித்தன. சாந்த சுபாவமுள்ள இந்தப் பிரகிருதியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக் கொள்ள ஒவ்வொருவனும் விரும்பினான். மிகுந்த செல்வம் படைத்த ஒருவன் எப்பொழுது எதில் தன் முதலைப் போடலாமென்று நன்ருக அறிந்திருப்பானே, அம்மாதிரியாகவேதான், அவள் ஆண்கள் மீது கொண்டிருந்த எண்ணமும் இருந்தது. அவளை விவாகம் செய்து கொள்வதாய் முன் வந்த அநேகம் கிராக்கிகளை அவள் மறுத்துவிட்டாள் - பழைய அசட்டுத்தனத்துடன் தான். ஆனால், அவளது புன் முறுவல் மட்டும் அவளுடைய முகத்தை விட்டு மறையவில்லை. அந்த முகத்தோடு, அவள் நோயாளிகளின் அளவற்ற எண்ணங்களைக் கேட்டு வந்தாள்.

காற்று வடக்கிலிருந்து வீசிய காலம். குன்றின் மேல் இருந்த வீடு, மூடுபனி சூழ்ந்திருந்தது. எங்கும் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. நோயாளிகள், கனமான மேல் சட்டைகளுடன், கம்பளிகளையும் போட்டுச் சுற்றிக் கொண்டு கால நிலையைக் குறித்து முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் காலத்திலும், டோராவின் தேகம் உஷ்ணத்தினுல் பீடிக்கப்பட்டிருந்தது. இரவில் ஒவ்வொருவரையும் படுக்கவைத்த பின், டோரா தன் தலையைச் சுற்றி ஒரு கறுப்புக் கைக்குட்டையைக் கட்டிக் கொள்ளுவாள். அந்தக் கைக்குட்டையின் ஒரு மூலையில் சிவப்பு ரோஜா ஒன்று நூலினுல் நெய்யப் பட்டிருந்தது. பிறகு, மேல் தளத்துக்கு வந்து மண்டியிட்டு ஆகாயத்தைப் பார்த்து ஜன்னலின் கீழாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டே பிரார்த்தனை செலுத்துவாள்.

"ஏ ஆண்டவனின் புண்ணியத் தாயே!...... ஏசு நாதா, எங்கள் பிரபுவே! ஏ நிக்கோலஸ், ஆண்டவனின் ஊழியனே!..........."

கவிகளில் அவளுக்கு அதிகப் பற்றில்லாததை நான் கண்டேன். மலர்களை அவள் லக்ஷியம் செய்யவில்லை. அறைகளையும் நோயாளிகள் செல்லும் வண்டிகளையும் குப்பையாக அடிக்கிறது என்பதனுல்தான் மலர்களிடம் அவளுக்கு வெறுப்பு. ஒரு நாள் இரவு ஒரு பாதிரியாரின் மனைவி குடல் க்ஷயத்தினுல் கஷ்டப் பட்டுக் கொண்டே, அழகான வானத்தையும் நக்ஷத்திரங்களையும் கடந்து நிற்கும் உயர்ந்த பதவியை அடைந்தாள். டோரா தன் உணர்ச்சிகளை மீறி, "வானம் ஓர் உடைந்த முட்டை போலிருக்கிறது" என்று பெருமூச்செறிந்தாள்.

ஒரு நாள் ஒன்பதாவது நோயாளி வந்து சேர்ந்தான். அவன் வெகு சிரமத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டே, மாடிப் படிகளில் ஏறினுன். உயர இருந்த ஈட்டி

போன்ற தூணைப் பிடித்துக் கொண்டே, டோராவைப் பார்த்துச் சொன்னான்: "பார்த்தாயா நான் எவ்வளவு நல்லவன் என்று, உம்?"

துக்கமும் சந்தோஷமும் கலந்து வந்த வார்த்தைகள் அவை. மெல்லச் சிரித்துக்கொண்டே, அந்தப் பெரிய பெண்ணின் உருண்டு திரண்ட மார்பை ஒரு பார்வை பார்த்தான்.

"ஆஹா! என்ன திடகாத்திரமானவள் நீ!" என்று, 'லொக், லொக்' கென்று இருமிக் கொண்டே சொன்னான்: "சரி, என்னை மீண்டும் சொஸ்தப்படுத்த, நீ உதவிசெய்வாய் அல்லவா?"

"ஏன், நிச்சயமாகச் செய்வேன்" என்று ஆர்மீனிய பாணியில் டோரா பதிலளித்தாள்.

அவனது முகம் ஆந்தை முகம் போலிருந்தது. உருண்ட பூனைக் கண்கள்; நுனியில் வளைந்த மூக்கு; ஒரு சிறிய கறுப்புத் தாடி—கோரமான முகம்.

எங்களுக்குக் கஷ்டம் ஏற்படும் வண்ணம் டோராவின் மனம் மாயமாக மாறிவிட்டது. எங்களது வேண்டுகோளை நிராகரிக்க ஆரம்பித்தாள். எங்கள் அறைகளை அவசரத்தினால் சரிவரக் கூட்டவில்லை. வெறுப்புடனும் கோபத்துடனும், எங்கள் குற்றங் குறைகளுக்குப் பதில் அளித்தாள். அவளுடைய குதிரை விழிகளிலிருந்து விஷப்பார்வையின் ஒளி ஒன்று வீசிற்று. திடீரென்று குருடியாகவும் அவள் செவிடியாகவும் ஆன மாதிரி காணப்பட்டாள். ஆனால், அடிக்கடி ஆந்தை பிலிப்பாப், இருமிக்கொண்டும், பெருமூச்சு விடத் திணறிக்கொண்டும் படுத்துக்கிடந்த இடத்துக்கே அவளது கவனம் சென்றது. நிமிஷத்துக்கொரு தரம் அங்கே பறந்து செல்லுவாள். அந்திவேளையில் அவனுடைய அறையிலேயே கிடப்பாள். அங்கிருந்து அவளைத் திருப்பி அழைக்க, ஒரு வழியும் கிடையாது.

அவனைப் பொறுத்த வரையில், அவன் வர வர மெலிந்து சாவை நெருங்கிக் கொண்டிருந்தான்; தேறவே யில்லை. வழக்கத்துக்கு மாறாக, சிரிப்பு, கேளிக்கைகளின் நடுவே நலிந்து கொண்டிருந்தான்—கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சமயங்களில் அவன் இழுக்க முயற்சித்த ராகங்கள் நடுநடுவே தோன்றிய இருமலினால் சிதைந்தன.

"நண்பா! இந்த அற்பப் பிதற்றல்களைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று, தன் பூனைக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே, அவன் கேட்பது வழக்கம். "நீ இதையெல்லாம் எவ்விதம் ரஸிக்கிறாய்? பகல், இரவு, பிறப்பு, காதல், அறிவு, இறப்பு, உம்? சுத்த வேடிக்கை, இல்லையா? அதுவும் இருபத்தாறு வயது படைத்த ஒரு மனிதனுக்கு இன்னும் வேடிக்கை தான்—என்னென்ன........டோரா!"

பிறகு 'லொட, லொட' வென்று கரண்டிகளின் சப்தத்தையும், மரச்சாமான்கள் உருளும் சப்தத்தையும் கேட்பேன். அடுத்தபடியாக, அந்த மனிதனின் கட்

டனேயை எதிர்பார்த்து விழித்த விழி மூடாமல் சிலேயைப்போல் அவள் காத்திருப்பாள்.

"என் அன்பார்ந்த யானேயே, கொஞ்சம் திராக்ஷை கொண்டு வா. சீக்கிரம்!" என்று அவன் அவளுக்குக் கட்டளே இட்டு விட்டு, என்னிடம் திரும்பி, "ஒன்றும் தெரியாத அசடு; வெகுளி" என்று சொல்லுவான்.

எல்லா நோயாளிகளிடமும் அவனுக்கு வெறுப்புத்தான். ஏதோ ஒரு சிறிய அசட்டுத்தனம் செய்துவிட்டாலும் போதும்; அவர்களே ஈவிரக்கம் இல்லாமல், அவன் பரிகாசம் செய்வான். ஆனுல், அவனேயும் ஒருவரும் விரும்பவில்லே. என்ருலும், என் சம்பந்தபட்ட வரையில் அவனும் நானும் நண்பர்களானேம். காரணம் அவனுக்கு இலக்கியத்தில் ஆர்வமுண்டு. அதுவே எங்கள் இருவரையும் இணேத்தது.

"மனித சிருஷ்டிகளில் இலக்கியத்துக்கு ஈடு ஒன்றுமில்லே" என்று, நாக்கினுல் உதட்டைத் தடவிக் கொண்டே, அவன் சொல்லுவான்: "ஆனுல், எனக்கு வாழப் பிடிக்கவில்லே........"

இதிலிருந்து அவன் சாவுக்கு க்ஷயத்தைத் தவிர வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும் என்று தொனித்தது; அவனது வாழ்க்கையில் ஏதோ தாங்கமுடியாததொரு துக்க சம்பவம் நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அந்த விடுதிக்கு அவன் வந்த அறுபத்தொன்பதாவது நாள். அதிகமான ஜன்னியினுல், சாவுடன் போராடிக் கொண்டே, "பிமா...........எல்லாம். என் உயிர்.........நான் உன்னேக் காதலித்தேன்..........தனிமையாக.... ......எப்பொழுதும், பிமா......... கண்ணே........." என்று பிதற்றிக்கொண்டே அவன் இறந்தான்.

நான் படுக்கையின் கோடியில் உட்கார்ந்திருந்தேன். டோரா, பிலிப்பாப்பின் அருகில் நின்று கொண்டு, சிணுங்கிக்கொண்டே, தனது பெரிய கையினுல் அவனுடைய வறண்ட தலே மயிரைக் கோதிக்கொண்டிருந்தாள்.

"அவன் என்ன சொல்லிக் கொண்டிருக்கிருன்?" என்று ஆவலோடு கேட்டாள்: "அந்த 'பிமா' யார்?"

"ஒரு பெண். அவன் காதலித்த அல்லது இன்னும் காதல் கொண்டிருக்கும் ஒரு ஸ்திரீயாக இருக்கலாம்."

"அவனு? — இந்த — பிமாவையா?" என்று டோரா ஆச்சரியத்துடன் உரக்கக் கேட்டாள்: "இல்லே—இல்லே. என்னேத்தான் அவன் காதலிக்கிருன். இங்கே அவன் வந்தவுடனேயே, என்னேக் காதலித்தான்........"

ஆனுல், அந்த மாணவனுடைய பிதற்றல்களே மீண்டும் கேட்டு, தன் வெளுத்த புருவங்களே மேலே தூக்கிக்கொண்டே, தன் முன்னிருந்த துணியினுல் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். பிறகு, ஒரு சிறு மூட்டையை என் முழங்காலில் எறிந்துகொண்டே, "இதுதான் அவனது இறுதிச்சடங்குக்கு

வேண்டிய உடுப்புக்கள்—ஸ்டாகிங்ஸ், ஒரு சட்டை, செருப்புகள்'' என்று சொல்லி, சப்தம் செய்யாமல் அறையை விட்டு அகன்ருள்.

மாணவன் பிலிப்பாப், இருபது நிமிஷங்களுக்குப் பிறகு, பிதற்றலை நிறுத்தினுன். பின்பு வெண்மையான சுவரிலிருந்த சதுரமான கறுப்பு ஜன்னலை உற்று விழித்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தான். அவன் ஏதோ சொல்ல நினைத்தான்போல் இருக்கிறது. ஆனுல், வார்த்தைகள் வெளிக்கிளம்ப முடியாதபடி, நெஞ்சு அடைத்துக் கொண்டது. பிறகு, அவனுடைய சிறிய உடல் எல்லா இடங்களிலும் சூன்யமாகி, நிரந்தர இன்பத்தை நாடி நீண்டது.

நான் டோரோவைத் தேடிச் சென்றேன். அவள் மேல்தளத்தில் நின்றுகொண் டிருந்தாள். வானும் கடலும் சேர்ந்திருந்த இடத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். எது எது என்று பிரித்துக் கூற முடியாதபடி இரண்டும் ஒரே இருளாக இருந்தது. அவளுடைய தடித்த முகத்தை என் பக்கம் திருப்பினுள். அது இவ்வளவு கடுப்பாக இருந்ததைக் கண்டு, நான் ஆச்சரியப்பட்டேன்.

"அவன் இறந்துவிட்டான். போய் அவனை வெளியே எடு, டோரா.''

"நான் மாட்டேன்.''

டோரா தரையைக் காலினுல் தீற்ற ஆரம்பித்தாள்.

"நான் மாட்டேன்'' என்ருள் மீண்டும்: "அவனைப் போன்ற ஒரு மனிதனிடத்தில் நான் எதுவும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை! சற்று யோசித்துப் பார். என்ன மனிதன்! 'உன்னைக் காதலிக்கிறேன்' என்று அவன் என்னிடம் சொல்லி வந்தான் இவ்வளவு காலமாக......''

"ஆமாம். ஆனுல், அவன் சாவுடன் போராடிக் கொண்டிருந்ததை நீ பார்க்க வில்லையா?''

"சரி. அதனுல் என்ன? ஆமாம், நான் பார்த்தேன். நான் என்ன குருடியா பார்க்காமல் இருப்பதற்கு? உம்! அவன் இழவுக்கு வேண்டிய துணிகளைக் கூட என் கையிலிருந்த சகல பணத்தையும் தம்பிடியும் மிச்சமில்லாமல் போட்டு வாங்கினேனே? அவன் வந்ததுமே அவனது நிலையைக் கண்டு, எனக்குள்ளாகவே 'ஏழைப் பையன்......!' என்று இரக்கங் கொண்டேன். ஆம். சாவுடன் போராடிக் கொண்டுதான் இருந்தான். எல்லோரும்தான் இறக்கிருர்கள். ஆனுல், ஏன் ஏமாற்ற வேண்டும்? 'நான் ஒரு பெண்ணையும் காதலித்ததில்லை' என்று அவன் சொன்னுன். சரி. நீ இங்கே இருக்கிருய். உனக்காக இங்கே ஒரு பெண் இருக்கிருள்... உன் விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானுலும் இறந்து போ. ஆனுல், ஏமாற்ருதே........''

அவள் மெல்லிய குரலில் பேசினுள். மேலும், வேறு எதையோ குறித்துச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டாள். பிறகு, திடீரென்று அவள் தேம்பித் தேம்பி அழுதாள். துன்

பம் நிறைந்த அழுகை; கொதிக்கும் திரவத்தை ஒரு கிண்ணம் நிறையக் குடித்து அதன் கொடுஞ் சூட்டினுல் வாய் வெந்தவள்போல் அவள் அழுதாள்.

"வா, டோரா!......"

"போ. அவ்வளவு ரொம்ப இரக்கமுள்ளவனுனல், நீயே அவனை உடுத்து.என்னைப்பற்றி... இல்லை, இல்லை. நான் முடியாது. அவன் எனக்கு என்னவா யிருந்தான்—எல்லாம் கடந்துபோன சங்கதி."

"இறந்தவனை எப்படி உடுத்துவ தென்று எனக்குத் தெரியாதே........"

"அதைப்பற்றி எனக்கென்ன கவலை? நான் அவனுக்குப் புதியவள். யாரோ? இல்லையா?"

"ஆனுல், என்ன? கடைசியில் அவன் செத்த பிணம்தானே!"

"சரி. அதனுல் என்ன? என் மனதைக் கலைக்க முயற்சிக்காதே. அவனைப்போன்ற ஒரு மனிதனின் முகத்தில் நான் விழிக்கவே விரும்பவில்லை. யாரா யிருந்தா லென்ன? ஏமாற்றக்கூடாது..."

கடைசிவரையில் தனியாக மாடியில் இருந்துகொண்டே, அவள் அவனை உடுக்க மறுத்தாள்.

நான் மாணவன் பிலிப்பாப்பின் உடலை அவனுடைய உடுப்புக்களால் சரிசெய்து கொண்டிருந்தேன். அப்பொழுது இருதயம் சிதறிவிடும்படியான ஓர் அழுகையைக் கேட்டேன். உடனே மேல் தளத்துக்குப் பாய்ந்தேன்.

மனித ஜாதியில் சிலரிடம் ஒரு வழக்கம் உண்டு. ஒருமாதிரியான கோர முகத்துடன், அதிக துக்கத்தினுல் சிலர் கண்ணீர் விடுவதுண்டு; மூர்க்கமாக இருப்பார்கள். அந்தமாதிரியான கண்ணீருடன்தான் டோரா அழுது கொண்டிருந்தாள். தரையில் மண்டியிட்டுக் கொண்டு தலையை இரும்புத்தூணில் முட்டிக் கொண்டு, தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, இந்த வார்த்தைகளைச் சொன்னுள்; குழந்தைகளைப்போல் வீரிட்டுக் கத்திக் கொண்டே இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தாள்: "ஏ, என் அன்பனே! எனதாருயிரே! நேசனே! என்றும் மறக்கமுடியாத என் கண்ணே!"

★

உள்ளேயிருக்கும் சூத்ரதாரி

சூத்ரதாரி உள்ளே இருக்கிருன். அவன்தான் பேசுகிருன்; அவன் உயிர்; அவன் தான் புருஷன்; அவனைச் சுற்றி மூடியிருக்கும் இந்த உடலை அவன் என்று எண்ணி மயங்காதே இந்த உடலில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் கருமேந்திரியங்களை அவன் என்று எண்ணுதே. தச்சனுடைய உளி, வாச்சி முதலியவைகளைப்போல், இவை வெறுங் கருவிகள்தான். உடலிலேயே சேர்த்து அமைக்கப்பட்ட கருவிகள். இவ்வளவுதான் வித்தியாசம். உள் நின்று இவைகளைச் செலுத்தியும் அடக்கியும் வரும் ஆன்மாவை மறந்து, இக் கருவிகளையே நலனுக எண்ணுதே. நெய்பவனுக்கு நாடா, எழுதுபவனுக்கு எழுத்தாணி, வண்டி யோட்டுபவனுக்குச் சாட்டையைப் போல், இவைகள் ஆன்மாவுக்குக் கருவிகளாகும். நற்பயனும் தீமையும் ஆன்மாவில் தான் உண்டு.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

உடம்பும் மருந்தும்

புத்திசாலி நோயாளி : புத்திசாலியான நோயாளி, டாக்டரிடம் என்னென்ன தெரிவிக்க வேண்டும்? எப். ஸி. பர்னஸ் என்பவர் அதைக் கோவையாகக் குறிப்பிட்டுள்ளார். புத்திசாலி நோயாளி, எதையும் ஒளிக்காமல் டாக்டரிடம் தெரிவிக்கத் தயாராய் இருப்பான். வலி இருந்தால், எங்கே, எவ்வளவு கடுமையாய், எவ்வெப்பொழுது உண்டாகிறது என்று அவன் சொல்லுவான்; அது எதனுல் வருகிறது, எதனுலாவது சமனமாகிறதா என்பதையும் கூறுவான். உண்ணும் உணவு என்ன? இதற்கு முன்னே ஏதேனும் மருந்து சாப்பிட்டதுண்டா? என்ன மருந்து? இதையும் சொல்லுவான். சரியான மருந்து அல்லா விட்டாலும், நோயின் உண்மையான நிலையை மறைக்கக் கூடிய சக்தி பல மருந்துகளுக்கு உண்டு. ஆகையால், இந்தத் தகவல் மிக அவசியம். ஒழுக்கக் கேட்டினுல் வந்த வியாதியா யிருந்தாலும், டாக்டரிடம் உண்மை சொல்ல அஞ்ச வேண்டியதில்லை. நோயாளியின் ஒழுக்கத்தைப் பற்றி யெல்லாம் தீர்ப்புக் கூற, டாக்டருக்கு அக்கரையில்லை. நோயைக் குணப்படுத்துவதே அவரது கவலை. மற்றும் டாக்டர் கேட்கும் தகவல்களை மட்டிலுமல்ல, அவருக்கு உபயோகப்படும் என்று தோன்றும் இதர தகவல்களையும் புத்திசாலி நோயாளி டாக்டரிடம் தெரிவிப்பான்,

உங்கள் ஆயுள் : நீங்கள் இன்னும் எவ்வளவு நாள் வாழ்வீர்கள் என்று மதிப்பிட ஒரு கணக்கு உண்டு. பெரும்பாலான இன்ஷியூரன்ஸ் கம்பெனியார்கள் கைக் கொண்டுள்ள முறை அது. தற்போது உங்களுக்குள்ள வயதை, 80-இலிருந்து கழியுங்கள். அந்த மிச்சத்தை 7-ஆல் பெருக்குங்கள். அந்தத் தொகையை 10-ஆல் வகுங்கள். கிடைக்கும் விடை தான் உங்கள் மீதி ஆயுளின் உத்தேச மதிப்பு. உதாரணமாக, இப்போது உங்களுக்கு 30 வயது என்று வைத்துக் கொள்ளுங்கள். $(80-30) \times 7 \div 10 = 35$ — இதுவே உங்கள் மீதி ஆயுள் மதிப்பு. 70-வ்யதுக்கு மேற்பட்டவர்களின் விஷயத்தில் இந்தக் கணக்குப் பிரயோசனப் படுவதில்லையாம். ஏனெனில், எவ்வளவு அதிக காலம் இதுவரை நீங்கள் வாழ்ந்திருக்கிறீர்களோ, அத்தனைக்கத்தனை அதிக நாள் இனியும் வாழக் கூடுமென்று நீங்கள் எதிர்பார்க்கலாம்.

*   *

பேயர் 205 ரகஸ்யம் : தூக்க வியாதி என்று ஆப்பிரிக்காவில் ஒரு பயங்கர நோய் உண்டு. இந்த நோய் வந்தவன் சதா தூங்குவான். என்ன செய்தாலும் விழிக்க மாட்டான். அப்படியே மாண்டு போவான். இதற்கு ஜெர்மனியில் 1920-ஆம் ஆண்டிலே ஹாம்பர்க் இன்ஸ்டிட்யூட் ஆராய்ச்சியாளர்கள் ஒரு

மருந்து கண்டு பிடித்தார்கள். இந்த மருந்துக்கு 'பேயர் 205' அல்லது 'ஜெர்மானின்' என்று அவர்கள் பெயர் வைத்தார்கள். ஆனல், அதைச் செய்யும் விதத்தை மட்டில் வெளியிட வில்லை; மருந்தையும் ஒரு சொட்டுக் கூட வெளியே அனுப்பவில்லை. "இதை நீங்கள் ஆராய்ந்து, செய்யும் விதத்தைக் கண்டு பிடிப்பதில்லை யென்று உறுதி கூறினல் தான், மருந்து தருவோம்" என்று வெளிநாடு களுக்கு அவர்கள் நிபந்தனை விதித் தார்கள். "சரி" என்று, அந்தக் கேவலமான நிபந்தனைக்கும், பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலண்டு இந்த நான்கு நாடு களும் ஒத்துக் கொண்டன. "இது போதாது. நாங்கள் இழந்த காலனிகளை யெல்லாம் திருப்பித் தராத வரையில், இந்த மருந்து தர மாட்டோம்" என்று, மீண்டும் சொல்லி விட்டது ஜெர் மனி. ஆனல், அந்த மருந்தில், ஓர் அவுன்ஸில் இரண்டாயிரத்தில் ஒரு பங்கு எப்படியோ பாஸ்டர் இன்ஸ்டிட்யூட் தலைவர் எர்னஸ்ட் பார்னூ என்பவருக்குக் கிடைத் தது. பல காலம் ஆராய்ந்து அந்த மருந்து செய்யும் விதத்தை, பாஸ்டர் இன்ஸ்டிட்யூட் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். மருந்துக்கு **பார்னூ 309** என்று பெயரும் இட்டார்கள். முதலில் ஜெர்மானி யர் இது சரியான மருந்து தான் என்று ஒப்புக் கொள்ள வில்லை. பின்னல், ஒப்புக் கொண்டு விட் டார்கள்; "அசாத்தியமான அற் புதத்தை **பார்னூ** செய்து விட் டார்" என்று புகழ்ந்தார்கள்,

ஓமம் : ஓமத்தின் குணம் பற் றிக் குணபாடம் கூறுவதாவது :

சீத சுரம் காசம் செரியா மாந்தம்
பொருமல்
பேதி இரைச்சல் கடுப்புப் பேராமம்
—ஓதிருமல்
பல்லோடு பல் மூலம் பகம் இவை
நோய் என் செயும் ஓர்
சொல்லோடு போம் ஓமம் எனச் சொல்.

ஓமம், கடுக்காய்த் தோல், திரி கடுகு, சிற்றரத்தை, அக்கரகாரம், திப்பிலி மூலம் இவைகளின் சூர ணம் சம பாகமாகக் கூட்டி, கூட்டிய எடைக்கு நேர் பாதி சர்க்கரை சேர்த்து, காலை மாலை திரிகடிப் பிரமாணம் கொள்ள, புகை யிருமல் தீரும். ஓமம், மிளகு வகைக்குப் பலம் 1 வெதுப்பி, வெல்லம் பலம் 1 சேர்த் தரைத்துத் திரிகடிப் பிரமாணம் காலை மாலை 10 நாள் சாப்பிட, வயிற்றுக் கடுப்பு, பொருமல், கழிச்சல் நீங்கும்.

* *

செத்தவன் கண் : சாகும் சம யத்தில் ஒருவனது கண்ணிலே விழும் காட்சி, அப்படியே போட்டோ மாதிரி நிலைத்து விடும் என்று நினைக்கப்படுகிறது. இந்த நம்பிக்கை வெறும் அபத்தமாகும். மனிதனின் கண், காமிராவின் கண்ணாடிக் கண்போல் தான் வேலை செய்கிறது. செத்தாலும் உயிரோ டிருந்தாலும், கண்ணில் எதெது எவ்வெப்பொழுது விழு கிறதோ அவ்வப்பொழுது அப் படியப்படியே அதது தெரியும். காட்சி மறைந்தால், கண்ணி லுள்ள படமும் அகன்றுவிடும். நிரந்தர 'போட்டோ' ஒன்றும் கண்ணில் விழுவதில்லை.

யுத்த கால மணி மொழி நெ. 2

முடிந்த சிறந்த காரியத்தை இன்றே செய்யுங்கள்:
—நாளைக்கு இதைவிடச் சிறப்பாய்ச் செய்ய
அதுவே உதவும்.

வாழ்க்கையின் அநிச்சயத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதே இன்று செய்யவேண்டிய காரியம். வாழ்க்கையின் அநிச்சயம் இன்றைவிட வேறென்றும் அதிகமா யிருந்ததில்லை. இன்றைக்குச் சிறந்த பாதுகாப்பும் நாளைக்கு அமைதியாய் வாழ வசதியும் தரும் சிறந்த பாதுகாப்பளிப்பது இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி ஒன்றே.

ஹிந்துஸ்தான் பாலிஸி சகலவிதமான பாதுகாப்புக்களும் அளிக்கிறது. சாமான்யப் பிரஜைகளுக்கு, வழக்கமான கட்டண விகிதங்களில், பற்பல இன்ஷ்யூரன்ஸ் நலன்களையும் உங்களுக்கு அது தருகிறது.

கோடிக் கணக்கிலே தொழில் செய்யும் கம்பெனி அது.

ஹிந்துஸ்தான்
கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ்
ஸொஸைடி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,"
கல்கத்தா.

சென்னைக் கிளை:
தற்போதைய விலாஸம்:
7/67, ஜெயில் ரோடு,
கோயமுத்தூர்.

உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸுஸ் டீ நறுமணமுள்ளதாக இருக்கிறது. நரஸுஸ் காப்பிக்கோ சூரிய வெப்பத்தால் நன்றாக பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன. பிறகு நன்றாக வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய காபிக்கான் தூளாக செய்யப்படுகிறது.

நரஸுஸ்

டீ காபி

மற்ற விபரங்களுக்கும், மெயில் ஆர்டர்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

ஹெட் ஆபீஸ்: சேலம்

MNK 9 TM

கர்னம் கதை: ஒரு கணக்குப் பிள்ளை 'கர்னம் கர்னம்' என்று அழைக்கப்பட்டான். இது கணக்குப் பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. உடனே வேலையை ராஜிநாமாச் செய்து பரிசாரகன் ஆகி விட்டான். ஓர் இடத்தில் 'வ கோகர்னம், சாம்பார் போடு' என்று அழைக்கப் பட்டான். அந்தத் தொழிலை விட்டு வைதீக விருத்தியைக் கொண்டான். ஒருவர் வந்து தன் வீட்டுச் சபிண்டீகர்னத்துக்கு அழைத்தார். மாஜி கணக்குப் பிள்ளைக்கு ரோஷம் பொங்கி விட்டது. சாஸ்திரங்கள் கற்றான். ஒருவர் அவனிடம் வந்து தன்பிள்ளைக்கு நாமகர்னம் செய்ய அழைத்தார். கணக்குப் பிள்ளை திகைத்தான். இந்தக் கதைபோல் தான் இருக்கிறது இந்தியர்களின் நிலைமை என்கிறது 'காவேரி.' பிறந்த நாட்டில் தான் அடிமை; வெளியே சென்றாவது மானமாக வாழலாமென்றால், அதுவும் இந்தியர்களால் முடியவில்லை.

* *

தூண்களும் பையன்களும்: ஸ்ரீ வீரராகவாச்சாரியார் என்ற ஸ்ரீரங்கவாஸி நாற்பது வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ ரங்கத்தில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தினார் என்று 'கலைமக'ளில் 'குமுதினி' எழுதுகிறார். அந்த ஹைஸ்கூலுக்குக் கட்டிடம் இல்லாததனால், சொக்கி மடம் என்ற புராதனக் கட்டிடம் ஒன்றில் அது நடத்தப் பெற்று வந்தது. ஒரு சமயம் ஓர் இன்ஸ்பெக்டர் துரை அதை வந்து பார்த்து விட்டு, "இந்தப் பள்ளிக்கூடத்தில், பையன்களை விடத் தூண்கள் அதிகம் இருக்கின்றன" என்று அறிக்கை எழுதினாராம்! அதற்கு மேல் வீரராகவாச்சாரியாரின் சிஷ்யரான ஸ்ரீ மாத்ருபூதமையர் எங்கெங்கோ சென்று ஏழாயிரம் ரூபாய் திரட்டிக் கொண்டு வந்து, நிலம் வாங்கி, ஸ்ரீரங்கத்துப் பெரிய மனிதர்களின் உதவியைக் கொண்டு கட்டிடம் கட்டினார். இப்பொழுது அந்தப் பள்ளியில் ஆயிரத்து ஐந்நூறு பிள்ளைகள் படிக்கிறார்கள்.

* *

அன்புமை: 'நான் எங்கும் ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசிக்கிறேன்' என்று ராதை பகர்ந்த போது, அடுத்திருந்த சேடிகள் 'இது என்ன இது! நாங்கள் ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசிக்கவில்லையே, ராதா! உனக்கிந்தப் பிரேமை இருக்கிறது போலும்!' என்று ஆச்சரியமாக வினவினார்கள். 'என் அருமைத் தோழிகளே! முதலில் உங்கள் விழிகளுக்கு அன்பு என்னும் மையைத் தீட்டிக் கொள்ளுங்கள். அதன் பிறகே நீங்கள் அவரை எங்கும் தரிசிக்கலாம்' என்று ராதை, பக்தியின் பெருமையைக் காட்டினாள் என்று

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு முறை கூறினர். 'ஸ்ரீ ராம கிருஷ்ண விஜய'த்தில் ஸ்ரீ எஸ். கே. வி. விஜயராகவன் மொழி பெயர்த்துள்ள ஒரு கட்டுரையில் இது காணப்படுகிறது.

* *

பட்டாசுப் பஞ்சமானால்: இதை எழுதிக்கொண்டிருக்கும் போது, டபார், டபார், டபார் என்றெல்லாம் சப்தம் காதில் விழுந்து கொண் டிருக்கிறது என்று 'ஆனந்த விகடன்' கூறுகிறது. கடைகளில் மருந்துக்குக் கூட ஒரு பட்டாசு கிடையாது. அப்படியிருக்க, மேற்படி சப்தங்கள் எதென்றால், சைன்யங்கள் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது வெடிக்கும் குண்டுகளின் சப்தம் தான். இந்தத் தடவை பட்டாசுப் பஞ்சம் ஏற்படும் போலிருந்தால், இராணுவ அதிகாரிகள் உதவி செய்யலாம். தீபாவளி யன்று இரவு பெரிய இராணுவப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தால், வெடி குண்டுச் சப்தங்களைக் கேட்டாவது, சிறுவர்கள் திருப்தி யடைவார்கள் அல்லவா?

* *

'தேசபக்தி': சென்ற ஆகஸ்டு மாதம் பதினெட்டாம் தேதி, திருச்சியில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். அவர்கள் கூடி இருந்த கூட்டத்தில், தானும் வேடிக்கை பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்ததாக, 'தமிழ'னில் திரு. வி. கந்தசாமி எழுதுகிறார். வீதியை அடைத்துக் கொண்டு மாணவர்கள் நின்றார்கள். கொஞ்ச நேரத்தில் மூட்டை ஏற்றிய இரட்டை மாட்டு வண்டி ஒன்று வந்தது. அதை ஒரு நாட்டுப்புறத்தான் ஓட்டிக் கொண்டு வந்தான். வண்டி போவதற்கு இடம் இல்லாமல் இருந்ததால், வழியை ஒதுக்கி விட ஒரு மாணவர் வண்டியை நோக்கி வேகமாக வந்தார். அவர் வந்த வேகத்தைக் கண்டு வண்டிக்காரன் மிகவும் பயந்து விட்டான். அவசரமாக, நாக்குழறிக் கொண்டே, "சாமி, வந்தேமாதரங்க! வந்தேமாதரங்க!!" என்று சொன்னான். எல்லாரும் சிரித்து விட்டோம்.

* *

பாதாள அறை: ஸ்டாலின் க்ராட் நகரத்தின் தற்காப்பு ஓர் அற்புதமாகத்தான் இருக்கிறது என்று 'சந்திரோதய'த்தில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. எரிந்துபோய் எலும்புக் கூடு போல் நிற்கும் சில கட்டடங்களுக் கடியிலே இருக்கிறது ஒரு பாதாள அறை. இதற்குள்ளேதான் இருக்கிறது ஸ்டாலின் க்ராட் தற்காப்பை நடத்தும் தளபதியின் தலைமைஸ்தானம். இந்தத் தளபதியின் பெயர் இப்போது வெளிவராது; பின்னல்தான் பிரபலமாகும். நெருப்புக் குச்சி கூடப் பற்ற முடியாத அந்த இருட்டறையில், ஏதோ கிடைத்த சாப்பாட்டை அங்கேயே சாப்பிட்டுக் கொண்டு, க்ஷவரம் செய்து கொள்ளக்கூட நேரமில்லாமல் ஒரு மாத காலமாய் வேலை செய்து வருகிறார்கள் அதிகாரிகள். இங்கிருந்து முன்னணித் தலைவருக்கு டெலிபோன் செய்தி பறக்கிறது.

புத்தக உலகம்

காலைப் பிறை: ஆசிரியர்: எப். டபிள்யூ. பெயின். மொழிபெயர்ப்பாசிரியர்: கி. சாவித்திரி அம்மாள். விலை அணு 10. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்.

இந்த அற்புதக் கதையைப் படிக்கையில், இதை ஓர் ஆங்கிலேயரா எழுதியிருப்பார் என்று ஆச்சரிய முண்டாகிறது. புராதன வடமொழிக் காவியம்போல், முற்றிலும் இந்திய மயமாய் இக்கதை செல்கிறது. வர்ணனை அனைத்தும் இந்திய வர்ணனை; சம்பாஷணை அனைத்தும் இந்திய வேதாந்தம்! அழகும் ஞானமும் ததும்பும் ரசனை மிகுந்திருக்கிறது. மொழிபெயர்ப்பு மிக்க அருமையா யிருக்கிறது. பல முறை படிப்பினும், சம்பாஷணை நயத்தாலும் வர்ணனை இன்பத்தாலும், தெவிட்டாச் சுவை தருகிறது.

* *

ஸரஸாவின் பொம்மை: ஆசிரியர்: சி. சு. செல்லப்பா. விலை ரூ. 1—8—0. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்.

சிறுகதை இலக்கியம் தமிழ் நாட்டில் வேர் ஊன்றி விட்டது என்பதற்கு மற்றுமொரு சாட்சியம் இந்தப் புத்தகம். பதினேழு நல்ல சிறுகதைகள் இதில் இருக்கின்றன. கதைகளெல்லாம் தத்ரூபமாய் நடந்தனவோ என்று நினைக்கும்படி பாத்திரங்களும் சம்பாஷணைகளும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொன்றிலும் அநேகமாய்க் கதா சுவாரஸ்யம் இருக்கிறது. பற்பல விதமான பாத்திரங்கள், பற்பல விதமான கதை அமைப்புகள். சலிப்புத் தோன்றாமல் படித்து இன்புறக் கூடிய புத்தகம்.

* *

கட்டுரைக் கோவை: ஆசிரியர்: பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார். விலை ரூ. 1—4—0. கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், காரைக்குடி.

நூலாசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரியராவார். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின் பெருமையை விளக்குவது ஒரு கட்டுரை; பரிபாடலைப் பரிபூர்ணமாய் ஆராய்வது ஒன்று: குறுந்தொகையில் மருதத் திணையை விரிப்பது மூன்றாவது; பண்டைத் தமிழரசர்கள் ஆதரித்த புலவர்களைப்பற்றிக் கூறுவது மற்றொன்று; சேக்கிழார் நவின்ற மனுவேந்தன் கதைச் சிறப்பைச் சுருங்க விளக்குவது கடைசியிலே—இவ்வாறாக ஐந்து செந்தமிழ்க் கட்டுரைகள் இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஆழ்ந்த

இந்த மதிப்புரைகளில் காணப்படும் புத்தகங்கள் 'சக்தி காரியாலய'ங்களிலும் விலைக்குக்கிடைக்கும்.

தமிழறிவும், ஆராய்ச்சித் திறனும் விளங்குமாறு நடையும் பொருளும் அமைந்திருக்கின்றன.

*　　　　*

சுவாமி சுத்தானந்த பாரதியார் வரலாறு: ஆசிரியர்கள்: (1) திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, (2) அன்பு எஸ். நடராஜன், (3) வி. ஆர். எம். செட்டியார், (4) டி. கே. சிதம்பரநாத முதலியார், (5) கவிராஜ பண்டித நா. கனகராஜையர், (6) ஜே. வேங்கடராம ஐயர். விலை ரூ. 1—0—0. வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா,

புதுவை அரவிந்த நிலயத்தில் யோகம் புரியும் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள், எண்ணற்ற நூல்கள் எழுதித் தமிழரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டார். அவருடைய வரலாறு இத்தனை நாளும் புத்தக உருவில் வராதிருந்தது ஒரு பெருங் குறையாகும். அக்குறையை நீக்கும் இந்நூல் வரவேற்கத் தக்கது. இதன் ஆசிரியர்களுள் முதல் இருவரும் சுவாமியிடம் நெருங்கிய நட்பும் பழக்கமும் உடையவர்களாதலால், அவரது வரலாற்றைப் பழுதற்ற முறையில் தெளிவும் கோவையும் அழகும் அமைய எழுதியுள்ளார்கள். பிற நால்வரும் சிறந்த அறிஞர்கள். சுவாமி நூல்களின் சிறப்பைச் சீர்தூக்கிக் காட்டுகிறார்கள். தற்காலத் தமிழ் வளர்ச்சியில் பற்றுதல் கொண்ட ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல்.

*　　　　*

வரகவி தாகூர்: ஆசிரியர்: சுவாமி சுத்தானந்த பாரதியார். விலை ரூ. 1—8—0. வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.

கவியரசர் தாகூர் ஓர் ‘அருட்புலவர்; கவியுலகின் அற்புதம்.’ அந்த அற்புதத்தை அருந்தமிழிலே விளக்கிக் காட்டுகிறார் சுவாமி சுத்தானந்தர். புலவரைப் புலவரே புகழ்வதிலே ஒரு தனியின்பம் உண்டு. அந்த இன்பத்தை இந் நூலிலே நாம் பெறுகிறோம். தாகூரின் வரலாறு, வாழ்க்கை நுட்பம், நூல் சிறப்புகள் அனைத்தையும் தெள்ளிய தமிழில் சுருங்கச் சொல்லுகிறார் சுவாமி. தாகூர் நாடகம், கட்டுரை, சொற்பொழிவு, கவி ஆகிய சிலவற்றையும் அப்படியே சுருக்கித் தமிழ்ப்படுத்தி அவற்றின் நயத்தையும் இடையிடையே நாம் பருகச் செய்கிறார்.

★

வரவு செலவு நேர்!

சார்லஸ் லாம்ப் என்பவர் ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகளும், பல அரிய கட்டுரைகளும் எழுதிப் பெயர்பெற்றவர். அவர் இந்தியா மந்திரி காரியாலயத்தில் 1792—1825-ஆம் வருஷங்களில் ஒரு குமாஸ்தாவாகவே வேலை பார்த்து வந்தார். நடத்தை மிக விசித்திரம். ஒரு நாள் மேலதிகாரி ஒருவர், அவரை “நண்பர் லாம்ப்! தினம் காலையில் தாமதித்தே வருகிறீர்களே; ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?” என்று கேட்டார். “வாஸ்தவம். காலையில் வருவதில் தாமதம்தான் செய்கிறேன்; ஆனால், மாலையில் எவ்வளவு சீக்கிரமாய்ப் போய்விடுகிறேன்; அதை நீங்கள் கவனிக்க வேண்டும்” என்று பதிலளித்தார் லாம்ப்.

குருவி கொஞ்சம் நில்

குருவி குருவி கொஞ்சம் நில்
கொத்திய நெல்லைக் கீழேவை

காட்டைத் திருத்தி வைத்தாயோ
கழனி கட்டி வைத்தாயோ

மாட்டைக் கட்டி உழுதாயோ
மண்ணைக் கிளறிப் போட்டாயோ

விதையைக் காத்து வைத்தாயோ
வீசியிறைத்து விதைத்தாயோ

நாளை எண்ணிக் கிடந்தாயோ
நாற்றைப் பிடுங்கி நட்டாயோ

மழையே வாவா என்றாயோ
மானம் பார்த்து நின்றாயோ

ஏற்றம் போட்டு இறைத்தாயோ
ஏரி மடக்கி விட்டாயோ

கவலை போட்டு இறைத்தாயோ
கால்வாய் வெட்டி விட்டாயோ

களையைப் பிடுங்கி விட்டாயோ
கட்டிக் காத்து நின்றாயோ

கதிரைத் தொட்டுப் பார்த்தாயோ
கருவங் கொண்டே சென்றாயோ

அரிவாள் கொண்டு அறுத்தாயோ
அறுத்துக் களமும் போட்டாயோ

பயிரை யடித்துப் பட்டாயோ
பதரைத் தூற்றி விட்டாயோ

மண்ணில் உழைத்து வேர்த்தாயோ
மணியை எல்லாம் சேர்த்தாயோ

கொடுக்கிறேன் — எடுத்துக்கொள்
தடுக்கிலேன் — தாவிப்போ

உண்டு உண்டு களியடி
ஊட்டி ஊட்டி மகிழடி

— 'சுரபி'

பாலர் கதை:

மந்திரம் படித்த ராஜா

'நாரா'

ஒரு ராஜாவும் ராணியும் இருந்தார்கள். எல்லா ராஜாக்களிடமும் மந்திரவாதிகள் இருப்பது வழக்கம். இந்த ராஜாவிடமோ மந்திரவாதி கிடையாது. இந்த ராஜாவும் ராணியும் நிரம்பக் கருமிகள்.

"நமக்கு மந்திரவாதியே வேண்டாம். அவன் இல்லாத குறும்பெல்லாம் செய்து விடுவான். அதை நம்மால் தடுக்க முடியாது. நமது ரத்தினக் கிரீடத்தைக் கூட மண் கூசாவாக மாற்றிவிடுவான்" என்று ராணியைப் பார்த்து ராஜா சொன்னான்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது" என்று ராணி ஒத்துப் பாடினாள்.

மந்திரவாதி இல்லாவிட்டால் கௌரவமாக இராது. ஆனால், நிஜமான மந்திரவாதியை வைத்திருப்பது ஆபத்து. ராஜாவுக்கு இன்னது செய்வதென்றே புரியவில்லை.

நினைத்து, நினைத்துப் பார்த்தான். தலையைப் பலமாகச் சொறிந்து கொண்டான். பிறகு, தன் வழுக்கை மண்டைக்கு ஆபத்து வருமே என்று பயந்து, சொறிவதை நிறுத்திவிட்டான். அதற்குப் பதிலாய், மீசையை முறுக்கினான். அதுவும் ஏகமாய்ப் பின்னிக்கொண்டு சங்கடப்படுத்தியது. உடனே மீசையைச் சிறைத்து விட்டான்.

சாப்பிடும் போது ராஜாவுக்கு ஒரு யோசனை வந்தது: "வேறே ஆள் தேட வேண்டாம். நானே மந்திரவாதியாகி விட்டால் என்ன?" என்று எண்ணினான். இந்த யோசனையை ராணிக்குச் சொன்னான். ராணி முதலில் சம்மதிக்க வில்லை.

"உங்களுக்கு என்ன தெரியும்? சும்மா கதை கட்டாதீர்கள்" என்று ராணி கேலி செய்தாள்.

"எனக்குத் தெரியாதோ? நமது அரண்மனையில் நிறையப் பழைய புத்தகங்கள் இருக்கின்றன. மந்திரம் கற்பிக்கும் புத்தகமும் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து, மந்திரம் தெரிந்துகொண்டால் போகிறது" என்று ராஜா பதில் சொன்னான்.

அதன் மேல், ராஜாவும் ராணியும் பழைய குப்பைகளைக் கிளறினார்கள். 'மாயா ஜாலம்' என்று ஒரு புத்தகம் இருந்தது. ஏடுகளை ராஜா புரட்டினான். அவனுக்கு அதில் தலைகால் புரியவில்லை. என்னென்னவோ கோணலுமாணலுமாய்க் கிறுக்கி யிருந்தது. ஒரு

ஜால மந்திரத்தைத் தட்டித் தடுமாறிப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவசர, அவசரமாய் மந்திரி ஓடிவந்தான்.

"ஐயோ, மகாராஜா! ஆபத்து! ஆபத்து! நாலு பூதங்கள் வந்து விட்டன. நாட்டிலே பாதி வேண்டுமாம். அதோடு ஒவ்வொரு நாளும் சாப்பிட நாற்பது பசு வேண்டுமாம். இல்லாவிட்டால், அவைகள் அரண்மனையைக் கொட்டைபரப்பி விடுமாம்; நாட்டை அழித்து விடுமாம்" என்று புலம்பினன் மந்திரி.

ராஜாவுக்குக் குலை நடுக்கம் எடுத்துவிட்டது.

"பெருந் தொல்லையில் மாட்டிக் கொண்டோமே!" என்று மந்திரி கதறினன்.

"தொல்லையா, தொல்லை! பேச்சைப் பார்!—ஆணச் சட்டியிலே காணும் விழுந்து விட்டோம்!" என்முன் ராஜா.

ராஜா இப்படிச் சொல்லி வாயை மூடு முன்னே திடீரென்று ஒரு விஷயம் நடந்துவிட்டது: ராஜா, மந்திரி, ராணி எல்லாரும் ஒரு பெரிய ஆணச் சட்டியில் விழுந்து கிடந்தார்கள். சட்டி நிறையக் கொதிக்கும் குழம்பு. வெண்டைக் காய்க்குழம்பு மாதிரி பிசு பிசு, வழ வழ என்றிருந்தது. நல்ல உறைப்புங் கூட. ராஜா தட்டித் தடுமாறி, நீந்திக் கரை சேர்ந்தான். மந்திரியும் ராணியும் மூச்சுத் திணறிக்கொண்டே வெளியேறினர்கள்.

"என்ன நடந்துவிட்டது? பூதங்களின் வேலையா இது?" என்று கேட்டுக் கொண்டே, முகத்தில் அப்பியிருந்த குழம்பை ராஜா துடைத்துக் கொண்டான். உடனே, "ஓ! எனக்குத்



ராஜா தட்டித் தடுமாறிக் கரை சேர்கிறுன்

தெரிந்துவிட்டது. நான் அந்த மந்திரப் புத்தகத்திலிருந்து படித்த மந்திரம் பலித்துவிட்டது. இனி நான் என்ன சொன்னாலும், சொன்னது சொன்னபடியே நடக்கும். நான் 'குழம்பு' என்றதும் குழம்பில் விழுந்துவிட்டோம். கொஞ்சம் பொறுங்கள். சரிப்படுத்திவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, சற்று யோசித்தான்.

அப்புறம், ''எல்லாரும் துப்புரவாகி, உலர்ந்து விடுவோம்'' என்று நிதானமாய்ச் சொன்னான். அப்படியே குழம்புக் கறை எல்லாம் மறைந்துபோய், ஈரமும் உலர்ந்து விட்டது.

''இனிப் பூதங்களைப் பார்ப்போம்'' என்றான். பூதங்களும் வந்து விட்டன. அவற்றின் உருவங்கள் மிகவும் கோரமா யிருந்தன. ராஜா, ராணி, மந்திரி எல்லாரும் கதி கலங்கிப் போய் விட்டார்கள். திக்குக்கு ஒருவராய் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினார்கள். கடைசியில் நல்ல வேளையாக மந்திரத்தின் நினைப்பு ராஜாவுக்கு வந்தது.

''நான் இனிமேல் மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். வாய் தவறினால் ஆபத்து'' என்று ராஜா தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பூதங்களோ வாயைப் பிளந்து கொண்டு பயங்கரமாய் உறுமுகின்றன. அவற்றின் வாயிலிருந்து 'குபு குபு' என்று நெருப்பு வருகிறது.

வாய் குளறிக் கொண்டே, ''எல்லாம் முன் போலாகுக! பூதங்கள் ஒழிக! இனிப் பூதங்களே இல்லை'' என்று ராஜா சொன்னான்.

அடுத்த விநாடியில், எல்லாம் முன் போல் ஆயின. ராஜாவும் ராணியும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்திருக்கிறார்கள். மந்திரம் பலித்துவிட்டது. ராஜா மந்திரவாதியாவதற்கு முன் இருந்தபடியே எல்லாம் ஆயின. ராஜா கற்றுக்கொண்ட மந்திரமும் மறைந்துபோய் விட்டது. அதுவும் நல்லதுதான். முன்பின் பழக்கமில்லா விட்டால், மந்திரம் எவ்வளவு சங்கடப் படுத்தி விடுகிறது. இனிமேல் பூதமும் இராது; பயமும் ஒழிந்தது.

''என்ன, இப்படி இலைக்கு முன்னாலே உட்கார்ந்து கொண்டு தூங்கி வழிகிறீர்கள்? சாப்பிட்டு விட்டு எழுந்திருங்கள். நமக்கு மந்திரவாதியே வேண்டாம். செப்படு வித்தைக்காரன் தான் வேண்டும். அவன்தான் பொல்லாங்கு இல்லாதபடி வேடிக்கை காட்டி, நம்மை மகிழ வைப்பான்'' என்று ராஜாவிடம் ராணி சொன்னாள்.

அப்படியே ஒருவனை வரவழைத்தார்கள். அப்போதுகூட ராஜாவின் கருமித்தனம் போகவில்லை. அந்த ஜாலக்காரனுக்கு ராஜா சம்பளந் தருவதில்லை. ஆனால், வேடிக்கை பார்க்க வருகிறவர்கள் எல்லாரும் ஆளுக்குக் கொஞ்சமாய்ச் சேர்த்து, ஏராளமாய் அவனுக்குப் பணம் கொடுத்து வந்தார்கள். அவனும் சந்தோஷமா யிருந்தான்; ராஜா, ராணி, ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமா யிருந்தார்கள்.

மீரா

சந்தன சோப்

★

ஆரோக்கியமும் அழகுமே வாழ்க்கையை இன்ப மயமாக்குவன. அந்த இரண்டையும் தருவதில், மீரா சோப் இணையற்று விளங்குகிறது. தினந்தோறும் மீரா சோப் தேய்த்து ஸ்நானம் செய்வோர் இதை நிச்சயமாய் அறிவார்கள்.

★

தயாரிப்பவர்கள் :—

மீரா கெமிக்கல் இண்டஸ்ட்டிரிஸ் கல்கத்தா

தென்னிந்தியாவிற்கு பூரண உரிமைபெற்ற ஏஜண்டுகள் :

டீ-லக்ஸ் டிரேடிங் கம்பெனி,

44, அல்லிமால் தெரு, திருச்சினுப்பள்ளி

தாய்மார்களே!

கண்ட மாவுகளைப் போட்டு குழந்தையின் குடலைக் கெடுக்காதீர்

குழந்தைக்குச் சரியான உணவு

தாய்ப்பால்தான்

உங்கள் பாலையே விருத்தி செய்து கொள்ளுங்கள்.

ப ய ஸ் ய ா

தாய்ப்பாலை விசேஷமாய் வளர்க்கும் திவ்ய ரஸாயனம்

விலை ரூ. 2—8—0 (பாக்கிங் & போஸ்டேஜ் வேறு)

தயாரிப்பவர்:
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு,
திருச்சினப்பள்ளி.

Distributors:
THE IDEAL AGENCIES,
M. M. STREET,
KARAIKUDI.

லக்ஷ்மி இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஹெட் ஆபீஸ்: லாகூர்

(1941-ஆம் ஸு ஸ்தாபிக்கப்பட்டது)

1941-ஆம் ஸு பலன்களின் விபரம்

பிரீமியம் வருமானம்	...	38,34,127
வட்டியும் இதர வருமானமும்	...	7,37,235
மொத்த வருமானம்	...	45,71,362
ஆயுள் நிதியில் சேர்த்த கூடுதல் தொகை	...	23,79,829
ஆயுள் நிதி	...	1,79,02,026
ஆஸ்திகள்	...	1,95,23,010
செலவு விகிதாசாரம்	...	24·69 சத விகிதம்

மூலதனத்தைப் போடுவதில் கைக் கொண்டுள்ள முக்கியமான கொள்கை:

பத்திரம் முதன்மையானது. பல இனங்களில் போடுவதன் மூலம் நஷ்ட அபாயம் குறைகிறது; சராசரி வருமானம் நிலையாயிருக்கிறது.

சென்னைக் கிளை ஆபீஸின் தற்போதைய விலாசம்:-

'டென்னிஸ் வில்லா' 3, பூந்துறை ரோடு,
ஈரோடு, S. I. Ry.

எஸ். வி. ஆர். பாபுலர் சைக்கிள்

S·V·R

POPULAR

MADE IN ENGLAND

ESTABLISHED 1936

மதிப்பிலும் உழைப்பிலும் உத்திரவாதமுள்ள சைக்கிள், இதைவிட சிறந்த சைக்கிள் வாங்குவது சிரமம். நல்ல பெறுமானமுள்ளது.

உயர்ந்த ரகம்

எல்லா பிரபல
வியாபாரிகளிடமும் கிடைக்கும்

★

எஸ். வி. ஆர். சைகிள் மார்ட்

தலைமை ஆபீஸ் :
காரைக்குடி

ஸென்ட்ரல் ஆபீஸ் :
2/22 பிராட்வே, மதராஸ்

TELE { PHONE: 2957
GRAMS: VEERAPPA CO.

பிராஞ்சுகள் :

பெரியகடை வீதி, மேலூர்

கீழராஜ வீதி, புதுக்கோட்டை

ஹெட் போஸ்டாபீஸ் எதிரில், கோயம்புத்தூர்

88829
சென்னை-600 0

புதிதாக வெளிவந்த

சக்தி மலர்கள்

	ரூ.	அ.
போரும் காதலும் .... (டால்ஸ்டாய் எழுதிய உலகப் பிரசித்தி பெற்ற நாவல்—பொ. திருகூடசுந்தரம் மொழிபெயர்ப்பு முதல் பாகம்.)	2	8
அகண்ட இந்தியா .... (கே. எம். முன்ஷி பாகிஸ்தான் கூடாது என்று விபரமாக எழுதிய இப்புத்தகத்தை கொடுமுடி ராஜகோபாலன் தமிழில் மொழிபெயர்த்தது.)	1	0
இன்பம் எது? .... (ராய. சொ. எழுதிய உயர்ந்த இலக்கியக் கட்டுரைகள்.)	1	0
மானிட ஜாதியின் சுதந்திரம் .... (ராபர்ட் இங்கர்ஸால் எழுதிய அறிவாராய்ச்சி நூல். வெ. சாமிநாத சர்மா தமிழ்ப்படுத்தியது.)	1	0
பிரயாண நினைவுகள் .... (ஏ. கே. செட்டியாரின் நான்காவது பிரயாண நூல். தமிழ் நாட்டு அனுபவங்களும் அடங்கியிருக்கிறது.)	0	12
இருளின் வலிமை .... (டால்ஸ்டாய் எழுதிய உயர்ந்த—உணர்ச்சியைக் கிளப்பக்கூடிய நாடகம். நா. வானமாமலை மொழிபெயர்ப்பு.)	1	0
படையெடுப்பு .... (டால்ஸ்டாய் கதைகள் மூன்றும் பாகம்—மொழிபெயர்ப்பு சுப. நாராயணன்.)	1	0

கிடைக்குமிடம் :—

சக்தி காரியாலயம்

மதுரை : : காரைக்குடி

மேற்கண்ட புத்தகங்களை வி. பி. பி. மூலம் பெற விரும்புபவர்கள் எங்கள் மதுரை காரியாலயத்திற்கே எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

எல்லா பெண்மணிகளும் லீலா சிட்னிஸை மெச்சுகின்றனர்



"பந்தன்" என்ற படத்தில் கதா நாயகியாக நடித்து தனது கோகில கானத்தால் சகலரின் மனதையும் கொள்ளைகொண்ட இவருக்கு அபார மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. சில பெண் மணிகள் இவருக்குச் சமமாகப் புகழ் பெற விரும்புகின்றனர்—ஆனால் எல்லா ஸ்திரீகளுமே இவரது எழிலையும், வனப்பையும் பெற விரும்புவர். முக் கியமாக இவரது மிருதுவான மாசு மறுவற்ற மேனி. இவ்வழகிய மேனி அப் பழுக்கற்றிருப்பதற்குக் காரணம் லக்ஸ் டாய்லெட் ஸோப்.

இதோ, லீலாவே தனது அழகின் இரகசியத்தைக் கூறுவதைக் கேளுங் கள். "நான் லக்ஸ் டாய்லெட் ஸோப் பின் நுரையை தாராளமாக உண் டாக்கி எனது முகத்தில் தடவிக் கொள்ளுகிறேன். பிறகு குளிர்ந்த ஜலத்தில் கழுவி விடுகிறேன். இந்த நுரை சுத்திகரிப்பதில் சிறந்தது. இது மாசு மறுவிற்குக் காரணமான தூம்பு, தூசிகளை சருமத் துவாரத்திலின்றும் அப்புறப் படுத்தி மேனியை பெத் தெனப் பட்டுப்போல் விட்டுச் செல் கிறது." வனப்புமிக்க லீலா சிட்னிஸ் தன் சருமத்தைப் பாதுகாக்க லக்ஸ் டாய்லெட் ஸோப் உபயோகிக்கிறார் எனில், உங்கள் சருமத்தையும் அழ காக வைத்திருக்க இதுதான் நிச்சயம் சிறந்தது.

10 ஸினிமா நக்ஷத்திரங்களில் 9 பேர் உபயோகிப்பது

லக்ஸ் டாய்லெட் ஸோப்

LTS. 53-50-85

LEVER BROTHERS (INDIA) LIMITED

கவனியுங்கள் !

காகிதம் !

யுத்தத்தால், காகிதப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. சகலவித பேப்பர்கள், அச்சு மைகள், ஸ்டேஷனரிகள் ஆகிய உங்கள் தேவைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பூர்த்தி செய்யும் ஸ்டோர்ஸ் இதோ இருக்கிறது. இன்றே பார்வையிடுங்கள்.

★

ஜெமினி பேப்பர் ஸ்டோர்ஸ்

கல்லுக்கட்டி :: காரைக்குடி

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited, Devakottah Road, Senjai, Karaikudi. Joint Editor : T. J. Ranganathan.